விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 17 வியாழக்கிழமை (30.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101

போர்க்குற்றங்கள் சுமத்தப்பட்டாலும்

படையினரில் ஒருவர் கூட தண்டிக்கப்படவிடேன்!

ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(குருநாகல்)

வன்னியில் நடந்த இறுதி யுத்தத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு படையினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் பிரேரணைகளுக்காக நாட்டின் எந்தவொரு படை வீரரையும் குற்றவாளிக்கூண்டில் நிறுத்த தான் தயாரில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். (23-ம் பக்.)

கைக்குண்டுகள் இரண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டினை துப்புரவு செய்து கொண்டிருந்த போது அங்கிருந்து இரண்டு கைக்குண்டு இன 23

நீரந்தர நியமனம் வழங்கப்படும்

தொண்டர் ஆசிரியர்கள் வட. ஆளுநருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான செயற்பாடுகள் நடைபெற்று கொண்டிருப்பதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே. குறித்த நியமனம் எந்த ஆண் 23

ஐக்கிய இலங்கை அதிகாரப் பகிர்வு

அனைவரும் இணக்கம் - ரணில்

(கொழும்பு)

நாட்டைப் பிரிக்காமல் அதிகாரத்தைப் பகிர்வது குறித்து அனைத்துக் கட்சிகள் மற்றும் அனைத்துத் தரப்பினரிடம் இருந்தும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து 23

குண்டுவெடிப்பு தேவதாசனுக்கு 20 ஆண்டு சிறை

(கொழும்பு)

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு உடந்தையாக இருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட கனகசபை தேவ 23

யாழ்.மாவட்ட எம்.பி தெரிவு 7 ஆக உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் தெரிவு எண்ணிக்கை 7 ஆக அதிகரிப்பு 24

சிக்கியது வெள்ளை வான்

(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயாரை கடத்திச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட வெள்ளை வான் 23

உதாசீனம் வேண்டாம்

(பனிக்கன்குளம்)

காணாமல்போனோர் விடயத்தை உதாசீனம் செய்யாது தமக்கு உரிய தீர்வை பெற்றுத் 23

நிமோனியாக் காய்ச்சல் 3 1/2 வயது குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 3 1/2 வயது ஆண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இதில் யாழ். நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறையை சேர்ந்த ரவிதாஸ் றியான் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த 25ஆம் திகதி காய்ச்சலால் 23

அமெரிக்க தளபதி ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் பசுபிக் சிறப்பு நடவடிக்கை கட்டளைப் பணியகத்தின் தளபதி மேஜர் ஜெனரல் பிரயன் பென்டன், இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு முக்கிய சந்திப்புகளை நடத்தியுள்ளார்.

பசுபிக் கட்டளைப் பீட பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க சிறப்புப் படைகளுக்குப் பொறுப்பானவரான மேஜர் ஜெனரல் பிரயன் பென்டன், தனது இலங்கைப் பயணத்தில் நேற்று பிரதமர் ரணில் விக்கிரம 23

இராணுவ தலைமை அதிகாரியாக மேஜர் மகேஸ் பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் 50-வது தலைமை அதிகாரியாக, மேஜர் ஜெனரல் மகேஸ் 24

அச்சுவேலி முக்கொலை; தீர்ப்பு இன்று

"நான் செய்தது மன்னிக்க முடியாத குற்றம்" நடந்த சம்பவத்தை விபரித்த எதிரி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி முக்கொலை வழக்கின் தொடர் விசாரணை மூன்றாவது நாளாக நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்றது. நேற்றைய தினம் வழக்கின் ஆரம்பத்தில் எதிரியின் பிள்ளையை எதிரியிடம் காண்பிக்கப்பட்டது.

அப்பா செத்திட்டார்

எதிரி தனது பிரதான கோரிக்கை 04

நிலமீட்புக்கு விரைவில் தீர்வு!

(கேப்பாப்பிலவு)

நிலமீட்பு போராட்டங்களுக்கு மிக விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று மீள் குடியேற்றத்துறை 23

பிரகீத்தின் மனைவிக்கு துணிச்சல் பெண் விருது

23

பின்னடைவில் பொருளாதாரம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் குறித்த முக்கிய தீர்மானங்களை பொருளாதார குழுவே மேற்கொள்ளும் நிலையில் அக்குழுவின் தீர்மானங்கள் சகலதும் நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற 24

பாராமுகமாக நல்லாட்சி

கேப்பாப்பிலவு நிலமீட்பு போராட்டம் தொடர்வு!

(பனிக்கன்குளம்)

யுத்தம் முடிவுக்கு வந்து எட்டு வருடங்கள் நிறைவடைகின்றபோதிலும் அன்று அனுபவித்த துன்பங்கள் 04

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மரண அறிவித்தல்கள்

புவனேஸ்வரி திருநாவுக்கரசு

கரவெட்டியை பிறப்பிடமாகவும், பருத்தித்துறை ஐயனார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட **புவனேஸ்வரி திருநாவுக்கரசு** (ஓய்வு பெற்ற புள்ளிவிபர ஆய்வாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) அவர்கள் 28.03.2017 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு வள்ளியம்மை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற முத்தையா தங்கக்குட்டி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (உதவித்தேர்தல் ஆணையாளர், புத்தளம்) அவர்களின் அன்பு மனைவியும் பார்த்தீபன் (வீதி அபிவிருத்தி திணைக்களம், பருத்தித்துறை) கார்த்திகா (மாநகரசபை, கொழும்பு), பகீரதன் (உதவிக்கணக்காய்வு முகாமையாளர் மகாராஜா நிறுவனம், கொழும்பு) கார்த்திகேயன் (கலாசார உத்தியோகத்தர், கரைச்சி பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிஷாந்தி (பிரதேச செயலகம் பருத்தித்துறை), ரமணன் (விரிவுரையாளர், மென்பொருள் திட்டமிடலாளர், கொழும்பு), ரூபினி (லண்டன் கொலிஜ் ஒவ் மாக்கெற்றிங் விரிவுரையாளர், கொழும்பு), தமயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் கவிந்தன், சாகித்யா, அக்ஷரன், இலக்கியா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பேராசிரியர் சிவத்தம்பி, யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, சோமஸ்கந்தராஜா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2017) காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

(C - 7954)

திருமதி மயில்வாகனம் சிவபாக்கியம்

மத்தொனி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (29.03.2017) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மயில்வாகனத்தின் துணைவியாரும் ஜெகநாதன் (உரிமையாளர் - வானகம் போன் சிற்றி யாழ்ப்பாணம், தலைவர், கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி), மாலதி, சுகநாதன் (சுவிஸ்), பத்மநாதன் (போதனா ஆசிரியர், யாழ்ப்பாண கல்லூரி - விவசாய நிறுவனம்) ஆகியோரின் தாயாரும், சாந்தினி, தவராஜா, திலகவதி, லதா ஆகியோரின் மாமியாரும் சஞ்சீவன், அர்ச்சனா, கானகன், மகிழ்ராஜன், கார்த்திகா, கோகுலதாஸ், ஐங்கரன், திவ்வியா, மௌலி, மாதுளன், நிசாந்தன், பானு, கௌதம் ஆகியோரின் பேர்த்தியாரும் எழிலரசன், பேரரசன், ஜன்சிகா ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கரவெட்டி மேற்கில் அவரது இல்லத்தில் இன்று (30.03.2017) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:- 077 127 7064 (C-7960) குடும்பத்தினர்

8 இலட்சம் பேருக்கு உளவியல் பாதிப்பு

நாட்டில் சுமார் எட்டு இலட்சம் பேர் மன அழுத்தம் காரணமாக உளவியல் பாதிப்புக் களை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப் படுகிறது. கொதலாவல பாதுகாப்பு கல்லூரி யின் உளவியல் நோய் தொடர்பான நிபுணத் துவ மருத்துவரும் விரிவுரையாளருமான நீல் பெர்னாண்டோ இத்தனைத் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும் எண்ணிக்கையிலான வர்கள் எவ்வித சிகிச்சைகளும் பெற்றுக் கொள்வதில்லை என குறிப்பிட்டுள்ள அவர், இதனால் தற்கொலை, இருதய நோய், புற்று நோய உளளிட்ட பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படக்கூடு மென தெரிவித்துள்ளார். 2020ஆம் ஆண்டள வில் இந்த நோய்கள் ஏற்படக்கூடிய பிரதான காரணிகளில் ஒன்றாக மன அழுத்தம் மாற்ற மடையக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார.

ஆபிரகாம் லிங்கன், எட்வின் ஒல்வரின், பீதோவன் மற்றும் இளவரசி டயானா போன்ற வர்கள் தங்களுக்கு மன அழுத்தம் காணப் பட்டது என்பதனை பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருந்தனர் என அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

மன அழுத்தம் தொடர்பில் உதாசீன மான போக்கைக் கடைப்பிடிக்காது சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசிய மானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(செ-11)

வாள்களுடன் நடமாடிய கும்பல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக் கிளில் கையில் வாள்களுடன் நட மாடிய கும்பல் ஒன் றினால் நேற்றைய தினம் தட்டாதெரு மற்றும் கலட்டி பகுதி களில் பதற்றநிலை காணப்பட்டிருந்தது.

எனினும் போக்கு வரத்து பொலிஸா ரின் பிரசன்னம் காணப் பட்டதால் அசம் பாவிதங் கள் எவையும் இடம் பெறவில்லை.

நேற்றைய தினம இரவு ஏழு மணிய ளவில் கே.கே.எஸ் வீதி தட்டாதெரு சந்தி யில் மூன்று மோட் டார் சைக்கிள்களில் ஆறு பேர் கொண்ட குழு நடமாடியுள்ளது.

குறித்த குழு தட்டா தெரு சந்திக்கு அரு காமையில் உள்ள ஒழுங்கை ஒன்றில் வாள்களுடன் சிறிது நேரம் நின்றுவிட்டு பின்னர் கலட்டி பகுதியை நோக்கி மோட்டார் சைக்கி ளில் சென்றுள்ளது. இவர்கள் இவ்வாறு அப்பகுதியால் வாள் களுடன் நடமாடு வதை கண்டவர்கள் அப்பகுதியின் ஊடாக போக் குவரத் தில் ஈடுபடுவதனையும் சிறிது நேரம் தவிர்த் திருந்தனர். சட்ட விரோத குற்றச்செயல் களில் ஈடுபடுபவர் கள் மீதான கைது கள் தொடருகின்ற நிலையிலும் சமூக விரோத கும்பல்கள் எந்தவித பயமும் இன்றி வாள்களு டன் நடமாடி வரு வது குறித்து பொது மக்கள் அச்ச மடைந்துள்ளனர்.

சில மாதங்களு க்கு முன்னர் கூட தட்டாதெரு சந்திக்கு அருகாமையில்உள்ள மரக்காலை ஒன்றில் வைத்து இளைஞர் கள் இருவர் வாளால் வெட்டப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பாடசாலை மாணவர்கள் உட் பட அப்பகுதியை சேர ந்தவர்கள் இருவரும கைது செயயப்பட்டிரந தனர என்பது குறிப் பிடத்தக்கது. (செ-4)

தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

புலமைச்சிட்டு

நாவலர் வெளியீடு

- 1ஆவது பரீட்சை - 02.04.2017
- வெளிமாணவர்களும் தோற்றலாம்.
- பரீட்சை விரும்பிய 6 நேரங்களில்.
- பரீட்சை நடைபெறும் இடம்:-

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

- வினாத்தாள் தேவையானோர் 0774598440 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்பு கொள்ளவும்

(C-7957)

திருத்தம்

விண்ணப்ப முடிவுத் திகதியினை நீடிப்புச் செய்தல்

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு

வடக்கு மாகாணம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட விளம்பரத்தின் முடிவுத் திகதியானது 2017.04.21ஆம் திகதிவரை நீடிப்புச் செய் யப்பட்டுள்ளது. ஏற்கெனவே கோரப்பட்ட விளம்பரத்தின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படுவதுடன் குறித்த தகைமை களையுடைய விண்ணப்பதாரிகள் மட்டும் முடிவுத் திகதிக்கு முன் னதாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ரூ. வரதலிங்கம்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

(C-7953)

யாழ் நகரில் இயங்கும்
தங்க ஆபரண காட்சியறைக்கு

வேலையாட்கள் தேவை

இல. 187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள

நர்மதா

கோல்ட் சென்ரருக்கு

- விற்பனை முகாமையாளர்
- விற்பனையாளர்
- நிர்வாக உதவியாளர்
- சிற்றூழியர்

10 பேர் தேவை

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

ஆர்வமுடையோர் எதிர்வரும் திங்கட்கிழமை 03.04.2017 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு தங்களுடைய சுயவிபரக் கோவையுடன் கிராமசேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட நற்சான்றிதழுடன் நேரில் சமுகம் தரவும்.

தொடர்புகளுக்கு: 075 999 1769

முகாமையாளர்
நர்மதா கோல்ட் சென்ரர்
இல. 187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

(8450)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்கவேண்டிய நிலையில் அரசு

மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

400 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை இவ்வருடத்தில் ஈட்ட வேண்டியுள்ளதால் அம் பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் அரசிற்கு ஏற்பட்டுள்ள தாக மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.



இதேவேளை நல்லாட்சி அர சாங்கம் ஆட்சிக்கு வந்த பின் னர் நான்காயிரத்து 300 மில் லியன் ரூபா நிதி வீண் விரய மாக்கப்பட்டுள்ளது. அந்நிதி விரயமாக்கப்பட்டிருக்காவிட் டால் அம்பாந்தோட்டைதுறை முகத்தை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக் காது என்பதை மத்திய வங்கியின் ஆளுநருக்கு கூறிக்கொள்ள விரும்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த் தன தெரிவித்திருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

அரசியலமைப்பு விளக்க கூட்டத்தில் குழப்பம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பாக மக்களை அறிவு றுத்தும் கூட்டத்துக்கு வருகை தந்தவர்கள் கட்டுக்கடங்காத முறையில் செயற்பட்டதால் பொலிஸார் தலையிட்டு அவர் களை அப்புறப்படுத்திய சம்ப வம் நேற்று முன்தினம் காலியில் இடம்பெற்றுள்ளது.

காலிவிளையாட்டு மைதா னத்தில் பிரஜைகள் ஒன்றி யம் எனும் அமைப்பினால் இக்கூட்டம் ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது.

இதில் பிரதான பேச்சாள ராக கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன கலந்து கொண் டார். அத்துடன், புதிய அரசி யலமைப்பு சபையின் தலை வர் லால் விஜேநாயக்கவும் இதில் கலந்துகொண்டார்.

பிரதான பேச்சாளரின் உரை நிறைவடைந்து, பொது மக்களின் கருத்துக்கு நேரம் ஒதுக்கப்பட்ட போது சிலர் கூட்டத்தைக் குழப்ப ஆரம் பித்துள்ளனர். பின்னர் பொலிஸா ரின் உதவியினால் அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். (இ-3)

உண்ணாவிரதத்தை கைவிடுமாறு விடுத்த கோரிக்கையை ஏற்க விமல் எம்.பி.மறுப்பு

தனக்கு பிணை வழங் காமையினால் சிறைச்சா லையில் உண்ணாவிரதத் தில் ஈடுபட்டுள்ள பாராளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவிடம், உண்ணா விரதத்தை கைவிடுமாறு சிறைச்சாலை அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளை அவர் நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்தும் அவர் உண் ணாவிரதம் இருப்பதால் அவ ரது உடல்நலம் பாதிப்படை ந்து செல்வதனாலேயே இவ் வாறு வேண்டுகோள் விடுக் கப்பட்டதாகவும் சிறைச்சாலை திணைக்களம் தெரிவித் துள்ளது.

சிறைச்சாலையில் உண் ணாவிரதம் இருப்பதனால், தங்களது பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது என சிறை ச்சாலை அதிகாரிகள் அவ ருக்கு தெளிவுபடுத்திய பின் னரும் வேண்டுகோளை மறு த்துள்ளதாக சிறைச்சாலை வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறைச்சாலை வைத்தி யசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள அவரின் உடல் நலத்துக்கு இதுவரையில் எந்தவிதமான பாதிப்பும் இல் லையெனவும் சிறைச்சாலை வைத்தியசாலை அறிவித் துள்ளது. (இ-3)

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் அரசியல் யாப்பை மீறும் செயல்-பீரிஸ்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறை முக ஒப்பந்தம் மூலமாக நாட்டின் அரசியல் யாப்பை மீறும் நடவடிக்கைகளில் தற்போதைய அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய சொத் துக்களை வெளிநாட்டிற்கு விற்பனை செய்யும் இந்த செயற்பாடுகளுக்கு ஜனாதி பதி அனுமதி வழங்கியுள் ளாரா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் பொரு ளாதார ஆய்வு பிரிவு நேற்று முன்தினம் நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்பில் பங்கேற்று கரு த்து வெளியிட முன்னாள் அமை ச்சர் நாட்டின் இதுவொரு மிகப் பெரிய பகற்கொள்ளை எனவும் குற்றம் சாட்டினார்.

"சீனாவுடனான இந்த துறைமுக ஒப்பந்தம் அத்தியா வசியமானது என குறிப்பி டுகின்றார்கள். அதனூடாக இந்த நாட்டின் தேசிய சொத் துக்களை விற்பனை செய்வ தற்கே எதிர்ப்பார்க்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ பாதுகா த்து வைத்திருந்த இந்த நாட் டின் சொத்துக்களை வெளிநாட் டிற்கு விற்பனை செய்கின்ற னர். அந்த விற்பனை மிகப் பெரிய கொள்ளையாகும். இதனை தொடர்ந்து முன்னெடுத் துச் செல்ல முயற்சிக்கின் றார்கள். அதனூடாக நாட் டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டு மென்ற நோக்கிலேயே இந்த அர சாங்கம் செயற்படுகின்றது.

இந்த கொள்கையை ஜனா திபதி மைத்திரிபால சிறி சேன அனுமதிக்கின்றாரா? என கேட்க விரும்புகின் றோம். எனினும் இவ்வா றான ஒரு இலாபமற்ற ஒப்பந் தத்தை மேற்கொள்ள எந்த வொரு சந்தர்ப்பத்திலும் இத ற்கு முன்னர் தீர்மானித்த தில்லை. இது இலங்கையின் அரசியல் யாப்பினை மீறும் ஒரு செயலாகும் என அவர் மேலும் தெரிவித் தார். (இ-3)

நல்லாட்சி அரசாங்கம் பணத்தினை வீணடித்தமையால் அம்பாந்தோட்டை துறைமுகம் விற்கப்படுகிறது-பந்துல



நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நான்காயிரத்து 300 மில்லி யன் ரூபா நிதி விரயமாக்கப் பட்டுள்ளது. அந்நிதி வீண் விரயமாக்கப்படாதிருந்தால் அம்பாந்தோட்டை துறைமு கத்தை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக் காது என நாடாளுமன்ற உறுப் பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கூட்டு எதிரணியினர் ஏற் பாடு செய்திருந்த ஊடகவிய லாளர் சந்திப்பு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள ஸ்ரீவஜி ராஷர்ம பௌத்த நிலையத் தில் நடைபெற்றபோதே இத னைத் தெரிவித்தார்.

அத்துடன் வீண் விரய மாக்கப்பட்ட குறித்த தொகைப் பணத்தினை உரிய நடைமு றைகளுடன் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத் தியிருந்தால் இந்த இழப்பு ஏற்பட்டிருக்காது. எனவே இதற்கு இந்த நல்லாட்சி அர சாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என பந்துல குண வர்த்தன மேலும் தெரிவித் தார்.

அண்மையில் 400 மில் லியன் அமெரிக்க டொலர் நிதியினை இவ்வருடத்தில் ஈட்ட வேண்டியுள்ளதால் அம்பாந்தோட்டை துறைமு கத்தை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட் டுள்ளதாக மத்திய வங்கி யின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்த கரு த்திற்கு நாடாளுமன்ற உறுப் பினர் பந்துல குணவர்த்தன இவ்வாறு பதிலளித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

முப்பது வருட பிணைகளை வெளியிட அர்ஜுன மகேந்திரனே தீர்மானித்தார்

முப்பது வருட பிணைகளை வெளியிட மத்திய வங்கியின் நாணய சபை தீர்மானிக்க வில்லையெனவும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர் ஜுன மகேந்திரனே தீர்மா னித்து, அதற்கான பணிப்பு ரையை விடுத்தார் என. பிரதி ஆளுநர் பி.சமரசிறி தெரிவித் தார். பிணைமுறி தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதி பதி ஆணைக்குழுவில் நேற்று சாட்சியமளிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். மேலும், இவ்விட யம் தொடர்பில் தான் கோபம் கொண்டதாகவும் அவர் தெரி வித்தார். ஏன் கோபமடைந் தீர்கள் என நீதியரசர் பிரசன்ன ஜயவர்த்தன கேட்டபோது, இது பற்றித் தனக்கு அறிவிக்க வில்லை எனவும் வேறு இர ண்டு பிரதி ஆளுநர்களுக்கு மட்டுமே இது தெரிவிக்கப் பட்டதென்றும் அதனால் தான் கோபமுற்றதாகவும் சமரசிறி தெரிவித்தார். (இ-3)

சபாநாயகருக்கு கௌரவ நாமம்

சபாநாயகர் கரு ஜெய சூரியவுக்கு ஸ்ரீலங்கா ராம ஞ்ஞ மஹா நிக்காயாவினால் வழங்கப்படும் விஷிவ கீர்த்தி ஸ்ரீலங்கா ஜனரஞ்ஞன கௌரவ நாமம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வைப வம்நேற்று முன்தினம்மாலை ஸ்ரீலங்கா ராமஞ்ஞ நிக் காயா மஹா சங்க தலைமையகத் தில் நடைபெற்றது.

அதிசங்கைக்குரிய நாபான பேமசிறிநாயக்க தேரர் சபா நாய கர் கரு ஜெயசூரியவுக்கு உரி மைப்பத்திரத்தை வழங்கினார்.

இந் நிகழ்வில் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உள்ளிட்ட பல மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (இ-3)

அந்தச் செய்தியில் உண்மையில்லை மகிந்த மறுப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத் தின் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய மீன்பிடி படகுகளை விடுவிக்க உள்ளதாக கூறப் படும் செய்தியில் உண்மை யில்லை என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவற்றை விடுவிப்பதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு இது வரை எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் கடற்பரப்பில் நுழைந்த மீன்பிடி படகுகள் கைப்பற்றப்பட்டதுடன், இது வரை சுமார் 130 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அமைச் சர் தெரிவித்தார்.

இந்தப் படகுகளை விடு விக்குமாறு வலியுறுத்தக் கூறி இந்திய மத்திய அரசிற்கு தமிழக அரசியல்வாதிகளால் அடிக்கடி கடிதம் எழுதப்ப டுகின்ற போதிலும், இல ங்கை அரசாங்கம் அவ ற்றை விடுவிப்பது தொடர்பில் எதுவித தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என் றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் இல ங்கை கடற்பரப்பில் அத்துமீ றும் மீன்பிடி படகுகளை கைப் பற்றும் நடவடிக்கை தொட ர்ந்தும் இடம்பெறும் என்று அமைச்சர் தெரிவித்தார். (இ-3)

வாகன விபத்து குடும்பஸ்தர் காயம்

வீதியில் பயணித்த துவிச்சக்கர வண்டி மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பஸ்த்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில்யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.45 மணியளவில் இணுவில் பிள்ளையார் கோவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் இணுவிலை சேர்ந்த குமரேசா கருணாநிதி (வயது 57) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-11)

மரண தண்டனை ஐவருக்கு விதிப்பு

பாணந்துறை - அலுபோமுல்ல பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஐவருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

14 வருடங்களாக குறித்த வழக்கு விசாரணை இடம்பெற்றுவந்த நிலையில், குறித்த வழக்கின் தீர்ப்பு நேற்று பாணந்துறை மேல் நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில், அதில் ஒருவர் உயிரிழந்த வழக்கு தொடர்பிலேயே குறித்த தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செ-11)

காசநோய்க்கு சிகிச்சை பெற மறுத்த நபர் கைது

(யாழ்ப்பாணம்)

காச நோய் இனங்காணப்பட்ட நபர் ஒருவர் ஒழுங்கான முறையில் சிகிச்சை பெறமறுத்ததை அடுத்து குறித்த நபர் நீதிமன்றில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் குறித்த நோய் குணமடையும் வரை வைத்தியசாலை விடுதியில் தங்கி இருந்து சிகிச்சை பெறுமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.எம் றியால் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை சின்னமடு பிரதேசத்தில் வசிக்கும் 56 வயது டைய நபர் ஒருவர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் காசநோயின் தாக்கத்துக்குள்ளாகியிருப்பதாக இனங்காணப்பட்டிருந்தார்.

அவர் கடந்த இரண்டு மாதங்களாக சிகிச்சை பெறுவதற்கு வருவதை நிறுத்திக் கொண்டுள்ளார். அப்பகுதி பொதுச்சுகாதார பரிசோதகர்களால் சிகிச்சை பெறுமாறு பல தடவை அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதும் அவர் அதை கண்டு கொள்ளவில்லை.

காசநோய் இனங்காணப்பட்ட நபர் ஒருவர் கட்டாயமாக 6 மாதங்கள் தொடர்ச்சியாக சிகிச்சை பெற வேண்டும்என்ற வகையில் அவரை சிகிச்சை பெறச்செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அவர் அதை மறுத்து வந்த காரணத்தால் பொதுச்சுகாதார அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்களால் குறித்த நபருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முன் தினம் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த நபரை உடனடியாக கைது செய்து மன்றில் ஆஜராக்குமாறு நீதவான் நேற்று முன்தினம் ஊற்காவற்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

நேற்றைய தினம் குறித்த வழக்கு மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த நபர் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டிருக்கவில்லை.

ஆனால் வேறொரு வழக்குக்காக நேற்றைய தினம் நீதிமன்றுக்கு வந்திருந்த வேளை அந்நபரை உடனடியாக கைது செய்து பொலிஸார் மன்றில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது அந்நபரை எச்சரிக்கை செய்த நீதவான், நோய் குணமடையும் வரை கோப்பாய் காச நோய் சிகிச்சைப்பிரிவு விடுதியில் தங்கி நின்று சிகிச்சை பெறவேண்டும் என உத்தரவிட்டதுடன்,

அங்கிருந்து தப்பிச்சென்றால் நீதிமன்றை அவமதித்த குற்றச் சாட்டுக்குள்ளாவீர் எனவும் உத்தரவில் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் குறித்த நபர் நீதிமன்றில் இருந்தே நோயாளர் காவு வண்டி மூலம் கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-9)

சுற்றுலாத் துறையில் வேலை வாய்ப்பு பெறல்

விசேட கலந்துரையாடல் நாளை

வடக்கிலுள்ள இளைஞர் - யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி கொடுக்கும் வகையில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துறை தொடர்பிலான விசேட கருத்தரங்கு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டலில் நடத்தப்படவுள்ளது.

முன்னணி ஹோட்டல் துறை விற்பன்னர்களின் பங்கேற்புடன் சிகரம் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி விசேட கருத்தரங்கில், சுற்றுலாத்துறையில் காணப்படும் வேலைவாய்ப்புக்களை எவ்வாறு இளைஞர்கள் பயன்படுத்தி முன்னேற்றமடைய முடியும் என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்படும்.

இந் நிகழ்வில் யாழின் முன்னணி விடுதிகளில் சிறப்பாக பணியாற்றி வரும் பயிற்சி பெற்ற 30 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படவுள்ளது. (செ-11)

கேப்பாப்பிலவு ...

இன்றும் தொடர்வதாக முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கேப்பாபிலவில் இராணுவத்தின் வசமுள்ள தமது பூர்வீக நிலத்தை விடுவிக்குமாறு வலியுறுத்தி போராட்டத்தை முன்னெடுத்துள்ள கேப்பாபிலவு மக்கள், நல்லாட்சி அரசாங்கத்திடம் தொடர்ந்தும் மன்றாடிக்கொண்டிருக்க போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பிலவுக்குடியிருப்பு, சீனியாமோட்டை, சூரிபுரம் உள்ளிட்ட சொந்த நிலத்தை தொடர் போராட்டம் மூலம் அப்பகுதி மக்கள் பெற்றுக்கொண்டதை அடுத்து தமது பூர்வீக காணிகளை மீட்பதற்கான போராட்டத்தை கேப்பாபிலவு மக்களும் ஆரம்பித்திருந்தனர்.

29 ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தை முன்னெடுத்துள்ள கேப்பாபிலவு மக்கள், தமது தாய் நிலத்தை மாத்திரமே கேட்பதாக குறிப்பிடுகின்றனர்.

அரசாங்கத்தின் சொத்துக்களை தாம் கேட்கவில்லை என தெரிவிக்கும் மக்கள் தொடர்ச்சியாக தாம் அரசாங்கத்திடம் பூர்வீக காணிக்காக மன்றாடப் போவதில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

காணிக்குள் கால் பதிக்கும் வரை தாம் போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனவும் கேப்பாப்பிலவு மக்கள் உறுதிப்படத் தெரிவித்துள்ளனர். (செ-28)

"நான் செய்தது ...

யாக

தனது மகனை காட்டுமாறு நீதிபதியிடம் கோரியிருந்தார். அதற்கமைய மனிதாபிமான அடிப்படையில் அவருடைய மகனை அவர் கண் முன் காண்பிக்குமாறு எதிரியின் மனைவிக்கு அறிவித்ததுக்கு அமைய நேற்றைய தினம் எதிரியின் மகனை அவர் கண்முன் காண்பித்தனர்.

குறித்த மகனிடம் எதிரிக்கூண்டில் நிற்பவர் யார் என நீதிபதி கேட்டபோது யாரென்று தெரியாது என கூறினான். பின்னர் உனது அப்பா எங்கே என கேட்ட போது அவர் செத்திட்டார் என தெரிவித்தான்.

பின்னர் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில் தந்தை யார் என தெரியாது குறித்த சிறுவன் எதிரிக்கூண்டில் நிற்கும் தன்து தந்தையுடன் சைகை மூலம் கதைத்துக் கொண்டிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

சாட்சிகள் வாளை அடையாளம் காட்டினர்.

குறித்த கொலை சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக தெரிவித்து கைப்பற்றப்பட்ட வாள் அடங்கிய சான்றுப் பொருட்கள் அரச பகுப்பாய்வு திணைக்களத்தில் இருந்து நேற்றைய தினம் மன்றுக்கு எடுத்துவரப்பட்டிருந்தது. குறித்த சான்றுப்பொருளை அடையாளம் காட்டுவதற்கு 4 ஆம் சாட்சியான தர்மிகா 5 ஆம் சாட்சியான யசோதரன் ஆகியோர் மீண்டும் மன்றுக்கு அழைக்கப்பட்டனர். குறித்த சாட்சிகள் இருவரும் குறித்த வாளை அடையாளம் காட்டியிருந்தனர். இரத்தத்தில் மூழ்கியபடி முனாங்கிக்கொண்டு இருந்தார்கள்.

10 ஆம் சாட்சியான அச்சுவேலி பொலிஸ் பரிசோதகர் ஜெயசிங்க சாட்சியமளிக்கையில்,

கடந்த 2015.05.04 அன்று நாம் இரவு கடமையில் ஈடுபட்டிருந்த போது அச்சுவேலி கதிரிப்பாய் பகுதியில் ஒருவர் இறந்துள்ளதாக அதிகாலை 2 மணியளவில் எனக்கு தொலைபேசியில் அழைப்பு வந்தது. சம்பவ இடத்துக்கு நான் விரைந்த போது, வீட்டின் விறாந்தையில் இரத்தம் சூழ்ந்து உடலில் இரத்தம் வெளியேறிய நிலையில் பெண் ஒருவர் விழுந்து கிடந்தார். வீட்டின் பின்பக்க அறையில் அனுங்கல் சத்தம் கேட்டது. அங்கு போய் பார்த்த போது ஆண் பெண் இருவர் இரத்தத்தில் மூழ்கியபடி இருந்தார்கள். அந்த அறை முழுவதும் இரத்தம் தேங்கி இருந்தது. அவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

அடுத்த அறைக்குள் சென்ற போது ஒரு மெத்தை இருந்தது. அதில் ஏறத்தாழ 2 வயது நிரம்பிய ஒரு குழந்தை எந்தவித சலனமும் இன்றி உறங்கிக்கொண்டு இருந்தது. அக் குழந்தையை அணைத்து தூக்கி தடவினேன். அப்போதும் அக் குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது. காயம் ஏதும் இருக்கிறதா என பார்த்தேன். அவ்வாறு எதுவும் இருக்கவில்லை. அக் குழந்தையையும் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் வைத்தியசாலைக்கு சென்றேன். அப்போது 3 பேர் இறந்துவிட்டதாக வைத்தியர் தெரிவித்தார். அதனை தொடர்ந்து கொலை சம்பவம் தொடர்பில் எனது புலன் விசாரணைகளை ஆரம்பித்தேன்.

அயலவரின் வாக்கு மூலம் மற்றும் வேறு பல விசாரணைகள் இரகசிய தகவல்கள் மூலமும் சந்தேகம் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் என பொ. தனஞ்சயன் என்ப வரை 2015.05.04 அன்று 5.30 மணியளவில் கோப்பாய் பகுதியில் வைத்து கைது செய தோம். எதிரியின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் அவர் சம்பவத்தன்று பயன்படுத்திய முச்சக்கர வண்டி, கத்தி, மற்றும் அவருடைய உடைகள் என்பவற்றை கைப்பற்றிக்கொண்டோம். குறித்த சான்றுப்பொருட்கள் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டன என சாட்சியமளித்தார். அத்துடன் 13 ஆம் 16 ஆம்பொலிஸ் சாட்சிகள் விசாரணை தொடர்பில் சாட்சியமளித்தனர்

கொடூர வெட்டுக்காயங்கள்

15 ஆம்சாட்சியான யாழ்போதனா வைத்தியசாலையின் உதவி சட்ட வைத்திய அதிகாரி கந்தையா ரட்ணசிங்கம் சாட்சியமளிக்கையில்

த. தர்மிகா என்பவரை பரிசோதனை செய்து சட்டவைத்திய அறிக்கை தயாரித்தேன். தான் கணவனால் வெட்டப்பட்டதாக தெரிவித்தார். அவரது உடலில் 15 வெட்டுக் காயங்கள் இருந்தது. அதில் 8 கொடூரமான காயங்கள் இருந்தது என சாட்சியமளித்தார்.

7 ஆம் சாட்சியான சட்டவைத்தி அதிகாரி சின்னையா சிவரூபன் சாட்சியமளிக்கையில்

அருள்நாயகி, சுபாங்கன், மதுசா ஆகியோரின் மரணப்பரிசோதனை மேற்கொண்டிருந்தேன். அதில்அருள் நாயகிக்கு கழுத்து மற்றும் தலை உச்சிப்குதியில் மண்டையோட்டு எலும்பு வரை வெட்டப்பட்ட காயங்கள் உட்பட 8 வெட்டு காயங்கள் காணப்பட்டது. யசோதரன் என்பவருக்கு கழுத்து மற்றும் நெஞ்சுப் பகுதி உட்பட 8 வெட்டுக்காயங்கள் காணப்பட்டது. மதுசா என்பவருக்கு கழுத்து மற்றும் நெத்தி பகுதி உட்பட 8 வெட்டுக்காயங்கள் காணப்பட்டது. இவர்கள் மூவருடைய இறப்பும், மரணத்தை ஏற்படுத்தக் கூடிய கொடூரமான வெட்டுக்காயத்தில் இருந்து வெளியேறிய இரத்தத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக இடம்பெற்றுள்ளது. யசோதரன் என்பவரை பரிசோதித்த போது அவருக்கு 8 காயங்களும் அதில் 3 காயங்கள் கொடூரமானதாக காணப்பட்டது.

எதிரியை பிரிசோதித்த போது அவருக்கு 6 புதுக்காயங்களும் 1 பழைய காயமும் இருந்தது அவை உராய்வுக்காயங்களாக இருந்தன. எதிரி உள ரீதியான நலமுடன் இருந்தார் என சாட்சியமளித்தார்.

4 சிவில் சாட்சியங்களும், 5 உத்தியோகபூர்வ சாட்சியங்களும் 2 நிபுணத்துவ சாட்சியங்களுமாக 11 சாட்சிகளின் சாட்சியப்பதிவு இடம் பெற்று அரச தரப்பு சாட்சியப்பதிவு அனைத்தும் நிறைவு செய்யப்பட்டது.

வாளால் தாறுமாறாக விசுக்கினேன்

எதிரி பொ. தனஞ்சயன் சாட்சியமளிக்கையில்

எனக்கு அம்மா அப்பா யாரும் இல்லை, எனது மனைவி பிள்ளை மற்றும் மனைவியின் குடும்பத்தை எனது குடும்பமாக நினைத்து இருந்தேன். எனக்கும் மனைவிக்கும் இடையில் பிரச்சனை இல்லை. மனைவியின் அக்காவின் திருமணம் தடைப்பட்டதில் இருந்து என்மேல் சந்தேகம் கொண்ட எனது மனைவியின் குடும்பத்தினர் என்னை எதிர்தனர். ஆனால் உண்மையில் நான் அவ்வாறான பிழையை செய்யவில்லை. மனைவியையும் பிள்ளையையும் பிரிந்து மிகவும் விரக்தியில் வாழ்ந்து வந்தேன்.

குறித்த சம்பவத்துக்கு முதல் நாள் மனைவியின் வீட்டுக்கு சென்ற போது மனைவியின் தம்பியால் தாக்கப்பட்டு அவமானப்பட்டு திரும்பி வந்தேன். எனது பிள்ளையை பார்ப்பதற்காக ஒவ்வொரு முறையும் முயற்சி செய்தும் அவமானப் பட்டு வந்தேன். களவாக வீட்டுக்கு சென்று எனது பிள்ளையை பார்த்தேன்.

எனது மாமியர் ஒருமுறை எனக்கு தொலைபேசியில் பேசும் போது, எனது மனைவியிடம் இருந்த விவாகரத்து பத்திரம் வரும் அதை எடுத்து வைத்திரு என தெரிவித்தார். மிகவும் மன உழைச்சலுக் குள்ளானேன்.

முன்னர் பிள்ளையை பார்க்க செல்வது போல் சம்பவ தினத்தன்று இரவு 10.30 மணியளவில் அங்கு சென்றேன். மதிலால் ஏறி வீட்டுக் குள் சென்று வீட்டின் அறையை எட்டிப்பார்த்தேன். முன்பு அந்த அறையில் எனது மனைவி மச்சான் மாமிமற்றும்மகன் ஆகியோர் படுத்துறங்குவார்கள். ஆனால் அன்றைய தினம் எனது பிள்ளைக் கருகில் ஒரு ஆணும் பெண்ணும் இருப்பதை கண்டேன். அன்று மாமி எனக்கு சொன்னது நினைவில் வந்த போது எனது மனைவிக்கு வேறு திருமணம் நடைபெற்று விட்டதா என்ற சந்தேகத்தில் செய்வதறியாது ஆக்ரோசமடைந்து கதவை தட்டிடேன்.

அப்போது அடுத்த அறையில் இருந்து மனைவியின் தம்பி வந்தான் அவர் ஒரு கத்தியால் எனக்கு எறிந்தார் அதை நான் கைப்பற்றிக் கொண்டேன். கோபத்தில் தாறுமாறாக வெட்டினேன். இருட்டில் யார் என தெரியவில்லை. அப்போது தான் எனது மனைவி அந்த அறையில் இருந்து கத்திய படி வெளியே ஓடுவதை கண்டேன். சத்தத்தை வைத்து ஏனையவர்கள் யார் என கண்டு பிடித்தேன். அந்த நேரத்தில் தான் குறித்த அறையில் இருந்து மனைவியின் அக்காவும் அத்தானும் வந்தார்கள். அத்தான் எனக்கு றீப்பையால் அடித்தார் அதை தடுப்பதற்கு நான் கத்தியால் விசுக்கினேன். இடையில் அக்காவும் வந்து அகப்பட்டு கொண்டார்.

பின்னர் அவ் இடத்தை விட்டு ஆட்டோவை எடுத்துக்கொண்டு சென்று விட்டேன் நவக்கிரிப்பகுதியில் ஆட்டோ எரிபொருள் தீர்ந்தமையால் அதிலே நிறுத்திவிட்டு வாழைத்தோட்டத்தினால் வரும் போது கத்தியை வீசிவிட்டு ஊரெழுவில் உள்ள எனது வீட்டுக்கு சென்று விட்டேன். காலையில் தான் எனக்கு தெரியும் 3 பேர் உயிரிழந்து விட்டதாக உடனே கோப்பாய் பொலிஸில் போய் நான் சரணடைந்தேன்.

நான் செய்தது மிகப்பெரிய குற்றம். 3 பேர் சாவதற்கு காரணமாக இருந்துள்ளேன். மனைவி கூறியது போல் நான் அவரை தூக்கி வைத்து வெட்டவில்லை. சந்தேகத்தில் கோபம் ஏற்பட்டு அவ்வாறு செய்து விட்டேன். நான் செய்ததை நியாயப்படுத்தவில்லை எனது நிலை அவ்வாறு ஏற்பட்டு விட்டது. என சாட்சியமளித்தார்.

வழக்கின் சாட்சிய பதிவுகள் நிறைவடைந்துள்ள நிலையில் குறித்த வழக்கின் தீர்ப்பை இன்றைய தினம் அறிவிப்பதாக நீதிபதி மன்றில் தெரிவித்து வழக்கை இன்றைய தினத்துக்கு ஒத்திவைத்தார். (செ-9)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் கண்டியில்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் கண்டியில் நடைபெறவுள்ளது என பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பெற்றோலிய வள அமைச்சு காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

கண்டி கடம்பே மைதானத்தில் மே தினக் கூட்டம் நடத்தப்படவுள்ளதாகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில்கூட்டம் நடைபெறும்எனவும்அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கூட்டத்தில் பங்கேற்பார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)



கேலிச்சித்திரம்

கல்வியூட்டல்

வடமாகாண மருத்துவமன்றத்தின் மருத்துவக் கல்வியூட்டல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு கிரீன் கிறாஸ் விடுதியில் இடம்பெறும். (இ-3)

CJ Promoters
பெருமையுடன் வழங்கும்
CJ Promoters Proudly Presents
CHILDREN FUN FESTIVAL
12-16 சித்திரை 2017
மாலை 3.00-10.00 மணி வரை

சிறுவர்களுக்கான சித்திரைக் கொண்டாட்டம்

இடம் : மாநகர சபை மைதானம், யாழ்ப்பாணம்.

- Face Painting
- Magic Balloon
- Bouncing Casusls
- Drawing Competition
- Dancing Competition
- Magic Show
- Merigo Round
- Small Train
- Death Of Well
- Cartoon Charaters

கடைத்தொகுதிகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:
பிரசன்னாராஜ் T.P:077 25 465 11, 0766 0000 56

சித்திரப் போட்டி
12ம்திகதி முதல் 15ம் திகதி வரை
பங்கு பெற விரும்பும் மாணவர்கள் SMS மூடாக 0763494111 என்ற இலக்கத்திற்கும். தபால் அட்டை ஒன்றில் பெயர், வீலாசம், வயது, தெலைபேசி இலக்கம் என்பவற்றுடன் சித்திரை மாதம் 8ம் திகதிக்கு முன் இல 65 அடியபாதம் வீதி கல்வியங்காடு எனும் முகவரிக்கு அஞ்சப்பம் மாணவர்கள் மாத்திரம் பங்கு பெற முடியும்

சித்திரம் போட்டி குழுக்கள்
4-5 வர்ணம் தீட்டுதல்
6-7 மிருகம்/பறவை
8-9 காலைக்காட்சி/மாலைக்காட்சி
10-12 கடற்கரைக்காட்சி/மலை/வயல்
13-15 கருத்து வெளிப்பாட்டுச்சித்திரம்

பஷீரிடம் குற்றத்தடுப்புப் பிரிவினர் 3 மணித்தியாலங்கள் விசாரணை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் திடம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மூன்று மணிநேரம் தடுத்துவைத்து விசாரணை செய்துள்ளனர். இதற்கு முன் இரண்டு தடவைகள் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தும் அவர் சமுகமளிக்காது இருந்தபோதிலும் குற்றத் தடுப்புப் பிரிவின் கடுமையான எச்சரிக்கையின்பின்னர் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவில் நேற்று முன்தினம் ஆஜரானார்.

இந்நிலையில், மூன்று மணித்தியாலமாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டு பஷீர் சேகுதாவூத்திடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. (இ-3)

A/L -2019 கலை, தொழில்நுட்ப பிரிவுகள்

புவியியல் - N.BABU
(புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன)
(பி-7940)

ஆட்ஸ் அக்கடமி - புத்தூர் ஆரம்பம் : 30.03.2017 (4pm)	**C.C.A - சுன்னாகம்** ஆரம்பம் : 01.04.2017 (5pm)
தமிழியற் கல்லூரி - கோப்பாய் ஆரம்பம் : 30.03.2017 (5pm)	**DMI - யாழ்.நகர்** ஆரம்பம் : 01.04.2017 (8am)

மகா கும்பாபிஷேகம்

மீள் குடியேற்றம் செய்யப்பட்ட வீமன் காமம்கூத்தியாவத்தை மருதடிப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.15மணிக்கு ஆரம்பமாகி 7.15 மணி வரை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9மணி முதல் 4 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும். (இ-89)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
சுரேந்திரன் செல்வதி
[கூறாவத்தை, சுன்னாகம்]
பிறப்பு 26 04 1973
இறப்பு 10 04 2016
செல்வம் நிறைந்த எம்
செல்வதியே
சொல்ல வார்த்தைகள் வரவில்லை
உன்னைப் பிரிந்த நாள் முதல்
சிரிக்க மறந்து வாழ்கிறோம்
செல்வதியே உன் அழகுமுகம் காண
துடிக்கிறோம்,நிதம் நிதம்...
(C-7948)
அண்ணா : சி.ஜெயக்கொடி குடும்பம்
கோண்டாவில்.

இராசி பலன்

30.03.2017
(பங்குனி 17, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
திருதியை பின்னிரவு 3.02 மணிவரை
அச்சுவினி முற்பகல் 11.54 மணிவரை
சுபநேரம் 7.43-9.13 மணிவரை
செல்லப்பா சுவாமிகள் குருபூசை
அமிர்த சித்தம்

வளவன்

சூரி சுக்	செவ், புத சந்		
கேது	கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை பகல் 12.56 மணிக்கு மேடம், சந்		ராகு
	சனி		குரு

மீனம் (படம்)
தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், வரு மானம் திருப்திதரும் வகையில் அமையும், தேவையற்ற விவா தங்களைத் தவிர்ப்பது நல்லது.

மேடம் (படம்)
தேக நலனில் அதிக அக் கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மனஉளைச்சல் ஏற்படலாம், ஆழ்ந்த சிந்தையுண்டு, போசன சுகமுண்டு.

இடபம் (படம்)
பக்குவமாகப் பேசி காரியங் களை சாதித்துக் கொள்வீர் கள், சேமிப்பில் சிறிது கரை யலாம், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

மிதுனம் (படம்)
உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெற லாம், இயல்பான வாழ்க் கையில் இன்பங்கள் கூடும் நாள்.

கும்பம் (படம்)
பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், உறவினர்கள் வழியில் ஒத் தாசைகள் கிடைக்கப் பெறு வீர்கள்.

கடகம் (படம்)
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் வெற்றி பெறு வீர்கள், செய்தொழில் மேன் மையுண்டு.

மகரம் (படம்)
அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரும் பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பய ணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் கூடும் நாள்.

சிம்மம் (படம்)
கடன்களை மீட்கும் எண் ணம் மேலோங்கும், பேச்சில் இனிமை தென்படும், போட் டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வீட்டை பராமரிப் பதில் அக்கறை காட்டுவீர்கள்.

தனுசு (படம்)
கேளிக்கை, கொண்டாட்டங் களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொதுப் பயணங்களில் ஆர்வம் காட்டு வீர்கள், நெடு நாளைய கனவு கள் நனவாகலாம்.

விருச்சிகம் (படம்)
சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றம் ஏற்படும்.

துலாம் (படம்)
வெளியூர் பயணத்தால் ஆதாயமுண்டு, எடுத்த காரி யங்களில் முன்னேற்றமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள் வர், போசன நன்மையுண்டு.

கும்பம் (படம்)
கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வெளியூர் பய ணங்களின் போது பொருட் களில் கவனம் தேவை.

வகுப்புத்தடை விதிக்கப்பட்ட மாணவர்களை மீள இணைக்கக்கோரி

யாழ். பல்கலை.கலைப்பீட மாணவர்கள் போராட்டம்

யாழ்பல்கலைக்கழக கலைப்பீடத்தில் கடந்த 11,12ஆம் திகதிகள் நடைபெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக வகுப்பு தடை விதிக்கப்பட்ட மாணவர்களை மீளவும் பல்கலைக்கழக கல்வி செயற்பாடுகளுக்கு அனுமதிக்குமாறு கோரி கலைப்பீட மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த போராட்டத்தை நேற்று காலை 9மணிமுதல் முன்னெடுத்திருந்தனர். முதலாம் வருட மாணவர்களின் வரவேற்புபசார நிகழ்வில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகள் காரணமாக மூன்றாம் நான்காம் வருட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

மேற்படி அசாதாரண நிலைமை தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில் கடந்த 22ஆம் திகதி கலைப்பீட சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய 13 மாணவர்களுக்கு வகுப்புத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் நான்காம் வருட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையிலேயே மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற போது, வரவேற்பு நிகழ்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிவுற்ற நிலையில் குறித்த நிகழ்வை நிறுத்துமாறு நிர்வாகத்தினர் அறிவித்ததாகவும் இதனால் குழப்பநிலை ஏற்பட்டதுடன் நிர்வாகத்தின் அனுமதியின்றி இந்த நிகழ்வு நடத்தப்பட்டதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்ட காரணத்தால் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் கலைக்கப்படுவதாகவும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சட்ட மற்றும் இராமநாதன் நுண்கலைத்துறை தவிர்ந்த ஏனைய கலைப்பீட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுவதாக யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்திருந்தது.

அத்துடன் ஒழுக்க விதிமுறைகளை மீறிய மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் யாழ். பல்கலைக்க நிர்வாகம் அறிவித்திருந்தது. பின்னர் கலைப்பீட மூன்றாம் நான்காம் வருட மாணவர்கள் தவிர்ந்த இரண்டாம் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு கடந்த 20 ஆம் திகதி வகுப்புக்கள் ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், கடந்த 20ஆம் திகதி பீடாதிபதி உட்பட நிர்வாக உறுப்பினர்களை இரண்டாம் முதலாம் வருட மாணவர்கள் சந்தித்து மூன்றாம் நான்காம் வருட மாணவர்களின் விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர்.

அப்போது இரண்டு நாட்களுக்குள் குறித்த விடயம் தொடர்பில் முடிவெடுக்கப்பட்டு இறுதியாண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களை கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குள் பல்கலைக்குள் அனுமதிப்பதாகவும் மாணவர்களுக்கு தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மூன்றாம் நான்காம் வருட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்காததன் காரணமாக முதலாம் இரண்டாம் வருட மாணவர்கள், மூன்றாம் நான்காம் வருட மாணவர்களுக்கு ஆதரவாக அவர்களுக்கு தீர்வு வரும் வரையில் தமது கற்றல் செயற்பாடுகளை கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து புறக்கணிப்பதாக அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முதல் தொடர் போராட்டத்தில் குதித்துள்ள பல்கலை. மாணவர்கள், வகுப்பு தடை நீக்கப்பட்டு மாணவர்களை மீளவும் பல்கலைக்கழக கல்வி செயற்பாடுகளுக்கு அனுமதிக்க கோரியிருந்தனர். இதன்போது, பல்கலை. நிர்வாகம் பக்கச்சார்பாக செயற்படுவதாகவும், மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரையில், தமது தொடர் போராட்டம் தொடரும் எனவும் அறிவித்துள்ளனர். (இ-4)

கல்வாரி யாகம் திருப்பாடுகளின் காட்சி 6ஆம் திகதி ஆரம்பம்

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி முதல் 09ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும் திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களுடன் மேடையேற்றப்படவுள்ள 'கல்வாரி யாகம்' ஆற்றுகைக்கான ஏற்பாடுகள் இப்பொழுது இடம்பெற்று வருகின்றன.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தினை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்றமும் மையமையமாகக்கொண்டு இந்நாடகங்கள் எழுதப்பட்டாலும் அவற்றிற்குள் காலத்திற்கு ஏற்ப பல்வேறு கோணங்களையும் பாடுபொருள்களையும் உட்புகுத்தி இவ் ஆற்றுகைகள் மேடையேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு மேடையேற்றப்படும் 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் நாடகத்திற்கான எழுத்துருவை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதியுள்ளார். இவ்வாற்றுகை முதன்முதலாக 2002 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2009ஆம் ஆண்டிலும் மேடையேற்றப்பட்டு இவ்வாண்டுடன் மூன்றாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது. இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்றக் கலைஞரான தை.யஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார்.

ஆண்டுதோறும் திருமறைக்கலாமன்றத்தால் மேடையேற்றப்படுகின்ற திருப்பாடுகளின் காட்சியை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிடுகின்றமையும் இலங்கையிலேயே இடம்பெறுகின்ற மிகப்பெரிய அரங்க ஆற்றுகையாக இது அமைகின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இறைமகன் இயேசு மானிடர் அனைவரினதும் பாவத்தைக் கழுவ அவர் மனிதனாக பிறந்து, பாவ நிவாரணமாக அவர் தன்னையே தற்கொடையாக்கினார். அவரது பாடுகளும், பிறருக்காக தன்னையே அளிக்கும் தற்கொடையான மரணமும், உயிர்ப்பும் மனித வாழ்வியலுக்குரிய மேல் வரிச்சட்டங்கள். அதனை மீளவும் வலியுறுத்தும் படைப்பாக்கமே 'கல்வாரி யாகம்' என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இடமாற்றம்

அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜே.ஏ.எஸ்.என்.கே.ஜயசிங்க களுத்துறை இலங்கை பொலிஸ் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார். உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் பணிப்பில் பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது .

மேலும்இவருடன்இணைந்ததாக 3 பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2013ஆம் ஆண்டு பொலிஸ் பரிசோதகராக இருந்த ஜே.ஏ.எஸ்.என்.கே.ஜயசிங்க அச்சுவேலி பொறுப்பதிகாரியாகக் கடமைக்கு அமர்த்தப்பட்ட பின்னர் பொலிஸ்மா அதிபரினால் அண்மையில் பிரதம பொலிஸ் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றிருந்தார்.

இந்நிலையில் அச்சுவேலி பகுதியில் நான்கு வருடகாலமாகப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய இந்நிலையில் அவருக்குகளுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரிக்கு இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (இ-4,23)

ஜெனிவாக் களமும் தமிழ்த் தலைமைகளும் கருத்துரையும் கலந்துரையாடலும் 1-ம் திகதி

தமிழ் மக்கள் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையத்தினால் ஜெனிவாக் களமும் தமிழ்த் தலைமைகளும் என்ற தலைப்பிலான கருத்துரையும் கலந்துரையாடலும் நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் செயற்பாட்டு மையத் தலைவர் என்.இன்பம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கருத்துரைகளை வி.எஸ்.சிவகரன் (பொது அமைப்புக்களின் ஒன்றியம் மன்னார் மாவட்டம்), அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியற்றுறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-12)

அன்புவார ஒன்றுகூடல் விழா

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சத்தியசாயி சர்வதேச நிறுவனம் நடத்தும் அன்புவார ஒன்றுகூடல் விழா இல.166/5, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தலைவர் கே.வி.சிவ நேசன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் அறிமுக நிகழ்ச்சியை சாயி மார்க்க ஆசிரியர் டாக்டர். இ.கணே சமூர்த்தி வழங்குவார். பிரதம விருந்தினராக சத்திய சாயி சர்வதேச நிறுவன தேசிய மருத்துவ இணைப்பாளர் டாக்டர் சிவப்பிரகாசம் அனுஸ்யந்தன், சிறப்பு விருந்தினராக ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மைதிலிதேவராசன் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வின் இறுதியில் சாயி நிறுவனத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிவெற்றியீட்டியமாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும். (இ-12)

14

தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

விக்கினேஸ்வரனை விட தமிழருக்கு மேலான தலைவன் இல்லை

வடக்கு மாகாணத்தின் முதல மைச்சராக தமிழ் மக்களின் அமோக விருப்பு வாக்குகளைப் பெற்ற நீதியரசர் சி.வி.விக் னேஸ்வரன் அவர்கள் அப்போ தைய ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள, அவர் நினைவுப் பரிசாக பிள் ளையார் சிலை ஒன்றை வழங் கினார்.

தமிழ்மக்களின் விக்கினங்க ளைத் தீர்ப்பவராக இருங்கள் என்ற தத்துவத்தை விளக்குவதாக அந்தப் பிள்ளையார் சிலை அமைந்தாலும் இதற்கு மேலான ஒரு பொருளும் உள்ளது என்ப தைச் சொல்லித்தானாக வேண் டும்.

அதாவது புராணக் கதைகளின் பிரகாரம் பிள்ளையார் மட்டுமே கிரகங்களின் தாக்கத்திற்கு ஆளா காதவர். எல்லாத் தெய்வங்களை யும் பற்றிப் பிடித்த சனீஸ்வரன் பிள்ளையாரைத் தொட்டு விட நினைத்து அவரிடம் சென்ற போது, இன்று போய் நாளை வா என்று பிள்ளையார் கூறிவிட,

ஒவ்வொரு நாளும் சனீஸ்வ ரன் அலைந்து களைத்து விநாயக ரைத் தீண்ட முடியாதவனாகி னான். இதுபோல வடக்கு மாகாண சபையின் முதலமைச் சராக இருக்கும் தங்களை வடக்கு மாகாண சபைக்குள் இருப்பவர்களே தீண்டலாம். தோசம் விளைவிக்கலாம். ஆகை யால் எங்ஙனம் பிள்ளையார் தன் அறிவு நுட்பத்தால் இன்று போய் நாளை வா என்று சனீஸ்வரனைத் தட்டிவிட்டுத் தப்பித்துக் கொண் டாரோ அதே போல நீங்களும் அறி வால் உங்களைப் பாதுகாத்து தமிழ் மக்களையும் காத்துக்கொள்ளுங் கள் என்ற தத்துவத்தை உணர்த்து வதாகவும் விக்னேஸ்வரன் அவர்க ளுக்கு பிள்ளையார் சிலை வழங் கப்பட்டதைக் கொள்ள முடியும்.

தவிர, விநாயகன் என்றால் தனக்கு மேல் தலைவன் இல்லாத வன் என்றொரு பொருள் உண்டு. அதுபோல தமிழ்மக்களுக்கு உங்களைவிட ஒரு மேலான தலைவன் இல்லை என்பதால் பிள்ளையார் சிலை முதலமைச் சருக்கு கிடைக்கப் பெற்றது என்று பொருள் உரைப்பதும் பொருத்தமானதே.

எது எவ்வாறிருப்பினும் ஆன் மீக நாட்டம் கொண்ட முதலமைச் சர் விக்னேஸ்வரனுக்கு இறைவன் ஒரு தத்துவதை உணர்த்தும் வகை யிலேயே பிள்ளையார் உருவம் கிடைக்கச் செய்தார் எனலாம்.

வடக்கு மாகாணத்தின் முதல மைச்சராக விக்னேஸ்வரன் அவர் கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்வதில் இழுபறி நிலை ஏற்பட்டது. சிலர் தமது கட்சித் தலைவர்களுக்கு முன்பாக சத்தியப்பிரமாணம் செய்து கொண் டனர். இன்னும் சிலர் முதலமைச் சர் விக்னேஸ்வரனுக்கு முன்பாக சத்தியப்பிரமாணம் செய்தனர். சிவாஜிலிங்கம் முள்ளிவாய்க்கா லில் சத்தியப்பிரமாணம் செய்தார். வடக்கு மாகாண சபையில் உறுப் பினர்களிடையே ஒற்றுமையின் மையை வெளிப்ப டுத்துவதாக சத் தியப்பிரமாணம் அமைந்து போனது.

அன்றைய ஜனாதிபதிக்கு முன் பாக விக்னேஸ்வரன் அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்ய, அவர் முன்பாக ஏனையவர்கள் சத்தியப் பிரமாணம் செய்வதில் இழுபறி நிலை ஏற்பட்டது. சிலர் தமது கட்சித் தலைவர்களுக்கு முன்பாக சத்தியப்பிரமாணம் செய்து கொண் டனர். இன்னும் சிலர் முதலமைச் சர் விக்னேஸ்வரனுக்கு முன்பாக சத்தியப்பிரமாணம் செய்தனர். சிவாஜிலிங்கம் முள்ளிவாய்க்கா லில் சத்தியப்பிரமாணம் செய்தார். வடக்கு மாகாண சபையில் உறுப் பினர்களிடையே ஒற்றுமையின் மையை வெளிப்ப டுத்துவதாக சத் தியப்பிரமாணம் அமைந்து போனது.

அன்றைய ஜனாதிபதிக்கு முன் பாக விக்னேஸ்வரன் அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்ய, அவர் முன்பாக ஏனையவர்கள் சத்தியப் பிரமாணம் செய்வதே பொருத் துடையது. இருந்தும் அதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு கூட்ட மைப்பிற்குள் ஒருவரும் இல்லா மல் போய் விட்டனர்.

வடக்கு மாகாண சபையின் குழப் பம் என்பதே சத்தியப் பிரமாணத் தில் இருந்து ஆரம்பித்தது என லாம். இதை சற்றுத் திருத்தம் செய் வதாயின் வடக்கு மாகாண சபையைக் குழப்ப நினைத்த வர்கள் சத் தியப்பிரமாணத் தில் இருந்து தங்களின் சகு னித்தனத்தை ஆரம்பித்தனர் எனலாம்.



ஏதுவாயினும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் களின் பதவி யேற்பு நிகழ்வு நடந்தபோது முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் அவர் களைக் கௌரவிக்கின்ற நிகழ்வும் நடந்தது.

அந்நேரத்தில் அங்கிருந்த பொதுமகன் ஒருவர் திடீ ரென மேடையேறி முருகப் பெருமானின் கையில் இருக் கும் வேல் ஒன்றை முதல மைச்சர் விக்னேஸ்வரன் கையில் ஒப்படைத்தார்.

எதுவுமே புரியவில்லை. சத்தியப்பிரமாணம் செய்த போது மகிந்த ராஜபக்ஷ தன்னிடம் இருந்த பிள்ளை யார் சிலையை விக்னேஸ் வரனுக்கு நினைவுப் பரிசா கக் கொடுத்தார்.

இங்கோ வேல் கொடுக்கப் படுகிறது. யாழ்ப்பாணம் வீர சிங்கம் மண்டபத்திற்கு வந்த அந்த அன்பர் முதலமைச்ச ரின் கையில் வேல் கொடுத் தது ஏன்? அதன் பொருள் என்ன? என்று ஆராய்வது பொருத்துடையதே.

வேல் என்பது அசுரர் களை அழித்து தேவர்களைக் காத்த ஆயுதம். அதாவது அதர்மத்தை வீழ்த்தி தர் மத்தை நிலைநாட்டியது.

தவிர ஆழ்ந்து, அகன்று, கூர் மையாக இருக்கக்கூடிய வேலின் வடிவம் அறிவின் தத்துவ த்தை உணர்த்துவது. சுற்றி வரும் பகையைத் துரத்தி விரட் டுவதும் வேல் என்பதால் இதுவே உங்கள் வேலை என் பதை உணர்த்த முதல்வரின் கையில் வேல் கொடுக்கப் பட்டிருக்கலாம். அல்லது உங் கள் கையில் வேல் இருந் தால் பகை நெருங்காது என் றும் பொருள் கொள்ளலாம்.

(வளரும்)



-புருசோத்தமன்-

வவுனியாவில் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு தொடர்கின்றது

(குருமன்காடு)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியா ஏ-9 வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார திணைக்கள த்திற்கு முன்பாக நேற்றுடன் 34 ஆவது நாளாக சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரைதாம் முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு அரசு எவ்வித பதிலும் கூறவில்லையென அவர் கள் தெரிவிக்கின்றனர்.

தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை வெளிப்படுத்தும் வரை போராட்டத்தைகைவிடப்போவதில்லை என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

தமது போராட்டத்திற்கு அனைத்து மக்களும் ஆதர வளிக்க வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-5-250)

க.பொ.த. பரீட்சை பெறுபேறுகள்

கிளி/ பூநகரி மகா வித்தியாலயம்

இ.யானுசன்-8ஏஎஸ், சி.சங்கவி-8ஏஎஸ், ஜெ.கிசான்-7ஏ2பி, க.தீபனா-6ஏபி2சி, இ.லலிதாஜினி -6ஏபிசி.(5-84)

மருத்துவ உதவியாளர்கள் அடையாள வேலை நிறுத்தம்



மருத்துவ உதவியாளர்களுக்கான சம்பளச் சிக்கல்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் தொடர்பில் கண்டனம் தெரிவித்தும் அதனை விரைவில் தீர்த்து வைக்க வலியுறுத்தியும் மருத்துவ உதவியாளர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் வவுனியா பொது வைத்தியசாலையிலும் நடைபெற்றிருந்தது.

இந்த மருத்துவ உதவியாளர்களின் ஒன்றிணைந்த வேலைநிறுத்தத்தினால்வைத்தியசாலை பணிகள் பாதிப் படைந்திருந்தது. அரசாங்கம் தமது கோரிக்கைகள் தொடர்பில் பாராமுகமாக இருந்து வரும் நிலையில், நேற்று காலை தொடக்கம் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தமாக இதனை மேற்கொள்ளத் தீர்மானித்து குறித்த போராட்டம் நடைபெற்றிருந்தது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தமது அடையாள பணிப்புறக் கணிப்பு அவ்வப்போது தொடரும் என மருத்துவ உதவியாளர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. மருத்துவ உதவியாளர்களுக்கான சம்பளச் சிக்கல்களை தீர்க்க நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் தொடர்பில் கண்டனம் தெரிவிப்பதுடன் அதனை விரைவில் தீர்த்து வைக்க வலியுறுத்துவதே குறித்த அடையாள வேலை நிறுத்தத்தின் நோக்கம் என்று மருத்துவ உதவியாளர்கள் தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய அடையாள வேலை நிறுத்தத்தில் ஆய்வு கூட உதவியாளர்கள், மருந்தாளர்கள், எக்ஸ்ரே தொழில் நுட்பவியலாளர்கள், உற்கூறு சிகிச்சையாளர்கள் மற்றும் தொழில் சார் சிகிச்சையாளர்கள் உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் காரணமாக அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை மற்றும் மருத்துவ சேவைகள் தடைப்பட்டிருந்தது. குறிப்பாக எக்ஸ்ரே எடுக்கும் பணிகள் மற்றும் மருந்து வழங்கல் தடைப்பட்டிருந்தமையால் நோயாளர்கள், கிளினிக் வருவோர் பாதிப்படைந்திருந்தனர்.

(2-5-250)

முள்ளிக்குளம் கிராம மக்களின் போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட அருட்தந்தையர்கள் ஆதரவு

(மன்னார்)

முள்ளிக்குளம் கிராம மக்கள் தமது பூர்வீக நிலத்தை கடற்படையினரிடம் இருந்து மீட்பதற்காக முன்னெடுத்து வருகின்ற கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 7ஆவது நாளாகவும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும் குறித்த மக்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5மணியளவில் மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் ஜோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை மக்களை நேரில் சென்று சந்தித்ததுடன் காணியை நேரடியாக சென்றும் பார்வையிட்டார்.

எனினும் கடற்படையினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள மக்களின் காணியை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உட்பட அருட்தந்தையர்கள் அடங்கிய குழுவினர் உடனிருந்தனர். அவர்களுடன் இராணுவ பாதுகாப்பு அதிகாரிகளும் மக்களை சந்தித்தனர்.

இதன் போது கடற்படை முகாமுக்குள் சென்று மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் உட்பட அருட்தந்தையர்கள் அடங்கிய குழுவினர் நேரடியாக சென்று பார்வையிட்ட சம்பவத்தை புகைப்படம் எடுத்த ஊடகவியலாளர் ஒருவரின் புகைப்பட கருவியில் இருந்த புகைப்படங்களை கடற்படையினர் பலவந்தமாக புகைப்பட கருவியை அபகரித்து குறித்த கருவியில் உள்ள புகைப்படங்களை அழித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முள்ளிக்குளம் மக்கள் தமது நில மீட்புக்காக போராட்டத்தை இரவு, பகல் பாராது முன்னெடுத்து வருகின்ற போதும் அந்த மக்களின் உரிமை போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்கள், பொது அமைப்புக்கள் எனப் பல தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். (2-5-9)

கிளிநொச்சியில் உறவுகளின் போராட்டத்திற்கு வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் ஆதரவு

38 ஆவது நாள்

(மல்லாவி)

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் போராட்டம் நேற்று 38 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் இரவு பகலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியத்தினர் நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களிற்கு ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(2-5-15-312)

அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துவதற்கு கல்வி அமைச்சருடன் கலந்துரையாடுவேன்

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் உறுதி

(பனிக்கன்குளம்)

முன்பள்ளி ஆசிரியர்களின் சேவை மகத்தானது. அவர்களது அடிப்படை சம்பளத்தை உயர்த்துவது தொடர்பாக கல்வி அமைச்சருடன் தாம் கலந்துரையாடவுள்ளதாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் வலய முன்பள்ளி ஆசிரியர் சங்கம் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வு 2017 மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டெனிஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சிறார்களை ஆரம்ப பள்ளிதனில் உருவாக்கும் அதாவது ஆரம்ப கல்வியை சரியான முறையில் ஊட்டி அவர்களை இந்த கல்வி உலகிற்கு அடியெடுத்து வைக்க உறுதுணையாய் நிற்பவர்கள் இந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களே, அந்த வகையில் இவ்வாறான ஓர் நல்ல ஆரம்பத்தை ஆரம்பித்துவைக்கும் ஆசிரியர்களையும் அவர்களது சேவையையும் நிச்சயமாக இந்த மகளிர் தினத்தில் நாம் பாராட்டியே ஆகவேண்டும் என்றும், குறிப்பாக இவர்களது மாதாந்த சம்பளம் ரூபாய் 4000 ஆக இருப்பதனால் தற்போதைய பொருளாதார நிலையில் ஒரு சிறு பிரச்சினையை கூட சீர் செய்ய முடியாத ஓர் நிலையில் இருப்பதை தாம் உணர்ந்துள்ளதாகவும், அந்த வகையில் அவர்களது அடிப்படை சம்பளத்தை உயர்த்துவது தொடர்பாக கல்வி அமைச்சருடன் தாம் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்ததோடு தனது இந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் முன்பள்ளி ஆசிரியர் சங்கத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கித் தருவதாகவும் அதன் ஊடாக தங்களது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யுமாறும் வாக்குறுதி வழங்கியுள்ளார். (2-5-281)

கேப்பாப்பிலவில் போராட்டம் தொடர்கிறது

கேப்பாப்பிலவு மக்கள் தமது பூர்வீக நிலத்தை மீட்பதற்காகமுல்லைத்தீவு இராணுவ கட்டளைத் தலைமையகம் முன்பாக கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 29 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி இந்தத் தொடர் போராட்டம் இரவு பகலாக நடைபெற்று வருகின்றது. (2-281)

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் அரச ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து செட்டிகுளம் செல்லும் இ.போ.ச. பேருந்துகள் உரிய நேரத்திற்கு செல்வதில்லையென தெரிவித்து அரச ஊழியர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று காலை 7.30 மணி தொடக்கம் 9 மணிவரை வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அரச ஊழியர்கள் பல்வேறு பதாகைகளை தம்முடன் ஏந்தியிருந்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வவுனியாவிலிருந்து செட்டிகுளம் செல்லும் பேருந்துகள் குறித்த நேரத்திற்குள் உரிய இடத்துக்கு செல்வதில்லை. வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து காலை 7 மணிக்குப் புறப்படும் பேருந்து 9 மணிக்கு செட்டிகுளம் செல்கின்றது.

இதனால் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் தமது கடமைகளை எவ்வாறு சரியாக மேற்கொள்ள முடியும்? பாடசாலை செல்லும் மாணவர்கள் காலம் தாமதிப்பதால் சில பாடங்கள் முடிந்த பின்னரே பாடசாலை செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று அரச ஊழியர்களும் குறித்த நேரத்திற்குள் அலுவலகத்திற்குச் செல்லமுடியவில்லை. இது தொடர்பாக பல தடவைகள் இ.போ.ச. சாலைக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். எமது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் இது தொடர்பாக தெரியப்படுத்தியிருந்தோம்.

நேரக்கணிப்பாளர் அலுவலகத்திலிருக்கும் தொலைபேசியில் அழைப்பு ஏற்படுத்த முடியாது. வரும் அழைப்பை மட்டுமே பெறமுடியும். பேருந்து வந்தால் செல்லும் என நேரக்கணிப்பாளர் அலட்சியப்பமாக பதில் கூறுகின்றார்.

எமக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. அதன் காரணமாகவே இன்று போராட்டம் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு நேற்றையதினம் மத்திய பேருந்து நிலையத்தில் அரச ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டபோது செட்டிகுளத்திற்கு திடீரென ஒரு பேருந்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்களை விட்டு விட்டுச் சென்றுள்ளது. அரச ஊழியர்கள் துரத்திச் சென்றும் பேருந்து நிற்காமல் சென்றதாக அரச ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இது தொடர்பாக மனு ஒன்றை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் நேற்று கையளித்துள்ளனர்.

இதேவேளை செட்டிகுளம் பகுதியில் பேருந்து நிலையத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. மாணவர்கள், கிராமசேவையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (2-5-250)

வில்பத்து வர்த்தமானி அறிவித்தல் முசலி மக்களுக்கு பாரிய பாதிப்பு

ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(மன்னார்)

வில்பத்துத் தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல், முசலிப் பிரதேச மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால் அதனை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அமைச்சர் றிசாத் பதியுதீன் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். குறித்த கடிதத்தில் மேலும்குறிப்பிட்டுள்ளதாவது,

கால் நூற்றாண்டு கால அகதி வாழ்வில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து விட்டு, மீண்டும் கஷ்டங்களின் மத்தியிலே தமது பூர்வீகக் காணிகளில் குடியேறியிருக்கும் முசலிப் பிரதேச் மக்களுக்கு புதிய வர்த்தமானி அறிவித்தலால் அவர்களது சுயாதீனமான இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த மக்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளும், மேய்ச்சல் தரை நிலங்களும், குடியிருப்புக்காணிகளில் ஒரு பகுதியும் பாதுகாக்கப்பட்ட வனத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளமை பிழையானது.

கடந்த அரசாங்கத்தின் இனவாத நடவடிக்கையினாலேயே தங்களின் தலைமையிலான புதிய அரசாங்கத்தை கொண்டு வருவதற்கு முஸ்லிம்கள் முழுப் பங்களிப்பையும் வழங்கினர். ஆட்சி மாற்றத்தை வேண்டி தங்களது உயிரையும்துச்சமென மதித்து எதையுமே பொருட்படுத்தாது முன்னின்று உழைத்த இந்த முஸ்லிம் சமூகத்தை இனவாதிகள் தொடர்ந்தும் கொடுமைப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது.

முஸ்லிம் சமூகத்தை காடழிக்கும் சமூகமாகக் காட்டி இனவாதிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் பிழையான நடவடிக்கைகளுக்கு உத்வேகம் கொடுக்கும் வகையில் அரசாங்கத்தின் இந்த வர்த்தமானிப் பிரகடனத்தை நாம் பார்க்கின்றோம். அதுவும் தாங்கள் ரஷ்யாவில் இருக்கும் போது இந்த வர்த்தமானிப் பிரகடனம் வெளியிடப்பட்டமை எமக்குக் கவலை தருகின்றது.

வில்பத்து இயற்கை சரணாலயத்தில் ஓர் அங்குல நிலத்தையேனும் அபகரிக்காத முஸ்லிம் சமூகத்தின் மீது அபாண்டமான பழிகளை சுமத்தி வரும் இனவாதிகளுக்கு புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் தீனி கிடைத்துள்ளது என்பதையும் தங்களின் மேலான கவனத்தில் கொள்ள வேண்டும் என அமைச்சர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை புதிய வர்த்தமானி அறிவித்தலால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் தெரிவித்த அமைச்சர் றிசாத் பதியுதீன் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்ய உதவ வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். (2-5-9)

வர்த்தமானியில் கையொப்பமிட்டதை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்

மறிச்சுக்கட்டி, பாலைக்குழி மக்கள் போராட்டம்

(மன்னார்)

மன்னார் முசலி பிரதேசத்தில் உள்ள அதிகமான பூர்வீக இடங்களை வில்பத்து வன பகுதிக்கான எல்லையாக ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன புதிய வர்த்தமானியில் கையொப்பம் இட்டதை தொடர்ந்து வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக ஜனாதிபதி இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மறிச்சுக்கட்டி, பாலைக்குழி மற்றும் கரடிக்குழி மக்கள் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பல வருட காலமாக மக்கள் வாழ்ந்த காணிகளை வில்பத்து பிரதேசமாக பிரகடனப்படுத்தியதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் என குறித்த கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒருபோதும் எங்கள் தாய் மண்ணை விட்டு வெளியேற மாட்டோம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் எங்களுக்கு அநியாயம் இடம்பெற்றதாகத் தெரிவித்துத் தான் இந்த நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கினோம்.

ஆனால் இந்த அரசாங்கம் எங்களுக்கு நல்லதை செய்யாமல் எங்கள் உறவுகள் பரம்பரையாக வாழ்ந்த காணியை கையகப்படுத்தும் சூழ்ச்சி வேலைகளை செய்துள்ளது.

எங்கள் போராட்டத்திற்கு அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம். என அம்மக்கள் தெரிவித்தனர். (2-5-9)

பட்டதாரிகள் முல்லையில் இன்று கவனயீர்ப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து தமக்கான அரச வேலை கோரி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக ஒன்றுகூடி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர். இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் சமூகம் கேட்டுள்ளது. (2-5-281)

யாழ். மாநகரமும் தாய்மையும்

கைவிடப்பட்ட சிறிய நீர்த்திட்டம்

ஒரு பிரதேசத்தின் தூய்மை என்பது திண்மக்கழிவு முகாமைத் துவத்தில் தங்கியுள்ளது. திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பது உலகளாவிய ரீதியில் ஒரு பிரச் சினைக்குரிய விடயமாக இருக்கின் றது. சனத்தொகை பெருக்கம், நகரமயமாக்கல், பொருளாதார செயற்பாடுகள் மற்றும் மக்களின் நுகர்வும் வாழ்க்கை முறைமை யும் திண்மக்கழிவுப் பிரச்சினை யாக தலைதூக்கி நிற்கின்றது. முக்கியமாக நகர்ப்பகுதிகளில் நடைமுறையில் இருக்கும் கழிவக ற்றல் செயற்பாடானது, அதாவது ஒரு இடத்தில் இருந்து வேறோர் இடத்தில் கழிவினைக் கொட்டுவ தும், பின்பு அந்தப் பிரதேசத்தில் உள்ளவற்றை வேறொரு இடத்தில் கொட்டுவதும் சுற்றாடலுக்கு எதிர் மறை விளைவுகளை ஏற்படுத்தியு ள்ளமையை அவதானிக்கக்கூடிய தாகவுள்ளது. இதனால் சமுதாய, பொருளாதார மற்றும் சுகாதார பிரச்சினைகள் தலைதூக்கியுள் ளன.

யாழ்.மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் மாத்திரம் 105 தொன் திண்மக் கழிவுகள் ஒவ்வொரு நாளும் உருவாக்கப்படுகின்றது. இதில் 80 தொன் திண்மக் கழிவானது மாநகர சபையினால் தினமும் அகற்றப்படுகின்றது. மிகுதியாக உள்ள திண்மக் கழிவானது வீடு களில், வீட்டுக்குடியிருப்பாளர்களி னால் கூட்டுப்பசளை தயாரிக்கப்ப ட்டு விவசாய மற்றும் வீட்டுத் தோட் டத் தேவைகளுக்காக உபயோகிக் கப்படுகின்றது.

இவ்வாறு சேகரிக்கப்படும் திண்ம கழிவுகளானது மாநகர சபை எல் லைக்குள் உள்ள பள்ளக்காணிக ளில் கொட்டப்பட்டு வந்தன. இந்த செயற்பாட்டினால் நிலத்தடி நீர் பாதிப் புக்குள்ளாகி இருந்ததுடன் மக்கள் செறிவாக உள்ள பகுதிகளில் தொற்று நோய்களும் விரைவாகப் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுள்ளன. நீர்யன்மார்க்கட்டுப் பகுதியில் இருந்த ஒரு பள்ளக் காணி திண்மக் கழிவினால் நிரப் பப்பட்டதனால் மாநகர சபையின் ஒரு சிறிய நீர் விநியோகத் திட்ட மானது மாசடைந்து பாதிப்புக்குள் ளாகியது. இதனால் அந்நீர்த்திட் டமானது நல்லூரில் உள்ள வேறொரு சிறிய நீர்த்திட்டத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. இது மிகப் பாரதூரமானதொரு நிலை யாகக் காணப்பட்டமையால் மாற் றொழுங்குகள் பற்றித் தீவிரமாகக் கலந்துரையாடப்பட்டன.

இதனால் திண்மக்கழிவுகளைக் கொட்டுவதற்கு காக்கைதீவில் ஒரு காணி இனங்காணப்பட்டு காலப் போக்கில் அப்பகுதியை அண்மித் தும் குடியேற்றத் திட்டங்கள் உரு வாகியமையினால் அங்கும் கொட்டுவது பிரச்சினையாகி பின்பு சண்டிலிப்பாய் நிர்வாக எல்லை யினுள் உள்ள ஒரு காணி தெரிவு செய்யப்பட்டு அங்கும் எதுவித திண்மக்கழிவகற்றல் நியமங்களு க்கமைய கொட்டப்படவில்லை. இதனால் அப்பகுதியின் இயற்கை அழகு குறைந்ததுடன் பொலித்தீன் மயமாக மாறிவிட்டது. இதனால் அயலில் உள்ள விவசாய நிலங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன் நிலம், நீர் மற்றும் வளிமாசடை ந்துள்ளது. அத்துடன் இத் திண்மக்கழிவு கொட்டும் இடத்தி

ற்கு அருகில் பிரதான வீதி இருந்த தனால் வேறு இடங்களில் இருந்து வரும் மக்கள் பிரயாணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அதா வது ஒரு அயலின் பகுதி நடவடிக் கைகளினால் உருவாக்கப்படும் திண்மக் கழிவானது மற்றைய பகுதியின் நாளாந்த வாழ்க்கை யைப் பாதிப்புக்குள்ளாக்கியுள் ளதுடன் நிலம், நீர் மற்றும் வளி மாசடைவதற்கும் ஒரு காரணி யாகிவிட்டது.

இதனை நிவர்த்தி செய்வதற் காக வீதியோரமாக கொட்டப்பட்ட திண்மக் கழிவுகள் முற்றாக அக ற்றப்பட்டு வீதியில் இருந்து 50m இற்கு அப்பால் நெற்றினால் ஆன வேலி இடப்பட்டு பாரம் குறைந்த பொலித்தீன்கள் காற்றுடன் பறந்து சென்று சூழலை மாசுபடுத்தப்படு வது குறைக்கப்பட்டுள்ளது.

மாநகர வீட்டுத் திண்மக்கழி வில் 80% தொடக்கம் 85% ஆன கழிவு சேதனக்கழிவாகவும், 15% தொடக்கம் 20% ஆன கழிவுகள் பேப்பர், பிளாஸ்ரிக், கண்ணாடி, இரும்பு மற்றும் அசேதனப் பொருட் களாகும். மேலும் 70% தொடக்கம் 80% வரை நீர்ப்பற்றுக் கொண் டவையாக இருப்பதுடன் குறைந்த சக்திப் பெறுமதி (600 –1000 Kcal/ Kg) ஐக் கொண்டவை என்பது De Alwis 2000 அறிக்கையிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது.

திண்மக்கழிவு பிரச்சினைகள் நாடளாவிய ரீதியில் ஒரு சவாலாக இருப்பதனால் அதனை முன்னே ற்றுவதற்காக ஜனாதிபதியால் இலங்கையில் உள்ள மாநகர சபைகள் அனைத்தும் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01ஆம் திகதியில் இருந்து தரம் பிரிக்கப்பட்ட திண்மக் கழிவுகளை மட்டும் கழிவுகள் உருவாக்கப்படும் இடங்களில் இருந்து அகற்றப்படல் வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்குப் பக கபலமாக சுற்றுப்புறச் சூழல் பொலிஸ் பிரிவும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

உதாரணமாக ஒரு தூய்மை யான ஒரு லீற்றர் போத்தலில் குடிதண்ணீர் அடைக்கப்பட்டிருந் தால் அதன் பெறுமதி ரூபா.60.00 ஆகும். அதே தூய்மையான நீரா னது அசுத்தமான பாத்திரத்தில் அடைக்கப்பட்டால் அதற்குப் பெறு மதி இல்லை. ஆனால் தாவரங்க ளுக்கு நீர்ப்பாசனத்திற்கு பாவிக்கக் கூடியதாக இருக்கும். இதே நீர் சாக்கடையில் விடப்படின் ஒன்றுக் கும் பயன்படாமல் எம்து இயற்கை வளங்களான நிலம், நீர் மற்றும் வளி என்பவற்றை மாசுபடுத்துகின் றது. இதனைப் பிரித்தெடுப்ப தென்பது ஒரு பெரிய திட்டமாகும்.

இவ்வாறே 1 லீற்றர் பால் தூய பாத்திரத்தில் இருந்தால் அதன் பெறுமதி ரூபா 80.00 ஆகும். அப்பாலானது அசுத்தமான பாத் திரத்தில் இருப்பின் அதற்குப் பெறு மதி இல்லை. அப்பாலானது வடிகா லினுள் இடப்படும் பட்சத்தில் பக்டீரி யாக்களின் பெருக்க வீதமானது அதிகரித்து துர்நாற்றம் வீசுவதுடன் சுற்றாடலையும் மாசுபடுத்துகின் றது. இதன்மூலம் நாம் கற்றுக் கொள்ளக் கூடிய விடயமானது, கழிவினை உருவாக்குவது எமது அசண்டையீனமான பாவனையும் செயலுமாகும்.

மாநகரசபையினால் சேகரிக் கப்படும் திண்மக் கழிவினை வகைப்படுத்துவோமாயின்,

வீட்டுக்கழிவுகள்:- சாப்பாட்டுக் கழிவுகள், பேப்பர், காட்போட், பிளாஸ்ரிக், துணிகள், பலகைத் துண்டுகள், சுற்றாடலில் இருந்து பெறப்படும்கழிவுகள், கண்ணாடி, உலோகங்கள், சாம்பல், தெரு வோர இலை குழைகள், பற்றரிகள் பாவித்த மின்சார பொருட்கள், ஓயில், மரங்கள், தரை அழகுபடுத் தலின் போது ஏற்படும் கழிவுகள் மற்றும் வீட்டில் உள்ள ஆபத்தான கழிவுகள்.

வர்த்தகக் கழிவுகள்:- சாப் பாட்டுக்கழிவுகள், பேப்பர், காட் போட், பிளாஸ்ரிக், துணிகள், பலகைத் துண்டுகள், கண்ணாடி, உலோகங்கள் மற்றும் ஆபத்தான கழிவுகள்.

நிறுவன கழிவுகள்:- சாப்பாட் டுக் கழிவுகள், பேப்பர், காட்போட், பிளாஸ்ரிக், துணிகள், பலகை, கண்ணாடி, உலோகங்கள் மற்றும் ஆபத்தான கழிவுகள்.

முலப்பொருட்களைப் பிரித்தெடுத்தல் (சக்தி பாவிக்கப்படுவது) → பொருட்களின் பாவனையின் போது (சக்தி பாவிக்கப்படுவது) → கழிவு

கட்டுமானங்களினாலும் இடி பாடுகளினாலும் ஏற்படும் கழிவு கள் :- மரப்பொருட்கள், உலோக ங்கள், கொங்கிறீற் மற்றும் இடிபா ட்டுக்கழிவுகள்.

மாநகர சேவைகளினால் ஏற்ப டும் கழிவுகள் (பரிகரிப்புத் தொழி ற்பாடு தவிர்ந்த) :- தெருவோர கழிவு, தரை அழகுபடுத்தலின் போது ஏற்படுத்தும் கழிவு, மரங்கள் வெட்டுதலின்போது ஏற்படும் கழி வுகள் மற்றும் பொழுதுபோக்கு

வெள்ள வாய்க்காலினுள் உள்ள கழிவுகள்

இடங்களில் ஏற்படும் கழிவு. பரிக ரிப்பு தொழிற்பாட்டின் போது மீத மாக உள்ள கழிவுகள் மற்றும் எரியூ ட்டலின் போது மீதமாக உள்ள கழிவுகள்.

தொழிற்சாலைக் கழிவுகள்:- தொழிற்சாலை செய்முறையினால் ஏற்படும் கழிவுகள், உபயோகமற்ற பொருட்கள் மற்றும் ஆபத்தான கழிவுகள்.

விவசாயக் கழிவுகள் :- பழு தடைந்த உணவுக் கழிவுகள், விவசாய கழிவுகள் மற்றும் ஆபத் தான கழிவுகள்.

மேலே வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்கள் எல்லாவற்றிற் கும் அண்ணளவாக குறிப்பிடத் தக்க சக்தி உள்ளது.உதாரணமாக,

உணவுக் கழிவு:- 4652 KJ/ Kg.

கடதாசிக் கழிவு:- 16747 KJ/ Kg.

காட்போட் கழிவு:- 16282 KJ/Kg.

பிளாஸ்ரிக் கழிவு:- 32564 KJ/Kg.

துணிக் கழிவு- 17445 KJ/Kg.

இறப்பர் கழிவு:- 23260 KJ/ Kg.

தோல் கழிவு:- 17445 KJ/Kg.

சுற்றுச்சூழல் கழிவு:- 5815 KJ/Kg.

மரக் கழிவு:- 18608 KJ/Kg.

இங்கு 1 KJ = 0.249 K cal ஆகும்.

இச்சக்தியானது பொருட்களை மூலப்பொருட்களில் இருந்து முடி வுப் பொருட்களாக மாற்றி பாவ னைக்கு வரும் வரை கொடுக் கப்பட்ட சக்தியாகும். இதன் விளக்கம் வருமாறு,

இச்செயற்பாட்டின்போது சூழ லுக்கு கூடுதலான எதிர்மறை விளைவுகள் ஏற்படுகின்றது. அதா வது சூழலை மாசுபடுத்தக்கூடிய கழிவுகள் வெளியேற்றப்படுகின் றன. அதில் பச்சைவீட்டு வாயுவும் (CO_2)உள்ளடங்குகின்றது. அதா வது பச்சை வீட்டு வாயுவின் அளவு கூடுவதனால் பூமி சூடாவதுடன் காலநிலை மாற்றங்கள் ஏற்படு கின்றன. அந்தவகையில் மழை வீழ்ச்சியில் ஏற்படுகின்ற மாற்றங் களையும் கூறலாம். நாம் பருவ காலங்களில் மழைவீழ்ச்சியை பெறுகின்றோம். அதாவது நான்கு மாதங்களுக்குச் சீராகக் கிடைத்த மழைவீழ்ச்சியானது தற்போது நான்கு நாட்களில் கிடைத்து வெள் ளப் பெருக்கினை ஏற்படுத்தியதுடன் நீண்டகால வரட்சியையும் உண்டு பண்ணியிருக்கின்றது.

அந்த வகையில் யாழ். மாநக ரசபையினால் திண்மக்கழிவு களை எவ்வாறு தரம்பிரித்து வழ ங்க வேண்டும் என ஒலிபெருக்கி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் மற்றும் உத்தியோகத்தர்களின் நேரடி களப்பரிசோதனைகளின் போது தெளிவாகத் தெரியப்படுத்தப் பட்டுள்ளது. அப்படியிருந்தும் ஒரு குறிப்பிட்ட வீத தேசப்பற்றற்ற மக்க ளின் அசமந்தப்போக்கினால் திண் மக்கழிவுகள் தரம்பிரியாது வீதி யோரங்களில் எதுவித பொறுப் புமின்றி வீசப்படுகின்றன. இவ்வாறு மேலே குறிப்பிடப்பட்ட பொருட்கள் ஒரு குறிப்பிட்ட சக்தியைக் கொண் டுள்ளன.

இவ்வாறு வீசப்படும் பொருட் களுக்கு ஏதோ ஒருவகையில் சக்தி கொடுக்கப்பட்டுள்ளதுடன் ஒரு தொகைப்பணம் செலவிடப்பட்டு ள்ளது.தற்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பல மீள் சுழ ற்சி உற்பத்தியாளர்கள் உரு வாக்கப்பட்டு திண்மக்கழிவுகள் பணம்கொடுத்து வாங்கப்படுகின் றன. அதன் விலையினையும் மத் திய சுற்றாடல் அதிகாரசபையே தீர்மானித்துள்ளது.

(தொடரும்...)

எந்திரி இ. சுரேஸ்குமார்
பிரதம பொறியியலாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

பிரபாகரனை பாதுகாப்பாக மீட்கும் திட்டத்தை அமெரிக்கா முன்வைக்கவில்லை - கோத்தா

(கொழும்பு)

போரின் இறுதிக் கட்டத்தில் போர் வலயத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை பாதுகாப்பாக மீட்கும் திட்டம் எதையும் அமெரிக்கா கொண்டிருந்ததா என்று தன்னால் உறுதியாகக் கூற முடியாது என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உயர்மட்டத் தலைவர்களை பாதுகாப்பாக மீட்கும் திட்டத்தை அமெரிக்கா முன்வைத்தது என்றும் ஆனால் இலங்கை அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை என்றும் முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதுகுறித்து கோத்தபாய ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், "அத்தகைய திட்டம் ஒன்று இருந்ததாக என்னால் உறுதியாகக் கூற முடியாது.

ஆனால், பொதுமக்களை மீட்பதற்கு அமெரிக்கா விரும்புவதாக, அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் என்னிடம் கூறினார்.

எனினும், அவர் முன்வைத்தது பிரபாகரனையோ, புலிகளின் உயர்மட்டத் தலைவர்களையோ மீட்பதற்கான திட்டம் அல்ல. அது ஒரு பரிந்துரையாக மட்டுமே இருந்தது" என்று பதிலளித்தார். (இ-3)

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மீன்களை பதனிடும் தொழிற்சாலை

(கொழும்பு)

ஏற்றுமதிக்கான மீன்களை பதனிடும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தொழிற்சாலையொன்றை நிர்மாணிக்க கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

மட்டக்குளியில் அமைந்துள்ள இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வளாகத்தில் இந்த தொழிற்சாலையை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திறைசேரியின் நிதியுதவியுடன் இந்த தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மீன் பதனிடும் நடவடிக்கை வெற்றிகரமாக இடம்பெறுகிறது. ஜப்பான் மக்களின் பாரம்பரிய மீன் உணவு வகைகளும் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறான ஒரு கிலோ மீன் உணவு பத்தாயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஐரோப்பாவிற்கான மீன் ஏற்றுமதி தடை நீக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து செயலிழந்து காணப்பட்ட மீன் பதனிடும் 32 தொழிற்சாலைகளின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் அதிகளவிலா னோருக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

காங்கேசன்துறையில் ஐ.நாவின் இராணுவ வாகனத் தொடரணி

மாலியில் ஐ.நா. அமைதிப் படையில் இணைந்து கொள்ளவுள்ள இலங்கை இராணுவ அணிக்கான பாரிய களப்பயிற்சி ஒத்திகை காங்கேசன்துறையில் இருந்து ஆரம்பமாகியுள்ளது.

நேற்று முன்தினம் காங்கேசன்துறையில் ஆரம்பமாகிய இந்த களப்பயிற்சியில் 15 அதிகாரிகள் மற்றும் 185 படையினர், 82 இற்கும் அதிகமான இராணுவ வாகனங்களுடன் பங்கேற்றுள்ளனர்.

ஐ.நா. அமைதிப்படையில் இடம்பெறுவதற்கேற்ற வகையில் வெள்ளை நிறப் பூச்சு பூசப்பட்டு, ஐ.நா. கொடி பறக்கவிடப்பட்டவாறு இலங்கை இராணுவ வாகனங்கள் இந்த வாகனத்தொடரணியில் பங்கேற்றன.

இலங்கைப் படையினரும் ஐ.நா. சின்னத்துடன் கூடிய தலைக்கவசங்கள் மற்றும் பட்டிகளையும் அணிந்துள்ளனர். காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்ட இந்த நீண்ட இராணுவ வாகனத் தொடரணியின் பயணம் நாவலடி, விடத்தல்தீவு, ஓயாமடு, மின்னேரியா, புத்தளம், மாதுறு ஓயா, புத்தளம் வழியாக சூரியவெவவில் நிறைவடையும். இந்த வாகனத் தொடரணிப் பயணத்தின் போது பல்வேறு பயிற்சிகளிலும் இலங்கை படைகள் ஈடுபடுகின்றன.

போர் முடிவுக்கு வந்த பின்னர், நீண்ட இராணுவ வாகனத் தொடரணி, ஐ.நா. கொடி மற்றும் சின்னங்களுடன் வடக்கில் இருந்து பயணத்தை ஆரம்பித்திருப்பது குடாநாட்டு மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. (இ-3)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: சித்திரை உயரம்: 5'8" தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் தொ.இ: B/7146	பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: சித்திரை கி.பா: 40செவ் 1 ல் உயரம்: 154cm தகைமை/தொழில்:A/L/அரசதொழில் தொ.இ: G/7147
பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: திருவோணம் கி.பா: 13செவ் 1 ல் உயரம்: 5'10" தகைமை/தொழில்:BSc Eng/உதவிபணிப்பாளர் தொ.இ: B/7148	பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: பூசம் செவ் 7 ல் உயரம்: 5'2" தகைமை/தொழில்:A/L தொ.இ: G/7150
பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: உத்தரட்டாதி உயரம்: 5'6" தகைமை/தொழில்:A/L/சாரதி தொ.இ: B/7149	பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: ரோகினி கி.பா: 63செவ் 7 ல் உயரம்: 5'4" தகைமை/தொழில்:A/L தொ.இ: பு/7154
பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: சித்திரை கி.பா: 41 உயரம்: 5'2" தகைமை/தொழில்:O/L/கடை தொ.இ: B/7151	பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: திருவோணம் செவ் 2 ல் உயரம்: 5' தகைமை/தொழில்:Diploma Reading Degree தொ.இ: G/7159

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை
தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

முன்பள்ளி சிறார்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி நாளை யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகார சபையின் கலை, கலாசார மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக "சிறுவர் மனதில் இனிமையான இயற்கை எண்ணங்களை முகிழச் செய்தல்" எனும் கருப் பொருளிலான முன்பள்ளி சிறார்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் காலை 9 மணியளவில் இடம்பெறும். (இ-12)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழுவின் இலங்கை அரசியல் வரலாற்றில் மக்கள் விடுதலை முன்னணியின் வகிபாகம் என்ற தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இல. 361,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள D.M.I கல்வி நிறுவனத்தில் ஏ.சி. ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆரம்ப உரையினை சொ. சிவபாலன் நிகழ்த்துவார். (இ-12)

விவசாயிகள் விண்ணப்பிக்கவும்

நெற்பயிர் அழிவுக்கான நிவாரணப் படிவங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாகப்படிவங்களைப்பெற்று எதிர்வரும் ஏப்ரல் மதம் 10 ஆம் திகதிக்கு இடையில் விண்ணப்பிக்குமாறு கமநல சேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-3-134)

திருவள்ளுவர் தின விழா

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் திருவள்ளுவர் தின விழாவும், 2017 ஆம் ஆண்டுக்கான கல்விச் சகாய நிதி ஆரம்பித்தலும் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய மண்டபத்தில் மகாசபைத் தலைவர் நாகன் கிருஷ்ணபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் அலுவல ஒருங்கிணைப்புச் செயலாளர் க.கருணாகரன் கலந்து கொள்வார். (இ-12)

வடமராட்சிக் கிழக்கு முள்ளியான் (நித்தியவெட்டை) ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலைய வைத்தியர் விடுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது. நேற்று முற்பகல் 10 மணியளவில் வைத்தியசாலை வைத்தியர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். இக் கட்டடம் சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வல் வடமாகாணசபை சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், கே.தர்மலிங்கம், இ.ஆனோல்ட், கே.சயந்தன், அ.சிவயோகன், மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், வடமாகாண சபை சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள், மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

நிர்வாகக்குழுக் கூட்டம்

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் நிர்வாகக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் தலைமையில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும். இக்கூட்டத்தில் நிர்வாகக் குழு உறுப்பினர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (இ-7-134)

குருபூசை

நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 102வது குருபூசைத்தினம் இன்று வியாழக்கிழமை பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம்பெறும்.

சுவாமிகளின் திருவுளத்திற்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று திருமுறை, நற்சிந்தனைப் பாராயணத்துடன் நண்பகல் 12 மணியளவில் குருபூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்ன தானமும் வழங்கப்படும். (இ-12)

ட்ரம்பின் புதிய பயணத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டம்

குடியேற்ற, மத மற்றும் மனிதாபிமான விடயங்கள் சார்ந்த அமைப்புக்கள் ஒன்றிணைந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் விதிக்கப்பட்ட பயணத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளன.

லோவர் மன்ஹாட்டன் பகுதியில் குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அகதிகள் தொடர்பான ஓவியங்கள், இறப்பர் படகுகள், மற்றும் கடற்பயணத்தின் போது அபாயத்தை விளைவிக்கக் கூடிய பொருட்கள் என்பன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களால் காட்சிப்படுத்தப்பட்டன.

"அகதிகள் மற்றும் குடியேற்றவாசிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பம். இந்த நாட்டிற்கு வந்த அவர்கள் அமைதியான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். அவர்களது சொந்த நாட்டில் கிடைக்காது போன அமைதியான வாழ்க்கையை அவர்கள் இங்கு அனுபவிக்க வேண்டும்" என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

"குடியேற்றவாசிகள் மற்றும் அகதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் டரம்ப் மற்றும் அவரது நிர்வாகக் குழுவின் முறையற்ற நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலுமே நான் இங்கு வந்துள்ளேன்" எனவும் தெரிவித்துள்ளனர். (இ-12)

தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவன் கௌரவிப்பு



(கொழும்பு)

2016 ஆம் ஆண்டு நடந்த க.பொ.த உயர்தர பரீட்சையில் இயந்திரவியல் தொழில்நுட்ப பிரிவில் தோற்றி 3ஏ பெறுபேற்றினைப் பெற்று தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன். க.யதுர்ஷயன் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதன் போது கல்லூரியின் முதல்வர் மு.செல்வஸ்தான் கலந்து கொண்டிருந்தார். இந் நிகழ்வில் தேசிய ரீதியில் சாதித்த ஏனைய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உள் ளிட்டோரும் இந் நிகழ்வில் பங்கேற்றனர். (இ-3)

ஐ.நாவின் தீர்மானத்திலிருந்து அரசு தற்போதே விலகி விட்டது

சந்திரிகாவின் கருத்து அதை வெளிப்படுத்தியுள்ளதாக அனந்தி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பல ஆயிரம் இளைஞர்கள், யுவதிகள் காணாமல் போவதற்கு காரணமாக இருந்த படையினரை தண்டிக்கமாட்டோம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறியது ஐ.நா வின் தீர் மானத்திலிருந்து இலங்கை அரசு தற்போதே விலகி செல்வதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், இவ்வாறு கூறுபவர் எவ்வாறு இரு இனங்களுக்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்துபவராக செயற்பட முடியும் எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடைய பிரதிநிதிகளுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கிடையில் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணியிலிருந்து 3 மணி வரை சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அண்மையில் யாழ்ப் பாணத்திற்கு வருகை தந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா போர்க்காலத்தில் நாட்டை பாதுகாத்த தேசிய வீரர்களான இராணுவத்தினரை ஒருபோதும் தண்டிக்க மாட்டோம். காணாமல் போனோரின் உறவுகள் தமது உறவுகள் எங்கே என்று தான் கேட்கின்றார்கள். மாறாக இராணுவத்தினருக்கு தண்டனை வழங்க வேண்டும் என கோரவில்லை என கூறி சென்றுள்ளார்.

அவர் இவ்வாறு கூறுவது எமக்கு ஒன்றும் புதிதல்ல. செம்மணியில் பல நூறு தமிழர்களை படுகொலை செய்த ஒருவர் இவ்வாறு கூறுவது எமக்கு ஒன்றும் ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. ஆனாலும் காணாமல் ஆக்கப்பட்டோர்தண்டனையை கோரவில்லை என்று சந்திரிகா அம்மையார் கூறுவது ஏற்க கூடியது ஒன்றல்ல. முதலில் தமது உறவுகள் எங்கே என்று தான் கோருவார்கள் அதன் பின்னர் தான் தண்டனையை கோருவார்கள்.

சந்திரிகா அம்மையார் வேண்டுமென்றால் இராணுவத்தினரை தண்டிக்க வேண்டுமா? வேண்டாமா? என்று மக்களிடம் கேட்டு பார்க்கவும். தமிழ் மக்கள் என்ன சொல்வார்கள் என்று அதன் பின்னர் பார்க்கலாம். ஆகவே இவ்வாறு பொய் கூறி திரிவதனை சந்திரிகா நிறுத்த வேண்டும். ஐ.நாவில் கால அவகாசம் கிடைத்த பின்னர் சந்திரிகா இவ்வாறு கூறியது ஐ.நா.தீர்மானத்திலிருந்து இலங்கை தற்போதே விலகி செல்ல ஆரம்பித்துள்ளது என்பதை உணர்த்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

மருத்துவ உதவியாளர்களுக்கான சம்பளச் சிக்கல்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

அரசைக் கோரி அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மருத்துவ உதவியாளர்களுக்கான சம்பளச் சிக்கல்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் தொடர்பில் கண்டனம் தெரிவித்தும் அதனை விரைவில் தீர்த்து வைக்க வலியுறுத்தியும் மருத்துவ உதவியாளர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் யாழ்.போதனா வைத்திய சாலையிலும் நடைபெற்றது.

மருத்துவ உதவியாளர்களின்ஒன்றிணைந்தவேலை நிறுத்தத்தால் வைத்திய சாலைப் பணிகள் பாதிப்படைந்திருந்தது. அரசாங்கம் தமது கோரிக்கைகள் தொடர்பில் பாராமுகமாக இருந்து வரும் நிலையில், நேற்று காலை தொடக்கம் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தமாக இதனை மேற்கொள்ளத் தீர்மானித்து குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தமது அடையாள பணிப்புறக்கணிப்பு அவ்வப்போது தொடரும் என மருத்துவ உதவியாளர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. மருத்துவ உதவியாளர்களுக்கான சம்பளச் சிக்கல்களை தீர்க்க நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் தொடர்பில் கண்டனம் தெரிவிப்பதுடன் அதனை விரைவில் தீர்த்து வைக்க வலியுறுத்துவதே குறித்த அடையாள வேலை நிறுத்தத்தின் நோக்கம் என்று மருத்துவ உதவியாளர்கள் தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய வேலை நிறுத்தத்தில் ஆய்வுகூட உதவியாளர்கள், மருந்தாளர்கள், எக்ஸ்ரே தொழில்நுட்பவியலாளர்கள், உடற்கூறு சிகிச்சையாளர்கள் மற்றும் தொழில்சார் சிகிச்சையாளர்கள் உள்ளிட்ட தரப்பினரும் இணைந்திருந்தனர்.

இதன்காரணமாக அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சை மற்றும் மருத்துவ சேவைகள் தடைப்பட்டிருந்தன. குறிப்பாக எக்ஸ்ரே எடுக்கும் பணிகள் மற்றும் மருந்து வழங்கல் தடைப்பட்டிருந்தமையால் நோயாளர்கள், கிளினிக் வருவோர் பாதிப்படைந்தனர். (இ-4)

மேற்கு மொசூல் நகரில் முன்னெடுக்கப்பட்ட ராணுவ நடவடிக்கையில் 300 பொது மக்கள் பலி!

ஐ.நா.அதிர்ச்சித் தகவல்

(ஜெனிவா)

ஈராக்கின் மேற்கு மொசூல் நகரைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையில் 300 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மேற்கு மொசூல் நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினர். அதனை மீட்பதற்காக கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து இராணுவம் அதிரடி தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அவர்களுக்கு உதவியாக அமெரிக்கா தலைமையிலான சர்வதேச கூட்டுப்படையும் விமான தாக்குதல் நடத்துகிறது. இந்த தாக்குதலின் போது தீவிரவாதிகள் மட்டுமன்றி, பொதுமக்கள் தரப்பிலும் அதிக அளவிலான உயிர்ப்பலி ஏற்படுகிறது.

இந்த சண்டை காரணமாக கடந்த ஒரு மாதத்தில் மட்டும் சுமார் 2 இலட்சம் பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் 6 இலட்சம் மக்கள் ஐ.எஸ். கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் மேற்கு மொசூல் நகரை கைப்பற்றுவதற்காக இராணுவம் தாக்குதலைத் தொடங்கிய தினமான பெப்ரவரி 17 ஆம் திகதியில் இருந்து மார்ச் 22-ஆம் திகதி வரையில் 307 பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், மார்ச் 23 முதல் 26 வரை 95 பேர் பலியாகியிருப்பதாக தகவல் வந்திருப்பதாகவும், அந்த தகவல் சரிபார்க்கப்பட்ட பின்னர், பலி எண்ணிக்கை 400ஐத் தாண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசைன், எந்த குறிப்பிட்ட மரணங்களுக்கும் கூட்டுப்படையை நேரடியாக தனது அலுவலகம் குற்றம் சாட்டவில்லை என்று கூறினார்.

அதேசமயம், பொதுமக்கள் பாதிப்பை குறைப்பதற்கான வழிமுறைகளை அவசரமாக ஆராய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்துவதால் உயிர்ப்பலி அதிகமாவதாக கூறப்படுகிறது. (இ-12)

பெருவில் தரையிறங்கிய போது தீப்பிடித்த போயிங் விமானம்

பயணிகள் அலறல்

(லிமா)

பெரு நாட்டில் பயணிகள் விமானம் தரையிறங்கும் போது இறக்கைகளில் தீப் பிடித்து விபத்து ஏற்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பெரு நாட்டில் ஜாவுஜா நகரில் இருக்கும் அண்டீன் விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் மாலை உள்ளூர் நேரப்படி 4.30 மணிக்கு தலைநகர் லிமாவில் இருந்து 141 பயணிகளை ஏற்றிக் கொண்டு வந்த போயிங் ரக விமானம், விமான நிலைய ஓடுபாதையில் தரையிறங்க வானில் இருந்து கீழ் நோக்கி வந்தது.

தரையிறங்க முயற்சித்த போது திடீரென ஏற்பட்ட கோளாறு காரணமாக ஓடுபாதையின் வலது புறத்தை நோக்கி விமானம் மோதச் சென்றது.

விமானத்தை ஓடுபாதையில் நிறுத்த முடியாமல் விமானி திணறிய நேரத்தில், விமானத்தில் இருந்த பயணிகள் பயந்து கூச்சலிட்டனர்.

இதையடுத்து, திடீரென விமானத்தின் இறக்கைகளில் இருந்து கரும்புகை வெளி வந்து, சிறிது நேரத்திற்கு பின்னர் புகை தீயாக மாறி எரியத் தொடங்கியது.

பின்னர், தானியங்கி தொழில்நுட்பம் மூலம் விமானம் கட்டுப்படுத்தப்பட்டு ஓடுபாதையில் இருந்து விலகிச் சென்ற நிலையில் நிறுத்தப்பட்டது.

விமான நிலையத்தில் இருந்த தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீ உடனடியாக அணைக்கப்பட்டது.

மேலும், பயணிகள் பாதுகாப்பாக விமானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

விமானத்தில் தீப்பிடித்தது குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (இ-12)

பிரிட்டன் விலக பிரதமர் கைச்சாத்து

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியாவை விலக்குவது தொடர்பான உத்தியோகபூர்வ கடிதத்தில் பிரித்தானிய பிரதமர் தெரேசா மே நேற்று புதன்கிழமை கைச்சாத்திட்டுள்ளார்.

லிஸ்பன் விதியின், 50 ஆவது சரத்து செயலாக்கப்படுவது தொடர்பில் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் டொனால்ட் டஸ்க்கிற்கு குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

ஆசியில் பாரிய சேதத்தை ஏற்படுத்திய 'டெபி'

(சிட்னி)

அவுஸ்திரேலிய நாட்டின் கிழக்கு கடலோரப் பகுதியை 'டெபி' என்ற புயல் நேற்று முன்தினம் தாக்கியது. கடற்கரை பகுதியில் மணிக்கு 263 கி.மீ. வேகத்தில் கடுமையான அவுஸ்திரேலிய நாட்டின் கிழக்கு கடலோரப் பகுதியை 'டெபி' என்ற புயல் நேற்று முன்தினம் தாக்கியது.

குயின்ஸ்லாந்து பகுதியில் அமைந்துள்ள பவன், ஏர்லி கடற்கரை பகுதியில் மணிக்கு 263 கி.மீ. வேகத்தில் கடுமையான சூறாவளி வீசியது. 3 ஆவது பிரிவு புயலாக வகைப்படுத்தப்பட்ட இந்த புயல் காரணமாக அங்கு இடைவிடாது, பேய் மழை பெய்தது.

ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்தன. பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. சுமார் 23 ஆயிரம் வீடுகள் இருளில் மூழ்கின. வீடுகள் இடிந்து விழுந்ததில் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். வீடுகளை விட்டு மக்கள் வெளியேற வேண்டாம் என அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

2011 ஆம் ஆண்டுக்கு பிறகு இந்த புயல்தான் மிகுந்த சேதத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பில் குயின்ஸ்லாந்தில் 25 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். பலத்த வேகத்துடன் சூறாவளி வீசிய போது, இடது புறத்தில் இருந்தும், வலது புறத்தில் இருந்தும் மாறிமாறி சரக்கு ரயில்கள் அதிவேகத்தில் சென்றது போல இருந்தது என சுற்றுலா தலமான விட்சண்டே தீவை சேர்ந்த ஒருவர் கூறினார்.

இந்த புயலின் தாக்கம் குறித்து பிரதமர் மால்கம் டர்ன்புல், பாராளுமன்றத்தில் பேரிடர் மீட்பு திட்டத்தை முடுக்கி விட்டுள்ளதாக தெரிவித்தார். (இ-12)

மாணவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

க.பொ.த. உயர்தர மாணவர்கள் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பேருக்கு டெப் கணனிகளை வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக இம்முறை பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு முதலாவதாக டெப் கணனிகளை பெற்றுக் கொடுக்கப் போவதாக கல்வி யமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் வாழ்த்து தெரிவித்துள்ளதுடன் எதிர் பார்த்ததை விட விரைவாக பரீட்சை முடிவுகளைப் பெற் றுத்தர முடிந்தமை மகிழ்ச்சி யளிப்பதாகவும் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது. கடந்த வருடங்களு டன் ஒப்படும் போது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்க ளின் எண்ணிக்கை அதி கரித்துச் செல்வதுடன் குறிப் பாக கணித பாடத்தில் சித்தி யடைவோரின் எண்ணிக் கையும் அதிகரித்துச் செல் கிறது. இந்த நிலையானது நாட்டின் கல்வித் துறையின் சிறந்த முன்னேற்றத்தினையே காட்டுகிறது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட் சையில் அர்ப்பணிப்புடன் கற்று சிறந்த பெறுபேறுக ளைப் பெற்றுக் கொண்டுள்ள மாணவர்கள் உயர்தரத்தி லும் சிறந்த வெற்றிபெற வேண்டுமென பிரார்த்திப் பதாகவும் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கற்கும் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் மாண வர்களுக்கும் 28 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் "டெப்" கணனிகளை வழங்க அர சாங்கம் தீர்மானித்துள்ள துடன் இம்முறை சாதாரண தரத்தில் சித்திபெற்று உயர் தரம் செல்லும் மாணவர்களி லிருந்தே இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக வும் கல்வியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

க.பொ.த. சா/த பரீட்சையில் 8224 மாணவர்கள் 9ஏ சித்தி

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டுக் கான க.பொ.த.சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. இம்முறை சாதாரண தரப் பரீட்சையில் 8,224 மாணவர்கள் ஒன் பது பாடங்களிலும் அதி சிறந்த ஏ சித்திகளைப் பெற் றுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு ஒன் பது பாடங்களிலும் அதி சிறந்த ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களின் எண் ணிக்கை 6,102 ஆக இருந் தது என்று பரீட்சை ஆணை யாளர் நாயகம் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் மற் றும் வரலாறு பாடத்தில் சிறப்பு சித்திகளை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக் கை அதிகரித்துள்ளது. 28,877 மாணவர்கள் கணித பாடத்தில் ஏ சித்தி பெற் றுள்ளனர். இது கடந்த 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 7.63 வீத அதிகரிப் பாகும் என பரீட்சை ஆணை யாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

இந்தியப் பிரதமரின் இலங்கைப் பயணம் குறித்து மகாநாயக்கர்களுக்கு இந்தியத் தூதுவர் விளக்கம்

இலங்கைக்கான இந்தி யத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்து நேற்று முன்தினம் கண்டியில் மகாநாயக்கர் களைச் சந்தித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணம் தொடர் பாக விளக்கமளித்துள்ளார்.

ஜ.நா. வெசாக் நாள் கொண்டாட்டங்களில் பங் கேற்பதற்காக இந்தியப் பிரத மர் நரேந்திர மோடி எதிர் வரும் மே மாதம் இலங்கை வரவுள்ளார்.

இந்தப் பயணம் குறித்து பௌத்த பீடங்களின் மகா நாயக்கர்களை சந்தித்து இந் தியத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்து நேற்று முன்தினம் விளக் கமளித்தார்.

இந்தச் சந்திப்பின் பின் னர் கருத்து வெளியிட்ட இந் திய தூதுவர் தரண்ஜித் சிங் சந்து, பௌத்த மதத்தின் மீது இந்திய பிரதமர் பெரும் மதிப்பை வைத்திருப்பதாகவும், அவர் இலங்கை வரும் போது கண் டிக்குப் பயணம் மேற்கொள் வார் என்று தாம் நம்புவ தாகவும் கூறினார்.

அத்துடன், "இந்தியாவி டம் இருந்து இலங்கைக்குக் கிடைத்த பரிசு தான் பௌத் தம். இந்தியாவும் இலங்கை யும் மிக நெருங்கிய அயல வர்கள், சகோதரர்கள், ஒரே குடும்பத்தினர்" என்றும் இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

இந்தியத் தூதுவருடனான சந்திப்பின் போது, புத்தகாய தொடர்பாக சில கரிசனை களை மகாநாயக்கர்கள் எழுப் பியிருந்தனர், அவை தொடர் பாக தாம் அறியவில்லை என்றும் இந்திய தூதுவர் தெரி வித்துள்ளார். (இ-3)

அடாவடி, ஊழல் அமைச்சர்களுக்கு ராஜபக்ஷ அரசில் மன்னிப்பு இல்லை

பிரசன்ன எச்சரிக்கை

நல்லாட்சி அரசாங்கத் தில் அடாவடி மற்றும் ஊழல் களில் ஈடுபடும் அமைச்சர்க ளுக்கு ராஜபக்ஷ அரசாங்கத் தில் எந்தவித மன்னிப்பும் வழங்கப்பட மாட்டாது என கூட்டு எதிர்க்கட்சியின் முக்கி யஸ்தரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க எச்சரித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சிங்கள சமூக ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றில் பங்குகொண்டு உரையாற் றும் போதே இவ்வாறு கூறி யுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு உள்ளாக்கப் பட்டுள்ள விமல் வீரவன்ச சிறை யில் இருந்து விடுதலை செய் யப்படும் வரை நாங்கள் உயி ரைப் பணயம் வைத்து போரா டத் தயாராக இருக்கின்றோம்.

விமலின் விடுதலை தாமதப்படுத்தப்படும் ஒவ்

வொரு நாட்களும் அரசாங் கத்தின் ஆயுள் குறைந்து கொண்டு போவதாகவே அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தில் அடாவடி மற்றும் ஊழல்களில் ஈடுபடும் அமைச்சர்கள் மற் றும் அவர்களுக்குத் துணை செய்யும் அதிகாரிகள் ஆகி யோர் எதிர்காலத்தில் உரு வாக்கப்படவுள்ள ராஜபக்ஷ அரசாங்கமொன்றில் மன் னிக்கப்படவே மாட்டார்கள்.

மேலும் அவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப் பதில் தயக்கம் காட்டவே மாட்டோம் என கூட்டு எதிர்க் கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான பிரசன்ன ரணதுங்க மேலும் எச்சரித்தார். (இ-7)

இன்று ஒரு தகவல்

நாக்கைப் பிடுங்கிக் கொள்கிறமாதிரி நான்கு கேள்விகள்

உடனே போய் அவனை என்னாச்சுதின்னு கேக்குறேன். கேக்குற கேள்வியில் அவன் நாக்கைப் பிடுங்கிக்கிட்டுச் சாகணும்யா!என்று நரம்பு புடைக்கச் சிலபேர் புறப்படுவார்கள்.

எல்லா நியாயங்களும் போட்டு உடைக்கப்பட வேண்டும் என்று எந்தவிதமான அவசியமும் இல்லை. எல்லா உண்மைகளும் வெட்ட வெளிச்சமாக்கப்பட வேண்டும் என்பதும் கட்டா யமானதல்ல.

யாரும் இப்படிக் கேள்வி கேட்டுவிட்டார்களே என்று நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகத் தயாரில்லை. அது மட்டுமல்ல தங்கள் தவறு களை உணரவும் பலபேர் முன்வருவதே இல்லை. குறிப்பாக எந்த ஒரு மனித மனமும் எதிராளி கோபப்பட்டுப் பேசும் போது தன் தவறை உணர முன்வருவதே இல்லை.

மாறாக அவர்களே உணரும்படி அவகாசம் தரப்படும் போதோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களே நடந்தவற்றில் நியாயங்களை எடுத்துச் சொல்லும் போதோதான் உண் மையை உணர முற்படுவார்கள்.

நமக்கு விசுவாசமாக இருக்க வேண்டிய வர்கள் அநாவசியமாக நம்மைப் பற்றி அல் லது நம்மைச் சார்ந்தவர்களைப் பற்றி பேசி விடும் போது தான்– நன்றி மறக்கும் செயலைச் செய்யும் போது தான் நாக்கைப் பிடுங்கிக்கிற நாலு கேள்வி கேட்கத் தோன்றுகிறது.

இவர்கள் கிடக்கிறார்கள். நாம் நம் வேலை யைப் பார்ப்போம்! என்று மிகப் பெருந்தன் மையான அணுகுமுறையுடன் நடந்து கொள் வதுதான் இவர்களை மாற்றவழி.

பெரிசா நியாயம் பேச வந்திட்டியே! நீ செஞ் சது என்ன நியாயம் ! என்று போத்தல் பால் குடித்த காலத்திலிருந்து நடந்த சம்பவங்களை எடுத்து உதாரணம் காட்டி மனசுக்குள் இருக் கிற வக்கிரகங்களையெல்லாம் வாந்தியாக எடுக்க வேண்டாம். இது நம்மைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை ஒரேயடியாக விரட்டிவிடும்.

உனக்கு நான் இவ்வளவு செய்தேன்! என்று நாமே சொல்லிக் காட்ட வேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டுவிடக் கூடாது. மாறாக அவர் நமக்கு அவ்வளவு செய்தாரே! என்று அவர்கள் உணரும்படியாக நடந்து கொள்வதே நமக்கு வெற்றி. நாக்கைப் பிடுங் கிக் கொள்கிற கேள்விகளால் இத்தகைய மனநிலையை உருவாக்க முடியும் என்று எண் ணுகிறீர்களா? ஒருக்காலும் சாத்தியமில்லை.

நியாயங்களை நாம் உணர்த்த வேண்டும் என்கிற அவசியம் இல்லை. காலம் உணர்த் தும். அதுவரை நாம் காத்திருக்கத்தான் வேண்டும்.

பதில் வார்த்தையே பேச இடமின்றி நாம் கேட்கும் கேள்விகளால் எதிரியைத் திணற வைப்பதற்கு நம்மிடம் பலம் இருக்கலாம். ஆனால் இது ஒரு குரூரமான சந்தோசம்.

வார்த்தைகளை விடும்போது பக்க விளை வுகளையும் பின்விளைவுகளையும் சிந்திக்க வேண்டும்.

இல்லாவிட்டால் வேகத்தோடு எழுகிறவர் கள் சோகத்தோடு அமரவேண்டிய கட்டாயம் ஏற்படும்!

லேனா தமிழ்வாணன்

டவுண்சின்ரோம் பிள்ளைகளின் வளர்ச்சிப்போக்கில் ஆசிரியர், பெற்றோரின் பங்களிப்பு

"முடியும்,இயலும்" என்ற வார்த்தைகளை தாரக மந்திரங்களாய் கொண்டவர்களால் தான் பல சோதனைகளைக் கடந்து சாதனைகளைப்பெறமுடிகின்றது. இதுவே யதார்த்தமானதும் நடைமுறை வாழ்வில் அவதானித்துக் கொண்டிருப்பதுமாகும்.

"முடியாது, இயலாது" என்று மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாது மௌனிப்பவர்களால் எதனையும் சாதித்துவிடவும் முடியாது என்பதே உண்மை.

அந்தவகையிலேதான் இன்றைய வகுப்பறை சூழலில்பல்வினத்தன்மை கொண்ட பல மாணவர்கள் காணப்படுகின்றனர்.

குறிப்பாக உடல் சார்ந்த, புலன் சார்ந்த, மொழிசார்ந்த, பேச்சு சார்ந்த, நுண்ணறிவு சார்ந்த குறைபாடுடைய மாணவர்களும் சராசரியான திறமை கொண்ட மாணவர்களும் மீத்திறன் தன்மை கொண்ட மாணவர்களும் என்று பல்லினத்தன்மை கொண்ட மாணவர்கள் காணப்படுகின்றனர்.

எனவே இம்மாணவர்களை சரியாக இனங்கண்டு அம்மாணவர்களுக்கு ஏற்ற விதமாக கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலமே மாணவர்களின் நடத்தையில் சரியான மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

மாறாக சராசரி பிள்ளைகளை விடவேறுபட்ட இயல்புகளையுடைய கற்றலிலே சரியான துலங்களைக் காட்ட முடியாத மாணவர்களை புறந்தள்ளி இன்றைய கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாது. காரணம் இன்று கல்வி என்பது அனைவரினதும் உரிமை. "அனைவருக்கும் கல்வி" என்பதே இன்றைய நடைமுறை. எனவே மாற்றங்களை ஏற்று "முடியும்" என்ற கொள்கையுடன் அனைவரையும் உள்வாங்கி கற்பித்தலே சிறந்த பலனைத்தரும்.

அந்தவகையிலேதான் நாம் இன்று பார்க்கப் போகின்ற டவுண்சின்ரோம் உடைய பிள்ளைகளும் அறிவு சார்ந்த மற்றும் உடல் சார்ந்த, பேச்சு சார்ந்த இயலாமையினால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதைக் காண முடியும். இனி இத்தன்மையுடையவர்கள் பற்றி விரிவாகப்பார்ப்போம்.

டவுண்சின்ரோம் (Downsyndrome) என்றால் என்ன?

குழந்தைகள் பிறக்கின்ற போதேஅறிவுசார்இயலாமையை ஏற்படுத்துகின்ற பிறப்புரிமைக் காரணியாகும். இது பிள்ளையின் விருத்தியில் அதிகளவான தாமதத்தை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக நடத்தல், பேசுதல், உடல் வளர்ச்சி, கற்றல் என்பனவற்றில் தாமதத்தை ஏற்படுத்துகின்றது.

ஒரு பிள்ளை தனது பெற்றோரிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற 46 நிற மூர்த்தங்களின் ஊடாகவே பிறப்புரிமை இயல்புகளைப் பெற்று மரபுரிமை பெறுகின்றது. குறிப்பாக 23 நிறமூர்த்தங்கள் தாயிடமிருந்தும் 23 நிற மூர்த்தங்கள் தந்தையிடமிருந்தும் கடத்தப்படுகின்றன. இவ்வாறு ஒரு குழந்தையின் 23 சோடி நிற மூர்த்தங்களில் 21 ஆவது நிறமூர்த்தத்தில் இரண்டு நிறமூர்த்தத்திற்குப் பதிலாக மூன்று நிற மூர்த்தங்கள் காணப்படுமாயின் டவுண்சின்ரோம் குழந்தை உருவாக அது காரணமாகின்றது என மருத்துவத் தகவல்கள் கூறுகின்றன.

எனவே 21 ஆவது நிற மூர்த்த சோடியில் ஏற்படுகின்ற அதிகரிப்பே டவுண்சின்ரோம் குழந்தை பிறக்க காரணமாக அமைகின்றது. மேலும் தாய்மார் அதிகரித்த வயதில் குழந்தை பெற்றுக் கொள்வதினாலும் இவ்வாறாக பிள்ளைகள் பிறக்கவாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனை மனநலிவு மங்கோலிய ஊனம் என்றும் கூட கூறுவதுண்டு. மங்கோலிய ஊனம் என்று கூறுவதற்குக் காரணம் இப்பிள்ளைகள் மங்கோலியர்களைப் போன்ற சாயலைக் கொண்டிருப்பதனால் இவ்வாறு அழைக்கப் படுகின்றனர்.

உண்மையில் டவுண்சின்ரோம் எனப்பெயர் வரக் காரணம் Longdon Down என்பவர் தான். இதனை முதன்முதலில் இவர் வகைப்படுத்தியமையால் அவருடைய பெயரினை இணைத்து Downsyndrome எனப் பெயரிடப்பட்டது.

சாதாரணமாக பிள்ளைகளின் நுண்ணறிவு ஈவு (IQ) 90 - 110 ஆக காணப்படுகின்றது. ஆனால் டவுண்சின்ரோம் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் இவர்களின் நுண்ணறிவு ஈவு (IQ) 50 -70 ஆகவோ அல்லது அதைவிட சற்று அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும். ஆனாலும் பெரும்பாலும் நுண்ணறிவு ஈவு 70 ஐ விட குறைவாகவே அதிகமான பிள்ளைகளுக்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

டவுண்சின்ரோம் பிள்ளைகளின் பொதுவான பிரச்சினைகள

உடல் வளர்ச்சித்தாமதம், அறிவுசார்ந்த இயலாமை, கேட்டல் மற்றும் பார்வை சார்ந்த பிரச்சினைகள், இதயம் தொடர்பான நோய்கள, அடிக்கடி தொற்றுநோய்கள் ஏற்படுதல், நோய் எதிர்ப்பு சக்திகுறைவு, நித்திரையில் மூச்சுத்திணறல் போன்ற பிரச்சினைகள் காணப்படும். மேலும் இவற்றை மாற்றியமைக்க முடியாது. எனினும் முறையான கல்வித் திட்டங்கள் மற்றும் தொடர் பயிற்சிகள் மூலம் இவர்களை மேம் படுத்தி வெற்றி காணலாம்.

டவுண்சின்ரோம் உடைய பிள்ளைகளின் பொதுவான தோற்றம்

பொதுவாக தலையின் முன்புறம் மற்றும் பின்புறம் தட்டையாக காணப்படும், சிறிய காதுகளைக் கொண்டிருப்பர், கண்கள் மேல் நோக்கி சரிந்திருக்கும், கண்களில் தசைமடிப்புக்கள் காணப்படும் (மேல் இமை), வாயின் பருமனைவிட பெரிய நாக்கு காணப்படுதல், உள்ளங்கையில் ஒற்றை குறுக்கு கை ரேகை மடிப்பு காணப்படும், சிறிய கன்னம் காணப்படும், தலைமுடி சிலிர்த்துக் காணப்படும், நாக்கு தடிப்பாக காணப்படும், கழுத்து மிகவும் குட்டையாக காணப்படும், வாய் திறந்த படி இருக்கும், விரல்கள் குட்டையாகக் காணப்படும், கால் பெருவிரலுக்கும் இரண்டாவது விரலுக்கும் இடையில் கூடிய இடைவெளி காணப்படும். பொதுவாக உயரம் குறைந்தவர்களாக காணப்படுவர், சாதாரணமானவர்கள் நடப்பதைவிட இவர்களின் நடை சற்று மாறுபட்டுக் காணப்படும். மூக்குப் பெரிதாகவும் மேற்பகுதி தட்டையானதாகவும் காணப்படும். இவ்வாறாக அங்க அடையாளங்களைக்கொண்டு இவர்கள் காணப்படுவர்.

இப்பிள்ளைகளிடத்தே உள்ள சாதகமான விடயங்களையும் பாதகமான நடத்தைகளையும் சரியாக கையாள்வது எப்படி?

இப்பிள்ளைகளின் பொதுவான பிரச்சினைகள் மற்றும் தோற்றம் பற்றி தெளிவான விளக்கத்தினை நாம் பெற்றிருக்கின்றோம். அடுத்து அப்பிள்ளைகளிடத்தே காணப்படும் சாதகமான மற்றும் பாதகமான நடத்தைகளை சரியாக இனங்கண்டு கொள்வதன் ஊடாக இப் பிள்ளைகளிடத்தே சிறந்த நடத்தை மாற்றத்தையும் அறிவு சார்ந்த இடர்பாட்டையும் ஓரளவு நிவர்த்தி செய்யமுடியும்.

டவுண்சின்ரோம் பிள்ளைகள் மற்றவர்கள் மீது அதிக அன்பு செலுத்துபவர்களாக காணப்படுவர். எனவே அவர்களுக்கு எதனையும் அன்பாக கூறுவதன் மூலம் செயற்பாடுகளை செய்விக்கமுடியும். அதுபோல இசை, நடனம் போன்றவற்றில் அதிகம் ஆர்வமுடையவர்களாக காணப்படுவார்கள். எனவே ஆசிரியர்களும் பெற்றோரும் நடனம் மற்றும் இசைப் பயிற்சிகளை வழங்கி பிள்ளைகளை அத்துறையில் முன்னேற்ற முடியும். பல டவுண்சின்ரோம் மாணவர்களுடனான நிகழ்வுகளில் பிரகாசிப்பதை நேரடியாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் கண்டு இரசித்திருக்கின்றோம். எமது நாட்டில்டவுண்சின்ரோம் மாணவி ஒருவர் தனது ஆசிரியர்களின், பெற்றோரின் வழிகாட்டலுடன் அயராது பாடுபட்டு இன்று ஒருநடன ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருப்பது எமக்கு சாலச்சிறந்த ஒரு எடுத்துக்காட்டாகும்.

அத்துடன் Sunera Foundation என்ற நிறுவனம் டவுண்சின்ரோம் நடனக் கலைஞர்களை உருவாக்கி அவர்களைக் கலைத்துறையில் கால்பதிக்க செய்கின்றது. அத்தோடுசர்வதேசபோட்டிகளில் கூட பங்கெடுக்கச் செய்துள்ளது.

அத்துடன் இப்பிள்ளைகளில் பின்பற்றிச் செய்யும் தன்மை அதிகளவு காணப்படுகின்றது. குறிப்பாக வேலை செய்வதைப்பார்த்தால்அதனை அப்படியே செய்யும் திறன் இப்பிள்ளைகளில் இயல்பாகவே காணப்படுகின்றது. உதாரணமாக ஒருபிள்ளையின் தந்தை முகச்சவரம் செய்கின்றார் என வைத்துக்கொண்டால்இதனை அவதானித்த அப்பிள்ளை அவ்வாறே தானும் முகச்சவரம் செய்வதைப் போன்று பாவனை செய்வர்.

எனவே இப்பிள்ளைகளுக்கு அதிகளவான செயற்பாடுகளின் ஊடாக ஒரு விடயத்தை தெளிவுபடுத்தி பயிற்சிகளை வழங்கும் போது அச்செயற்பாட்டில் மிகுந்த திறமைகளை காட்டுவர். விருத்தியடைந்த நாடுகள் மற்றும் எமது அண்டை நாடான இந்தியா போன்ற நாடுகளில் பல தொழிற்சாலைகளில் இவ்வாறானவர்கள் பணியாற்றுவது நல்லதொரு எடுத்துக் காட்டாகும்.

கட்டளைகளுக்கு ஏற்ப இயங்கும் தன்மை அதிகளவில் காணப்படும். எனவே ஆசிரியர்களும் பெற்றோர்களும் இப்பிள்ளைகளுக்கு சரியான அறிவுறுத்தல்களை வழங்கி பயிற்சியளிப்பதன் மூலம் குறிப்பிட்ட ஏதாவது விடயங்களை செய்யுமாறு கூறுகின்ற போது பிள்ளைகள் அதற்கேற்றவாறு சரியாக துலங்குவதற்கு வழிப்படுத்தலாம்.

அத்துடன் இப்பிள்ளைகள் பேசுவதைவிட அதிகம் செவிமடுக்கும் ஆற்றல் கொண்டவர்கள்.

எனவே பிள்ளை பேசும் வரை காத்திருக்காது சிறு வயதிலிருந்து பலசொற்களை அறிமுகஞ்செய்தல் வேண்டும். அச்சொற்களை அவர்கள் கிரகித்துக் கொள்வார்கள்.

உதாரணமாக தொப்பி என்று தொப்பியைக் காட்டிக் கூறும்போது பிள்ளை தொப்பி என்று கூறுவதில் சிரமம் காணப்படலாம். அல்லது கூறாமலும் விடலாம். இதனால் பிள்ளைக்கு தொப்பியைத் தெரியாது எனக் கருதுவது பொருத்தமற்றது.

பிறிதொருநாளில் தொப்பியை எடுத்து வாருங்கள் எனக்கூறும் போது பிள்ளை தொப்பியை எடுத்துவரும். எனவே அதிகளவு பிள்ளை செவிமடுக்கக் கூடியவாறு பெற்றோரும் ஆசிரியரும் சொற்களஞ்சிய விருத்தியை ஏற்படுத்தல் வேண்டும். இச்சொற்களஞ்சிய பயிற்சியை பிள்ளையின் ஆரம்ப கால கட்டத்தில் குறிப்பாக 2 , 3 வயதுகளில் ஆரம்பிப்பது சிறந்த பயனைத்தரும்.

இவர்களின் பாதகமான நடத்தையாக உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமையைக் குறிப்பிடலாம். எனவே இவர்களை ஏனைய மாணவர்களோடு இணைத்து குழுச்செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், நன்றாக விளையாட்டுச் செயற்பாடுகளில் ஆர்வத்தை ஏற்படுத்தல், இசையில் அதிகளவு நாட்ட மிருப்பதனால் இசைத்துறையில் பயிற்றுவித்தல் மூலம் ஓரளவு உணர்ச்சியை கட்டுப்படுத்திக் கொள்ள பழக்கிக் கொள்ள முடியும்.

மேலும் அதிகளவு கவனக்குறைவு, புரிந்து கொள்வதில் தாமதம் போன்ற விடயங்கள் காணப்படுவதன் காரணமாக அதிகளவு மாதிரிப் பொருட்களைக் கையாண்டு செயற்பாட்டு முறைகளினூடாகப்பயிற்சிகளை வழங்குகின்ற போது அவர்களின் கவனத்தை ஈர்க்க முடியும்.

அத்துடன் இப்பிள்ளைகள் குறைவான நேரத்தில் ஒரு குறிப்பிட்ட செயலில் மட்டுமே கவனத்தை செலுத்துவதனால் சிறிய விடயம் ஒன்றிலிருந்து படிப்படியாக நேரத்தை அதிகரித்து சிறிது சிறிதாக செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதன் மூலம் பிள்ளையின் கவனம் செலுத்துவதற்கான நேரத்தை அதிகரிக்கமுடியும்.

கற்றல் கற்பித்தல் முறைகளை எவ்வாறு கையாளலாம்?

ஒவ்வொருபிள்ளைக்கும் தனியான பாட ஆயத்தம் செய்து நாளாந்த கற்பித்தல் திட்டத்தினைத் தயாரித்து அமுல்படுத்தவேண்டும். குறிப்பாக பாட ஆயத்தம் செய்யும் போது பிள்ளையின் இயலுமைக்கேற்ப பாடத்திட்டமிடல் கள் மேற்கொள்ளப்படுவதுடன் படிமுறையாக கற்பித்தல் வேண்டும்.

இங்கு தனியான கவனிப்பு தொடர்ச்சியாக பிள்ளையின் மீது இருத்தல் வேண்டும் என்பதுடன் அதிகளவில்மாதிரிகளைக் காண்பித்து கவர்ச்சிகரமான முறையில் கற்பித்தல் சிறந்ததாகும். அத்துடன் தினந்தோறும் திரும்பத் திரும்ப ஒரு குறிப்பிட்ட விடயத்தைச் சொல்லிக் கொடுப்பதன் மூலமே பிள்ளையிடத்தே முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். பாடத்திட்டத்தை மிகவும் எளிமையாக தயாரித்தல் நன்று. கடுமையான பாடத்திட்டத்தினை பிள்ளையின் மீது சுமத்துவதனால் எந்தவொரு நன்மையும் கிட்டப்போவதில்லை. பிள்ளைக்கு தெரிந்ததிலிருந்து தெரியாததை மிகவும் சிறிய சிறிய பகுதிகளாகப் பிரித்து கற்பித்தல் சிறப்பானதாகும்.

அத்துடன் தினந்தோறும் பிள்ளைக்கு பேச்சு மொழிப் பயிற்சிகளை அளித்து வருவதன் மூலம் பிள்ளையிடத்தே சரியான உச்சரிப்புத் தெளிவினை ஓரளவும் ஏற்படுத்த முடியும்.

எனவே டவுண்சின்ரோம் பிள்ளைகளைக் கையாளும் பெற்றோரும் ஆசிரியர்களும் பிள்ளையின் இயலுமைக் கேற்ப அதாவது சில டவுண்சின்ரோம் பிள்ளைகள் நுண்ணறிவு மட்டம் உயர்ந்தவர்களாக சிலர் சராசரியாக சிலர் குறைவாக இருக்கலாம். எல்லா டவுண்சின்ரோம் மாணவர்களும் ஒரே மாதிரி இருப்பார்கள் என்று கூற முடியாது.

எனவேதான் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஏற்ற விதத்தில் செயற்பாடுகளை முன்னெடுத்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் டவுண்சின்ரோம் பிள்ளைகளில் அறிவுசார் விருத்தியை ஏற்படுத்தி அப்பிள்ளைகளின் வாழ்வில் நல்லதொரு வழியைக் காட்டிட முடியும்.

த.உதயராஜன்
ஆசிரியஆலோசகர்
(விசேடகல்வி)

அம்பாந்தோட்டையை சீனாவுக்கு வழங்குவது இந்தியாவிற்கு பாரிய அச்சுறுத்தலாகும்

இராஜதந்திரி ஜி.பார்த்தசாரதி எச்சரிக்கை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிடம் இலங்கை கையளிக்கவுள்ளதானது, இந்தியாவுக்குப் பாரிய அச்சுறுத்துலாக மாறியுள்ளது என்று டில்லியைத் தளமாகக் கொண்ட கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின் பேராசிரியரான இராஜதந்திரி ஜி.பார்த்தசாரதி எச்சரித்துள்ளார்.



சென்னை அனைத்துலக நிலையத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய, இந்தியாவின் முன்னாள் மூத்த இராஜதந்திரியான ஜி.பார்த்தசாரதி அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

"பாதுகாப்பு மற்றும் பொருளாதார விவகாரங்களில் சீனாவுடனான தொடர்புகள் இந்தியாவுக்கு முக்கியமானது.

தனது இருப்பை வலுப்படுத்துவதற்காக சீனா பாரிய பொருளாதார முதலீடுகளின் மூலம் இந்தியாவை சுற்றி வளைத்துள்ளது.

சீனாவின் நிதியில் பாரிய உட்கட்டமைப்பு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இலங்கை கடன்பொறியில் விழுந்துள்ளது.

கடனுக்குப்பங்குகள் என்ற அடிப்படையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிடம் கையளிக்கவுள்ளது இலங்கை. இது இந்தியாவுக்குப் பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

பாகிஸ்தானில், நேபாளத்தில், ஆபிரிக்காவிலும் கூட சீனா பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடு செய்துள்ளது.

50 பில்லியன் டொலர் சீன- பாகிஸ்தான் பொருளாதார தாழ்வாரத் திட்டத்தினால், இலங்கையின் வழியில் பாகிஸ்தானும் செல்லக் கூடும். சீனாவின் பொருளாதாரம், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட ஐந்து மடங்கு பெரியது. அது பாதுகாப்புக்காக இந்தியாவை விட 6-8 எட்டு மடங்கு அதிகமாக செலவிடுகிறது.

சீனாவின் சவாலை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், எந்தவொரு அயல் நாட்டுடனும் மோதிக்கொள்வது சரியானதல்ல.

அடுத்த இரண்டு பத்தாண்டுகளில் இந்தியா பொருளாதார அபிவிருத்தி மீது கவனம் செலுத்த வேண்டும். பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். ஆனால் தீவிர தேசியவாதத்தை தவிர்க்க வேண்டும். காட்சிப்படுத்தலுக்கு அப்பால் பலத்தை உறுதிப்படுத்த வேண்டும். இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு இந்தியா 15 பில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியுள்ளது.

தமிழர்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது. 500 உழவு இயந்திரங்களையும் 10 ஆயிரம் மிதிவண்டிகளையும் 90 ஆயிரம் விவசாய கருவிகளையும் 200 மீன்பிடிப் படகுகளையும் இந்தியா வழங்கியுள்ளது.

விமான நிலையங்களைப் புனரமைத்து, தொடருந்துப் பாதைகளை மீளமைத்துக் கொடுத்திருக்கிறது.

இலங்கையில் இந்தியா எதைச் செய்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்று பார்க்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

முதலமைச்சர் விக்னேஸ்வரன் உறுதி

(யாழ்ப்பாணம்)

தமிழ் இனத்துக்கு எதிராக காலம்காலமாக தனிப்பட்டவர்களால் குற்றம் இழைக்கப்பட்ட போது, அவற்றை அரசாங்கம் தடுக்காமல் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தமையால் தான் தமிழர்கள் இனப்படுகொலையை எதிர்நோக்குகின்றார்கள் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஆகிய மாவட்டங்களை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடைய பிரநிதிகளுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கிடையில் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியிலிருந்து 3 மணிவரை சந்திப்பொன்று நடைபெற்றது. இந்த சந்திப்பின் பின்னர் தனிப்பட்ட ஒரு சிலரால் தான் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டதாக கூறியுள்ளீர்கள்.

அவ்வாறு என்றால் வடக்கு மாகாண சபை எதற்காக இனப்படுகொலை என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. தனிப்பட்ட ஒருவரால் தமிழர்களுக்கு எதிராக குற்றம் இழைக்கப்பட்டால் அது எவ்வாறு இனப்படுகொலை என்ற வகைக்குள் வரும் என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவது என்றால் குற்றங்கள் எத்தனையோ செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு காலப்பகுதியிலும் தமிழர்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருந்தன. இந்தக் குற்றங்கள் தனித்துவமான இனம் ஒன்றுக்கு எதிராக குற்றங்கள் நடைபெறும் போது அவற்றை தடுக்காமை இருந்தமை நாட்டை ஆண்ட அரசுகளின் குற்றம் என்பதனை தான் கூறுகின்றேன்.

குற்றம் ஒவ்வொரு நாட்டிலும் தான் நடைபெறுகின்றன. ஆனால் குறிப்பிட்ட ஒரு இனத்துக்கு எதிராக குற்றங்களை இழைத்தார்கள் என தெரிந்து கொண்டு அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அந்த நாட்டினுடைய அரசாங்கத்தினுடைய குற்றமாகும். ஆகவே தான் தமிழ் மக்கள் இனப்படுகொலையை எதிர்நோக்குகின்றார்கள் என்று கூறுகின்றேன்.

போரிலே வெல்லும் போது சட்டத்துக்கு புறம்பானவகையில் செயற்பட்டவர்களை தான் தண்டிக்குமாறு சர்வதேசமும் நாமும் கோரி வருகின்றோம். போரில் ஈடுபட்டமையால் அவர்களை தண்டிக்க வேண்டும் என எங்கு எவரும் சொல்லவில்லை. ஆகவே சில நேரங்களிலே ஒரு குழுவில் ஒருவர் பிழை செய்தால் பிழை செய்தவரை தண்டிக்க வேண்டும். அதற்காக அந்த குழுவை தண்டிக்க வேண்டும் என்றல்ல.

தனிப்பட்ட ஒருவர் அல்லது தனிப்பட்ட சிலர் சட்டத்திற்குப் புறம்பான முறையிலே போர்க்காலத்திலே அல்லது போர் முடியும் காலத்திலே செய்திருந்தால் அவர்களை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் கேட்கின்றோமேயொழிய இராணுவத்தினர் அனைவரையும் தண்டிக்கவேண்டுமென்று எங்குமே கேட்கவில்லை. என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

போராட்டம் தொடர்கிறது





காணாமற் போனோரின் உறவினர்களால் வடமராட்சி கிழக்கு- மருதங்கேணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு பெருமளவானோர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். நேற்று புதன்கிழமை பதினைந்தாவது நாளாகவும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டத்திற்கு ஆதரவாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் பங்கேற்றனர். (இ-64)

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிகள், பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து தெல்லிப்பழை சந்தியில் உள்ள வாணிப நிலையங்கள், வீடுகள் என்பவற்றில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அத்தோடு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி போன்ற இடங்களிலும் சோதனை நடவடிக்கையில் நேற்றுக்காலை 6.30 மணியிலிருந்து ஈடுபட்டனர். இதுவரை கால டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் 40 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் 100 பேருக்கு எச்சரிக்கைப் படிவம் வழங்கியுள்ளதாகவும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் நந்தகுமார் தெரிவித்தார். (படங்கள்:- தெல்லிப்பழை செய்தியாளர்)

போதையில் இருப்போரை கண்டுபிடிக்க நடவடிக்கை

(கொழும்பு)

போதையில் வாகனங்களை செலுத்துகின்ற சாரதிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அத்துடன் சாரதிகள் மது அருந்தியிருக்கின்றனரா என்று கண்டறிவதற்கு மிகவும் செயற்பாடுடைய கருவியான பிரெளத்தலைஸர் பயன் படுத்தப் படவுள்ளது என்றும் அத்தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-3)

வெளிநாட்டு நாணயத்தாள்களை மாற்றலாம் எனக்கூறி நிதிமோசடி

மொறட்டுவ பகுதியில் நிதி மோசடியில் ஈடுபட்டு வந்த 51 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் வெளி நாட்டு நாணயத்தாள்களை இங்கு மாற்றிக்கொள்ளலாம் என்றும் அதற்கான வசதிகள் தன்னிடம் இருப்பதாகவும் குறிப்பிட்டு மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து இரண்டு அடையாள அட்டைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுத்து வருவதாகவும், சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மொறட்டுவ பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

கைது செய்யப்படும் போது

பன்றி தாக்கி ஒருவர் பலி

உடுநுவர - வெளம்படபிர தேசத்தை சேர்ந்த ஒருவர் காட்டுப் பன்றியின் கொடூரத் தாக்குதலில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

வெளம்பட பிரதேசத்தை சேர்ந்த 67 வயது மதிக்கத்தக்க பிஜிமத்தும பண்டா என்ற நபரே நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், வயலில் அறுவடை முடிந்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் காட்டுப் பன்றியின் தாக்குதலுக்குள் ளாகியுள்ளார்.

இதனை அவதானித்த மற்றும் இரு நபர்கள் தங்களது உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக மரத்தின் மீது ஏறி கூச்சலிட்டுள்ளனர்.

அவர்கள் எழுப்பிய சத்தத்தினால் காட்டுப் பன்றி அவ்விடத்தை விட்டு ஓடி விட்டதாகவும், பின்னர் இருவரும் படுகாயமடைந்த நபரை, பறதெனிய வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

எனினும் வைத்தியசாலைக்கு செல்லும் முன்னரே குறித்த நபர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பில் வெளம்பட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

சுகாதார நிலைமைகளை ஆராய வடக்கு வருகிறார் அமைச்சர் ராஜித

வடக்கு மாகாணத்தின் சுகாதார நிலைமைகள் தொடர்பில் ஆராயுமுகமாக மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன வடக்கு மாகாணத்திற்கு 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் ஊடக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மாகாண சுகாதார அமைச்சினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நிதிப்பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. இந்த நிலையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் ப. சத்தியலிங்கத்தின் அழைப்பின்பேரில் மத்திய சுகாதார அமைச்சர் வடக்கு மாகாணத்திற்கு 2 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் வடக்கில் தங்கியிருக்கும் இவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளையும், திணைக்களத் தலைவர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார் என அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1029

Search for people, places and things — Nagendram Home

ஜெனனி

மற்றவங்க பிரச்சினைன்னா நம்ம மூளை பயங்கரமா வேலை செய்யுது.

நமக்கு ஒரு பிரச்சினைன்னா கிணத்தில போட்ட கல்லு மாதிரி அப்படியே இருக்குது. என்ன டிசைன்னோ

கிருபா

Tweet

Be Like Sagala
@belikesagala

நல்லவங்களை ஆண்டவன் நிறையச் சோதிப்பான், அப்புறம், அவங்களுக்கு அதுவே பழகிடுச்சு போலன்னு அப்படியே விட்டிடுவான்.

கண்ணன்

அழகில்லாத ஆண்களை இறைவன் இன்னும் படைக்கவில்லை!! ரசனையில்லா கண்களைதான் சில பெண்களுக்கு படைத்துவிட்டான்..

@LaughingSagala

கதிர்



வெள்ளைக்காரன் நமக்கு சுதந்திரம் கொடுத்தானா?

இல்ல நாம அவனுக்கு சுதந்திரம் கொடுத்தமான்னு தெரியல...

கலா

கிராமத்திற்கு வந்தால் கறுப்பாகி விடுவோமே என்று பயப்படுகிறவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது...தமிழ்நாட்டின் தேசிய நிறமே கறுப்புத்தான் என்று...!
கறுப்புத்தான் அழகு.

வினோத்

செஞ்ச பாவத்துக்கு நரகத்திற்கு தான் போவோங்கிறதுல யாருக்கும் வருத்தமில்லை....

அங்க....நெட் கனெக்சன் இருக்குமாங்கிறதுல தான் வருத்தமா இருக்கு...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை - 2016 பெறுபேறுகள்

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை - 2016 பெறுபேறுகள் கடந்த திங் கட்கிழமை வெளியாகின. இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தி லுள்ள பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் வருமாறு,

யாழ்.இராமநாதன் கல்லூரி

தே.நிவேதிதா- 8ஏசி, ச.சலோமி- 7ஏபிசி, வி.கிஷாலினி- 7ஏசிஎஸ், சு.தாட்சாஜினி- 6ஏசி2எஸ், ர.பௌத் திரா- 5ஏ2பிசி.

யாழ்.கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

இ.தரணியா-7ஏ2பி, ச.முகுந் தினி-7ஏபிசி, இ.இராஜஜிந்திரன்- 6ஏ3பி, சி.யனுசியா-6ஏபி2சி, க.விதுரா-4ஏ3பி2சி, கே.யதுர்சன் -4ஏபிசி2எஸ், பி.இஷானிகா-2ஏ 3பிசி3எஸ், ச.அகிலவன்-ஏ4பி4சி, இ.இந்துஜா-2ஏ3சி3எஸ், இ.லக் சிகா-ஏ3பி2சி2எஸ், ம.பவித்திரன் -ஏ2பி3சி3எஸ், இ.வினோத்-ஏ2பி 4சிஎஸ், வா.டிலக்சனா-ஏபி3சி3எஸ்.

யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

சி.சாம்பவி-9ஏ, கி.அபியா- 8ஏபி, ச.பிருத்திகா-6ஏ2பி, வ.குயி லினி-6ஏ2சிஎஸ், வி.சாளினி-4ஏ 4பிசி.

யாழ்.அத்தியார் இந்துக் கல்லூரி

லோ.நிலானி - 6ஏபி2எஸ், வி.கீர்த்திகன்- 5ஏ3பிசி, த.சரணியா - 5ஏ3பிஎஸ், த.திருக்குமரன்- 5ஏ 3பிஎஸ், கோ.நிவேதிகா- 5ஏ2சி 2எஸ், க.டக்சயன் - 4ஏ3பிசிஎஸ், ரா.நிசாங்கன்-4ஏ2பி2சிஎஸ், ம.கார்த் திகன்- 4ஏ2பி2சி, ஸ்ரீ.தர் சனா - 4ஏபி2சிஎஸ், சி.பிரியங்கா - 3ஏ4பி சிஎஸ், ஸ்ரீ.யதுர்சன்-3ஏ2பி2சி2எஸ், பா.கயூரன்- 3ஏ 2பி2சி2எஸ்.

யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

இ.வதுசனா - 8ஏபி, ர.அகிலா- 8ஏபி, அ.சுகன்யா- 8ஏபி, வ.டிலானி -8ஏபி, சி.பாணுஜா - 7ஏ2பி, சி.கயூ ரன் - 7ஏ2சி, ஜோ.ஜனுசன் - 6ஏ2பி எஸ், க.சர்மினி - 5ஏபி3சி, ச.தர்சன் -5ஏ2பிசிஎஸ், க.துவாரகன் - 5ஏ3பி, க.கம்சனா - 4ஏ4பிசி, அ.நவோ மியா - 4ஏ3பிசிஎஸ், ர.மோகனப் பிரியா -4ஏ3பிசிஎஸ், ப.ஜெரோன்- 4ஏபி4சி, வி.தர்சன் - 4ஏ2பி2சி, ம.றிசிகா - 4ஏ2பி2சி.

யாழ்.புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

ஜோ.கர்மி -8ஏஎஸ், டெ.ஷபா - 7ஏபிசி, ப.மேரி தனுஷா -7ஏபிஎஸ், டி.பிரவினா- 4ஏ4பிஎஸ், தொ. அஜிந்தினி -4ஏபி3சி, சு.தமிழினி- 3ஏ3பிசிஎஸ், றெ.இதயநிலா-3ஏபி 3சிஎஸ், அ.ஆன்டென்சியா-2ஏ3பி 2சிஎஸ், ப.டெனோஷியா-2ஏபி4சி 2எஸ், வி.சிந்துக்கா-2ஏபி4சிஎஸ், டொ.ஜெனிபா-2ஏ4சி2எஸ், கி.மேரி ஜெனுயா-2ஏசி4எஸ்.

யாழ். மணற்காடு றோ.க.த.பாடசாலை, குடத்தனை

அ.மரிய றொசானா-5ஏபி2சி எஸ், அ.பிறிசாந்தினி-4ஏ2பிசிஎஸ், தோதயாளசீலி-4ஏ2பிசிஎஸ், ஜெ.ஜெய தாஸ்-3ஏ3பி2எஸ், ம. மயூரன்-2ஏ 4பிசிஎஸ், கி.மேரி வின்சலா-2ஏபி 3சிஎஸ், அ.அலெக்ஸ்சனா-2ஏ2பி3சி.

யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி

ஆர்.டிலுக்ஷன்-8ஏபி, கே.கெலிஸ் ரன்-7ஏபிஎஸ், எம்.கிஷாந்தன்-6ஏ 2பிசி, எம்.அனந்ராஜ்-6ஏ2பி எஸ், ஆர்.சிவயன்-5ஏ3பி, ரி.தமிழரசன்- 5ஏ2பிசி, எஸ்.சிவதர்ஷன்- 4ஏ 2பி2சி. (இ-3-7-12)

விடாமுயற்சி வெற்றிதரும்
பரீட்சையில் முதலிடம் பெற்ற மாணவன் அபிநந்தன் கருத்து

(யாழ்ப்பாணம்)

விடாமுயற்சியுடன் கல்வி கற் றால் சாதிக்க முடியுமென அகில இலங்கை ரீதியில் (தமிழ்மொழி மூலம்) முதலிடத்தை பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாண வன் அரு ளானந்தம் அபிநந்தன் தெரிவித் துள்ளார்.

யாழ்.இந்துக் கல்லூரியில் கல்வி கற்று க.பொ.த சாதாரண பரீட் சைக்கு தோற்றி 9ஏ பெறுபேறு களை பெற்று அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலிடத்தையும் தேசிய ரீதியில் அனைத்து மொழிமூலம் 5 ஆம் இடத்தையும் பெற்றுள்ள அருளா னந்தம் அபிநந்தன் யாழ்.மாவட் டத்தில் முதலாமிடத்தையும்பெற் றுள்ளார்.

தான் பெற்ற பெறுபேறு குறித்து அபிநந்தன் மேலும் தெரிவிக் கையில்,

எனது தாயார் ஆசிரியராகவும், தந்தையார் மருந்தாளராகவும் பணியாற்றி வருகின்றார்கள். எனது கல்வி வளர்ச்சிக்கு எனது பெற் றோர்கள், எனது சித்தி, ஆசிரியர் கள், நண்பர்கள், ஆகியோர் உறுதுணையாக இருந்தார்கள்.

நான் எனது கல்வியை வரு டாந்த வினாத்தாளை செய்முறை ரீதியாக செய்து பார்த்தே தொடர்ந் தேன். அன்றைய பாடங்களை அன்றைய தினமே செய்து பார்த்து. வந்தமையால் பரீட்சையை எதிர் கொள்வது சுலபமாக இருந்தது.. பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்று சித்தியெய்தவும் முடிந்தது.

உயர்தர பெறுபேற்றில் மருத் துவ பிரிவிலும் இதேபோன்ற ஒருசிறந்த சித்தியை பெற்று எதிர் காலத்தில் மருத்துவ ஆராய்ச்சியாள னாக அல்லது நோய்கள் தொடர் பிலான ஆராய்ச்சியாளனாக வர வேண்டும் என்பதே எனது இலக்கா கும். கற்பதை அன்றே மீட்டல் செய்வதன் மூலம் எந்த பரீட்சை யிலும் யாரும் சாதிக்கலாம் என அந்த மாணவன் தனது கருத்தை தெரிவித்தார். (செ-4)

யாழ்ப்பாணம் சென்.றோக்ஸ் இளைய தலைமுறை இளைஞர் கழகத்தினால் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக சிரமதானப் பணிகள் அண்மையில் சென்.றோக்ஸ் சிறுவர் பூங்காவில் இளைஞர் கழகத் தலைவர் நெ.அருள்ஸ்ரீபன் தாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் புஷ்பகுமார் வசீகரன், சென். றோக்ஸ் சனசமூக நிலையத் தலைவர் அ.அருட்பிரகாஸ் மற்றும் ஏராளமான இளைஞர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சாதாரண நபரா மகிந்த ராஜபக்ஷ
பசில் கேள்வி

(கொழும்பு)

பொலிஸ் நிலையத்திற்கு அழைத் துச் சென்று விசாரணை செய்யக் கூடிய சாதாரண நபரா மகிந்த ராஜ பக்ஷ என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ என்பவர் தன்னை நாட்டுக்காக அர்ப்பணித்த வர். அவரது முழுக்குடும்பத்தையும் தேசத்திற்காக தியாகம் செய்தவர்.

அவ்வாறான ஒரு நபரை தொடர்ந் தும் முறைகேடாக நடத்துகின்றார் கள். விசாரணைகள் செய்து கொண்டு வருகின்றார்கள்.

ஆனால் இவை அனைத்தை யும் கண்டு மகிந்த பொறுமையாக இருக்கின்றார். நாட்டு மக்களுக்காக தன்னை தியாகம் செய்து கொண் டதாலேயே அவர் பொறுமையாக இருக்கின்றார்.

அதேபோன்று எத்தனை வித மான குற்றச்சாட்டுகளை முன் வைத்தாலும், சிறைச்சாலைகளில் அடைத்தாலும் நாம் ஓயப் போவ தில்லை.

தாய் நாட்டுக்காகவும், உங்க ளுக்காகவும், மக்களுக்காகவும் நாம் செய்யும் செயற்பாடுகளை ஒரு போதும் நிறுத்திக் கொள்ளப் போவது இல்லை என்பதையும் உறுதியாகக் கூறிக் கொள்கின்றோம் எனவும் பசில் தெரிவித்தார். (இ-3)

வியாழேந்திரன் எம்.பி. பங்களாதேஷ் பயணம்

பங்களாதேஷில் இடம்பெறும் 136 ஆவது உள்ளக நாடாளுமன்ற ஒன்றியத்தின் அமர்வில் Assembly of the inter parliamentary Union கலந்து கொள்வதற்காக மட்டக் களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந் திரன் நேற்று புதன்கிழமை பங் களாதேஷ் தலைநகர் டாக்கா பய ணமாகியுள்ளார்.

உலகின் 180 நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன் றப் பிரதிநிதிகள் டாக்காவில் ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 5ஆம் திகதி வரை இடம்பெறும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள வுள்ளனர்.

இலங்கையிலிருந்து சபாநா யகர் கரு ஜயசூரியவின் தலை மையில் நாடாளுமன்ற உறுப்பி னர்களான மஸ்தான் காதர், மஹ் றூப் அப்துல்லாஹ், குமாரி விஜ யரத்ன றோஹினி மற்றும் சதா சிவம் வியாழேந்திரன் ஆகியோர் பங்குபற்றச் சென்றுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி லிருந்தும் இலங்கையின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார் பாகவும் வியாழேந்திரன் தெரிவு செய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அமர்வில் பங்கு பற்று வதற்கு தனக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பை இலங்கையின் சிறுபான்மை மக்களின் பாதிப்புக் கள் மற்றும் இனங்களுக்கிடை யிலான நல்லிணக்கம் ஏற்படுத் தப்படுவதன் அவசியம் பற்றி பிரஸ் தாபித்து சர்வதேச அளவில் கவ னத்தை ஈர்ப்பதற்கு உதவும் என வியாழேந்திரன் பங்களாதேஷ் புறப்படமுன்னர் கருத்துத் தெரி வித்தார். (இ-3)

கடந்த வருடத்தை விட 9ஏ பெற்ற மாணவர்கள் இவ்வருடத்தில் அதிகம்

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீ ட்சை -2016 ஆம் ஆண்டு பெறு பேறுகளின் அடிப்படையில் 2224 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளதாக பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம்.என். ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

கடந்த 2015 ஆம ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த எண் ணிக்கை அதிகமாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வருடம் 6102 மாண வர்கள் சகல பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

இவ்வருடப் பெறுபேறுகளின்

அடிப்படையில் கணிதம், வரலாறு ஆகிய பாடங்களில் சித்தியடைந்த வர்களின் எண்ணிக்கை அதிக மாகவுள்ளதாகவும் கணிதப் பாடத் தில் சித்தியடைந்தவர்களின் எண் ணிக்கை 28877 எனவும், இது கடந்த வருடத்தைவிட 7.63 வீத அதிகரிப்பை காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

பரிசளிப்பு விழா

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் த.வாமதேவன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஆசியுரையை சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான பிரதம குரு நா.சர்வேஸ்வரக் குருக்கள் வழங்குவார். பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகப் பொருளாளர் சாமுவேல் செல்வநாயகம் சந்திரகாசன், சிறப்பு விருந்தினராக வலி காமம் கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பிறேமாவதி செல்வின் இரேனியஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-12)

அவுஸ்திரேலியா செல்ல அனுமதி கோரும் திஸ்ஸ

முன்னாள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க வெளிநாடு செல்ல கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அனுமதி கோரியுள்ளார்.

அடுத்த மாதம் 19 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையில் அவுஸ்திரேலியா செல்ல அனுமதி தருமாறு திஸ்ஸ அத்தநாயக்க கோரியுள்ளார்.

இந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றம், அடுத்தமாதம் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் போது போலியான ஆவணங்களை வெளியிட்டமை தொடர்பில் திஸ்ஸவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

கேரள கஞ்சாவுடன் நால்வர் கைதாகினர்

கேரளகஞ்சாவுடன் நான்கு சந்தேகநபர்களை கைது செய்துள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து புத்தளம் பகுதியில் நேற்று முன்தினம் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 5 கிலோகிராம்நிறையுடைய கேரள கஞ்சாவை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்கள் நால்வரும் நாவத்தேகம பகுதியில் வைத்து கேரள கஞ்சா போதைப் பொருளை வான் ஒன்றில் கடத்த முற்படும் போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் கேரள கஞ்சாவுடன் அனமடுவ பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தால் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் ஸ்ரீமத் சுவாமி புத்திதானந்தஜி மகராஜ் கலந்து கொள்வார். நகர சங்கீர்த்தனம் ஊர்வலம், வில்லிசை, நடனம், நாடகம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ-12)

மானிப்பாய் பரீஸ் ப.நோ.கூ.சங்கம் - வ-து

பதவி வெற்றிடம்

விண்ணப்பம் கோரல் – வெளிவாரி

பதவி - கணக்காளர் 104 / 10

01. **சம்பள அளவுத்திட்டம் :-**
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 13/2015 சுற்றுநிருபத்திற்கமைய 104/10 ஆவது சம்பளக் குறியீட்டின்படி சம்பளத்திட்டம்.

15,305 - 18,905
170 X 10 - 190 X 10

இதர படிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.

02. **வயதெல்லை** :-18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது. சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.)

03. **அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்** :-

அ) கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பளத்திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவிஒன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவியலாளர் நிறுவன இறுதி யாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத் தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/கூட்டுறவுத்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டு கால அனுபவம் அல்லது க.பொ.த உயர்தரப் பத்திரப்பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது நான்கு (04) ஆண்டுகால அனுபவம்.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 14.04.2017

04. **விண்ணப்பிக்கும் முறை:-**
மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலை மைக்காரியாலயத்தில் ரூபா. 10.00 இனை செலுத்திப் பெற்று, பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், **"பொதுமுகாமையாளர் 101/08 பதவிக்கான விண்ணப்பம்"** எனக் குறிப்பிட்டு **"தலைவர், மானிப்பாய் பரீஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), பொன்னாலை வீதி, மானிப்பாய்."** என்னும் முகவரிக்கு 2017.04.14 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

திரு. மா.செல்வராசா
தலைவர்,
மானிப்பாய் பரீஸ் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

(C-7949)

மானிப்பாய் பரீஸ் ப.நோ.கூ.சங்கம் - வ-து

பதவி வெற்றிடம்

விண்ணப்பம் கோரல் – வெளிவாரி

பதவி - பொதுமுகாமையாளர் 101 / 08

01. **சம்பள அளவுத்திட்டம் :-**
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 13/2015 சுற்று நிருபத்திற் கமைய 101/08 ஆவது சம்பளக் குறியீட்டின்படி சம்பளத்திட்டம்.

16,020 - 20,220
200 X 10 - 220 X 10

இதர படிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.

02. **வயதெல்லை** :- 18 தொடக்கம் 45 வரை
(சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது. சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.)

03. **அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்** :-

அ) கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல் லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவி யொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனு பவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தரம் சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத் தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 14.04.2017

04. **விண்ணப்பிக்கும் முறை:-**
மேற்படி பதவிக்கான விண்ணப்பப்படிவத்தினை சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் ரூபா. 10.00 இனை செலுத்திப் பெற்று, பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், **"பொதுமுகாமையாளர் 101/08 பதவிக்கான விண்ணப்பம்"** எனக் குறிப்பிட்டு **"தலைவர், மானிப்பாய் பரீஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), பொன்னாலை வீதி, மானிப்பாய்."** என்னும் முகவரிக்கு 2017.04.14ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப் படல் வேண்டும்.

திரு. மா.செல்வராசா
தலைவர்,
மானிப்பாய் பரீஸ் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

(C-7949)

பழிச் சொல்

குறிஞ்சி என்ற ஊரில் முனுசாமி என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒருமுறை தேவையில்லாமல் ஒரு கிராம வாசி மீது பழி சொல்லி பஞ்சா யத்தைக் கூட்டினான்.

பஞ்சாயத்திலும் கிராம வாசிக்குத் தண்டனை கிடை த்தது. பின், வீட்டிற்கு வந்த முனுசாமியின் மனச்சாட்சி அவனை உறுத்தியது. கிராம வாசி மீது தான் பழி சொன் னதை எண்ணி வருந்தினான். எனவே, தன் பாவத்திற்கு ஏதாவது பிராயச்சித்தம் உண்டா என்று தேடினான்.

என்ன பிராயச்சித்தம் செய்வ தென்று அவனுக்குப் புரிய வில்லை. எனவே, அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென்றான். "துறவியாரே! நான் இந்தக் கிராமத்தில் வசிக்கும் ஒருவர் மீது வீண் பழி சொல்லிவிட்டேன். அது என் மனத்தை உறுத்துகிறது. அந்தப் பழி சொன்ன பாவத்தில் இருந்து தப்பிக்க எனக்கு வழி கூறுங்கள்!" என்று கேட்டான்.

துறவி சிறிது யோசித்து விட்டு, "இன்று இரவு ஐந்து கிலோ இலவம்பஞ்சை எடுத் துப் போய் அந்த கிராம வாசி யின் வீட்டுக்கு முன்பு பரப்பிப் போட்டுவிட்டு வந்து விடு. நாளை வந்து என்னைப் பார்" என்று கூறினார்.

முனுசாமி பஞ்சைக் கொண்டு சென்று கிராம வாசியின் வீட்டின் முன் பரப்பி விட்டான். பின் மறுநாள் சென்று துறவியைப் பார்த் தான். "துறவியாரே! என் பாவம் போய் இருக்குமா இந்நேரம்?" என்று கேட்டான்.

உடனே துறவி "முனுசாமி! நீ இப்போது அந்த கிராம வாசியின் வீட்டிற்குச் செல். அவன் வீட்டு முன் நீ நேற்றி ரவு பரப்பி வைத்த பஞ்சை மீண்டும் பொறுக்கிக்கொண்டு வா" என்று கூறினார்.

முனுசாமி மிகுந்த ஆவ லுடன் ஓடினான். ஆனால், ஒரு விரல் அளவு பஞ்சு கூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்துபோய் விட்டி ருந்தது. அதனைக் கண்ட முனுசாமி திடுக்கிட்டான். மீண்டும் துறயிடம் ஓடி வந்தான்.

"துறவியாரே! நேற்றிரவு நான் கிராமவாசி வீட்டின்

முன்னால் போட்டுவிட்டு வந்த பஞ்சில் ஒரு துளிப் பஞ்சாவது இப்போது அங்கு இல்லை. என்ன செய்வது?" என்று கேட்டான்.

துறவி சிரித்துவிட்டு, "முனு சாமி! நீ விரித்துப் போட்டு விட்டு வந்த பஞ்சை இப்போது மீண்டும்எப்படி அள்ள முடியாதோ, அதேபோல, நீ ஒருவர் மீது கூறிய பழியையும் அதனால் உனக்கு ஏற்பட்ட பாவத்தை யும் மாற்ற முடியாது. திருப்பி வார முடியாத பஞ்சைப் போன் றதுதான் உன் பழிச் சொற் களும். அவற்றையும் இனித் திருப்பி வார முடியாது. இறை வனிடும் உன் தவறுக்காக மன்னிப்புக் கேள்" என்று கூறினார்.

முனுசாமிக்கு உண்மை புரிந்தது. அன்று முதல் மற்ற வர்கள் மீது பழி சொல்லும் குணத்தையே விட்டு விட்டான். பிறர் மீது வீண்பழி சுமத்து வதால் பலன் ஏதும் கிடைக் கப்போவதில்லை என்பதை உணர்ந்தான் முனுசாமி.

◆ 1492 - ஸ்பெயினில் இருந்து அனைத்து யூதர்களும் ரோமன் கத்தோலிக்கராக மாற வேண்டும் அல்லது அனை வரும் வெளியேற்றப்படுவார்கள் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

◆ 1814 - நெப்போலியனுக்கு எதிரான போரில் கூட்டுப் படைகள் பாரிஸ் நகரை அடைந்தனர்.

◆ 1822 - ஐக்கிய அமெரிக்காவில் புளோரிடா உருவாக்கப்பட்டது.

◆ 1831 - யாழ்ப்பாணம், மானிப்பாயில் அமெரிக்க மிஷன் கட்டடங்கள் தீப்பி டித்து அழிந்தன.

◆ 1842 - அறுவைச்சிகிச்சைகளில் முதன் முதலாக மயக்க மருந்து குரோஃ போர்ட் லோங் என்பவரினால் பயன் படுத்தப்பட்டது.

◆ 1851 - ஐக்கிய இராச்சியத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

◆ 1858 - அழிப்பானுடன் கூடிய எழுது கோலுக்கான காப்புரிமம் ஹைமன் லிப்மன் என்பவரினால் பெறப்பட்டது.

◆ 1867 - அலாஸ்கா 7.2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு, 2 சதம்/ஏக்கர் ($4.19/கிமீ²) ரஷ்யாவின் மன்னன் இரண்டாம் அலெக்சாண்டர் II இடமிருந்து ஐக்கிய அமெரிக்காவின் அரசுச் செயலாளர் வில்லியம் செவார்ட் கொள்வனவு செய்தார்.

◆ 1945 - இரண்டாம் உலகப் போர் சோவியத் படைகள் ஆஸ்திரியாவினுள் நுழைந் து வியன்னா நகரைக் கைப்பற்றின.

◆ 1949 - ஜஸ்லாந்து நேட்டோ அமைப்பில் இணைந்ததற்கு எதிர்ப்புத் தெரி வித்து ரெய்க்ஜாவிக் நகரில் கலவரம் இடம்பெற்றது.

◆ 1965 - வியட்நாம் போர் சாய்கோன் நகரில் அமெரிக்கத் தூதரலயத்திற்கு முன் னால் தானுந்துக் குண்டொன்று வெடி த்ததில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

◆ 1981 - ஜனாதிபதி றொனால்ட் றேகன் வோஷிங்டனில் வைத்து ஜோன் ஹிங்கிலி என்பவனால் மார்பில் சுடப்பட்டார்.

பிறப்புகள்

◆ 1709 - ஆனந்த ரங்கம்பிள்ளை, தமிழில் நாட்குறிப்பு எழுதியவர் (இ. 1761)

◆ 1925 - தி.க.சிவசங்கரன், மார்க்சிய திறனாய்வாளர் (இ. 2014)

◆ 1936 - யாழ்ப்பாணம் சின்னமணி, ஈழத்து வில்லிசைக் கலைஞர் (இ. 2015)

இறப்புக்கள்

◆ 1949 - பிரீட்ரிக் பேர்ஜியஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (பி. 1884)

◆ 1965 - பிலிப் ஹெனச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1896)

◆ 2005 - ஓ.வி.விஜயன், இந்திய, மலையாள எழுத்தாளர், ஓவியர (பி. 1930)

மரக்கறி வகைகள்	தீருநெல்வேலி	நெல்லியடி	கொடிகாமம்	சுன்னாகம்	சாவச்சேரி	கிளிநொச்சி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	120	100	90	100	90	80	80
உருளைக்கிழங்கு	90	100	80	100	90	100	100
பச்சைமிளகாய்	100	100	100	100	120	120	100
தக்காளி	140	140	90	100	120	160	120
மரவள்ளிக்கிழங்கு	60	100	70	100	80	80	80
கோவா	60	100	40	50	60	60	80
கரட்	100	140	60	80	100	120	80
பூசணி	80	100	60	60	60	80	60
புடோல்	100	100	50	80	80	160	70
வாழைக்காய்	80	100	50	60	60	80	50
சின்ன வெங்காயம்	100	100	80	80	80	120	60
பெரிய வெங்காயம்	80	100	80	100	90	100	100
பாகற்காய்	160	300	180	180	200	160	120
வெண்டிக்காய்	120	160	80	100	100	120	100
கருணைக் கிழங்கு	60	100	-	60	80	100	100
பயற்றங்காய்	120	120	60	100	100	120	120
லீக்ஸ்	80	100	80	80	100	120	60
பீற்றூட்	80	100	40	60	60	100	80
கறிமிளகாய்	180	200	120	150	180	160	100
முருங்கைக்காய்	400	600	400	30	280	400	300
போஞ்சி	200	250	-	160	180	200	200
கத்தரிதம்புள்ள	80	50	50	80	80	60	60
கீரை - 1பிடி	50	20	30	30	30	30	50
தேசிக்காய்	100	80	40	80	70	80	100
தேங்காய் (ஒன்று)	70	80	20-70	70	65	40-60	60
இராசவள்ளி	200	300	180	200	200	200	200
வெங்காயப்பூ	160	100	120	-	-	200	-
முள்ளங்கி	50	100	30	60	80	80	70
பொன்னாங்காணி	40	60	15	30	40	20	40
வல்லாரை	20	30	15	20	20	20	25
ஈரப்பலா	80	60	-	80	-	80	-

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.

– இளங்கோ அடிகள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

தமிழ் மக்களின் போராட்டம் கோத்தாவின் இதயத்தை சுடுகிறது

தன் நெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்த பின் தன்நெஞ்சே தன்னைச்சுடும் என்றார் திருவள்ளுவர். உலகிற்கு அறம் உரைத்த திருவள்ளுவரின் இக்குறள்பா கூறும் பொருள் உணர்ந்தால் இவ்வுலகில் எவரும் தம் மனச் சாட்சிக்கு விரோதமாக செயற்படமாட்டார்.

அதேவேளை இந்த உலகில் யார் எத்தீங் கிழைத்தாலும் அவர்கள் தங்கள் வாழ்வில் துன்பத்தை அனுபவித்து உழறுவர் என்பது மறுக்க முடியாத உண்மை. இவற்றை நாம் அனுபவரீதியாகப் பார்க்க முடியும்.

போரின்போது ஆங்காங்கே குற்றங்கள் நடந்தன என்று முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார். அவர் கூறியது சிலவேளை அவருக்கு அதிர்ச்சியைக் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் அதைக் கேட்டவர்களுக்கு நிச்சயம் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும்.

அட – போர்க்குற்றம் எதுவும் நடக்கவில்லை என்று இதுகாறும் கூறிவந்த கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இப்போது நடந்தது என்ன? என்பதே அந்த அதிர்ச்சிக்கான காரணம். தமிழ் மக்களை – பொது மக்களை வன்னிப் பெருநிலப்பரப்பில் வைத்து கொன்றொழித்த கொடும் செயலை மறைத்து வந்த கோத்தபாய ராஜபக்ஷ இப்போது அதிரடியாக, போரின் போது ஆங்காங்கே குற்றங்கள் நடந்தன என்பதை தான் நிராகரிக்கவில்லை என கூறியுள்ளார்.

போர் வெற்றி கொண்டாடிய கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இப்போது என்ன நடந்தது என்றால் இங்கு தான் வள்ளுவர் கூறும் ... தன்னெஞ்சே தன்னைச் சுடும் என்ற குறள் வேலை செய்யத் தொடங்கியுள்ளது எனலாம்.

அதாவது வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டமை, சிறுவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை, படையினரிடம் சரண டைந்த – ஒப்படைக்கப்பட்ட இளைஞர்களுக்கு நடந்தது என்ன? என்பது இன்று வரை தெரியாமல் உள்ளமை எனப் பல்வேறு விடயங்கள் அவரை வாட்டத்தொடங்கியுள்ளன.

போரில் எந்தக்குற்றமும் நடக்கவில்லை என்று கடந்த ஏழு ஆண்டுகளாக கூறிவந்த கோத்தபாய ராஜபக்ஷவை அவரது மனச் சாட்சி நெருடியுள்ளது.

வன்னிப் போரில் நடந்தது உனக்குத் தெரியாதா? என்று அவரிடம் அடித்து மனச்சாட்சி கேட்டிருக்கிறது.

கூடவே, ஓ! கோத்தபாய ராஜபக்ஷவே! நீ பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது நடந்த தமிழின அழிப்பால் தானே தமிழ் மக்கள் காணாமல் போன தங்கள் பிள்ளைகளை, உறவுகளைத்தேடி அழுது புலம்புகின்றனர்.

காணாமல் போன தங்கள் பிள்ளைகளை நினைந்து இந்த உலகைவிட்டுப் பிரிந்து போன பெற்றோர்கள் எத்தனை? இதெல்லாம் உனக்குத் தெரியாதா?

அதோ! வடக்கு கிழக்கில் தங்கள் பிள்ளைகளின் புகைப்படங்களை வைத்து என் பிள்ளை எங்கே? என்று நிலத்தில் வீழ்ந்து அழும் தாயின் கண்ணீர் உனக்குத் தெரியவில்லையா?

எங்ஙனம் நீ நிம்மதியாக இருக்கிறாய்? இந்தப் பாவம், பழி உன்னைச் சும்மா விடுமா? அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றோ செல்வத்தை தேய்க்கும் படை என்றானே வள்ளுவன் உனக்கு தெரியாதா?

பெற்ற பிள்ளையை காணாமல் பரிதவிக்கும் தாயின் அவலம் உன்னை வாட்டுவதை நீ உணரவில்லையா? உன்னை மகிந்த காப்பாற்றலாம்; ஜனாதிபதி மைத்திரி காப்பாற்றலாம்; ஏன் அமைச்சர் மங்கள சமரவீரவும் காப்பாற்றலாம். ஆனால் நீ செய்த பாவம், கர்மவினையாகி உன்னை வாட்டுகிறதல்லவா? இப்படி கோத்தபாய ராஜபக்ஷவின் மனச்சாட்சி அவரிடம் கேட்க,

எதுவும் செய்ய முடியாமல் சொல்லி விடுகிறேன் ... சொல்லி விடுகிறேன் ... போரில் ஆங்காங்கே குற்றச் செயல் நடந்தது உண்மை. அதை நான் நிராகரிக்கவில்லை.

ஆம், காணாமல் போன தங்கள் பிள்ளைகளுக்காக சதா போராடும் பெற்றோர்களின் கண்ணீர்தான் கோத்தாவை வாய் திறக்க வைத்துள்ளது.

செல்லப்பா சுவாமிகளின் குருபூசை



ஈழத்திருநாட்டின் யாழ்ப்பாணத்துச் சித்தர் பரம்பரைக்கு முதல் வித்திட்டவர் முத்தியானந்தர் என்ற கடையிற் சுவாமிகள்.

அன்னாரது சீடனே செல்லப்பா சுவாமிகள். கடையிற் சுவாமிகள் சஞ்சாரம் செய்த போது செல்லப்பா சுவாமிகளைச் சந்தித்து ஒரு ரூபாய் நாணயத்தை வெற்றி லையில் மடித்து குடையை தலை மேல் வைத்து ஓடும்படி குரு உபதேசம் செய்து வைத்தார்.

நல்லூர் தேர் முட்டியடியில் வில்வ மரத்தின் கீழ் மோனத்தவம் செய்வார். கறுத்த உருவமும் கந்தல் ஆடையும் பூண்டு பித்தர் போல் பிதற்றுவார். தன்னை விழுந்து கும்பிட வந்தால் விலகிப் போவார். மக்களிடமிருந்து விலகுவதற்காக கண்ட படி பேசுவார். ஞானிகளின் போக்கு நம்மால் அறிய முடியாது.

சட்டை முனிச் சித்தர் சித்தரின் சுபாவம் பற்றி பாடுகிறார்.

கடவுளைக் காண முயல்பவர் பக்தர்

கடவுளைக் காணத் தெரிந்தவர் சித்தர்

எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி

ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தர்

சித்தர்களுக்கு நன்மை, தீமை, புகழ்ச்சி, இகழ்ச்சி, குணம், குலம், விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர்கள்.

செல்லப்பாசுவாமியின்சீடர் யோகசுவாமிகள். இருவரும் சோறு, கறி, சுவையாகச்சமைத்து உண்ணப்போகும்வேளையில் செல்லப்பா பானை, சட்டிகளை உடைத்து இதற்கு சாப்பாடு எதற்கு எனக்கேட்டதும் யோகருக்கு ஞானம் புலப்பட்டது. தான் யார்? உடலா, ஆத்மாவா என்ற பக்குவநிலை புரிந்தது.

யோகரைப்பார்த்து யாரடா நீஉன்னுள்ளேயாரடாதீயடாபற்று கூறி அவரை ஆத்மா என உணரச் செய்தார்.

செல்லப்பர் தான் பெற்ற அனுபூதியை யோகருக்கு 4 மகா வாக்கியங்களாக அருளினார்.

"ஒருபொல்லாப்புமில்லை, முழுவதும் உண்மை, எப்பவோ முடிந்தகாரியம், நாம் அறியோம்" இவை நமக்கு கிடைத்த வரப்பிரசாதம். இதனுள் பொதிந்துள்ள உட்கருத்துக்களை வேரோடி அறிந்து உணரத் தலைப்படுவோம்.

ஒருபொல்லாப்புமில்லை என்பது இறைவன் படைத்தவை. அவரவர் கர்மாவிற் கேற்றபடியே கிடைக்கும். ஒரு சிலர் பணக்காரராயும் வேறு சிலர்ஏழைகள்ஆவதற்கு செந்தாப் போதரின் குறளே சான்று பகரும்.

"இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோவாதவர்" முழுவதும்உண்மையென்பது அனைத்தும் பிரம்மம். இறைவன் எவ்வுயிரிலும் சர்வ வியாபியாக நீக்கமற நிறைந்துள்ளான்.

எப்பவோ முடிந்த காரியம் சொல்வது மானிடரின் பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு, முக்தி என்பன தீர்மானிக்கப்பட்ட ஒழுங்கின் பிரகாரம் நடக்கும்.

யாம் அறியோம் என்பது நம்முடைய சிற்றறிவு. இறைவனது பேரறிவு. பரம்பொருளின் திட்டத்தை நம்மால் உணரவோ, அறியவோ முடியாது.

செல்லப்பா சுவாமிகள் மேலும் மக்களைப் பார்த்து உன்னையேதிருத்திக்கொள். உலகம் தானாக திருந்துமென்றார். வெண்கலச் சிலையிலான அன்னாரது குருபூசை கடந்த நூற்றாண்டுகளாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தெற்குப் பகுதியிலுள்ள சமாதியில் அவரின் பேரர்களான ச.கனகரட்ணம், ச.கனகசபாபதி குடும்பத்தினரால் பங்குனிமாதம் அச்சுவினி நட்சத்திரத்தன்று நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 30 ஆம் திகதி வியாழக்கிழமையன்று அன்னாரின் சமாதிக்கு அபிஷேகம், பூசைகள், கூட்டுப் பிரார்த்தனை நடந்து மகேஸ்வர பூசையுடன் நிறைவு பெறும். அனைவரும் பங்கு கொண்டு ஆன்ம பலனைப் பெறுங்கள். இன்றைய குருபூசை நன்னாளில் அவரின் திருவடிகளை நினைத்து வணங்கி அருளுக்குப் பாத்திரமாகி உய்வடைவோமாக.

"சித்தன் போக்கு சிவன் போக்கு"

திருமதி சந்திரலீலா நாகராஜா
ஓய்வுநிலை ஆசிரியை
நல்லூர்

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ்.பிரதேசத்தில் பாரதி வீதி, பத்த மேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் விடத்தற்தீவு, கள்ளியடி, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, தேவன் பிட்டி, வெள்ளாங்குளம், கணேசபுரம் விடத்தற்தீவு வைத்தியசாலை, தேவன் பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

சாஸ்திரங்கள்

✦மதுபானங்களால் ஆண்களுக்கு ஏற்படும் நோய் மற்றும் பாதிப்புக்களை விட பெண்களுக்கு ஏற்படும் நோய்களும் பாதிப்பும் அதிகம். கர்ப்பப்பைக் கோளாறுகள் மலட்டுத் தன்மை உண்டாகும்.

-அண்ணல் நபி (ஸல்)

✦குருவுக்கு தட்சணை கொடுக்கவேண்டுமானால் வியாழக்கிழமை கொடுக்கவேண்டும். தட்சணையோடு குரு வீட்டிற்கும் சென்று அவரைப் பார்ப்பதற்கு வியாழக்கிழமை உகந்ததாகும்.

-அகத்தியர்

அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

அதிகாலை வேளையில் ஏன் விளக்கேற்ற வேண்டும்?

அதிகாலைப் பொழுதில் சூரிய தேவன் எழுந்தருளும்போது அவனை வரவேற்க இயற்கை தயாராகிறது. மரம், செடி, கொடிகள் தங்களின் தளிர்களால் சூரியனுக்கு வழி காட்டுகின்றன. பறவைகள் அவற்றின் இனிய குரலினால் பாட்டுப்பாடி சூரியனை வரவேற்கின்றன. விலங்குகள் ஓசை எழுப்பி வரவேற்கின்றன. பூக்கள் சிரித்து உற்சாகப்படுத்தியும் மரங்கள் கை கொட்டியும் இங்கே இங்கே என்று வழிகாட்டி சூரியனை வரவேற்கின்றன. அனைவரும் தன்னை வரவேற்பதால் மகிழ்ச்சியடைந்து மெல்ல மெல்ல முன்னேறி வருகிறான். வந்து வெப்பமும் வெளிச்சமும் அளித்து உயிரினங்களை அனுகிரகிக்கிறான். சூரியனின் அனுக்கிரகம் இல்லாமல் பூமியில் உயிரினங்கள் வாழ முடியாது.

(தொடரும்)

வடக்கு- கிழக்கு இணைக்கப்பட்டால் முஸ்லிம்களுக்கு தனியலகு வேண்டும்

அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு இணைக்கப்பட்டால் முஸ்லிம்களுக்குத் தனியான அதிகார அலகொன்றை வழங்க வேண்டும் என்று நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்துள்ள நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

தமிழ் மக்களின் இனப்பிரச்சினை மற்றும் அரசியல் உரிமைகளுக்குத் தீர்வாக வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும்என்று கோரிக்கை விடப்படுகின்றது.

ஆனால் இப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் போரின் போது பாதிப்புக்களை எதிர்கொண்டிருப்பது மாத்திரமன்றி, அரசியல் ரீதியாகவும் பாதிப்புகளை சந்தித்துள்ளார்கள்.

எனவே, வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுவதாகஇருந்தால், அப்பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்குத் தனியான அதிகார அலகு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.(இ-3)

சத்திய தரிசனம்

கடமையே பெரிய வேள்வி

❖ குழந்தைக்குத் தாய் பேசக் கற்றுக் கொடுக்கிறாள். பேச வேண்டியது குழந்தையே. ஆசான் மாணவனுக்குக் கல்வி போதிக்கிறார். கற்று அதன்படி நடக்க வேண்டியது மாணவனின் கடமையே. இறைவனை மனக் கண்ணின் முன் நிறுத்தி அவனோடு ஒன்றி விடுவது மனிதனின் கடமை.

❖உன் கடமைகளைச் சரிவர ஆற்ற வேண்டி பிரார்த்தனை செய். கட்டாயம் உன் பிரார்த்தனைக்குக் கடவுள் செவி சாய்ப்பார். இறைவனின் மேல் பாரத்தைப் போட்டு விட்டு. கடமையை மறந்து விடாதே. மாட்டுக்காரன் மேய்ச் சல் காட்டுக்கு ஓட்டித்தான் போவான். மேய வேண்டியது மாடு தானே! உன் கடமையை செய். பலனுக்காக கையேந்தாதே. அதுவே பெரிய வேள்வி ஆகும்.

❖புடலங்காயில் ஒரு சுமையைக் கட்டினால் வளையாது நீண்டு வளரும். மனிதனுக்கும் கடமை என்னும் சுமையைக் கட்டினால், வளையாது நேராக வாழ்வான். நீ எங்கு சென்றாலும் உன் கடமையைச் செய். உன்னுள் இருந்த நான் வழி காட்டிக் கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்.

❖ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் இறைவன் உன்னுடன் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொள். நீ அவனுக்கு மிகவும் நெருக்கமான வன். கண் இமைகள் விழியைக் காப்பது போல. இறை வன் உன்னைக் காப்பாற்றுவான். அவன் உன்னை விட்டு விலகமாட்டான். நீயும் அவனை விட்டு விலக முடியாது. இந்த நிமிடத்திலிருந்து எதையும் எதிர் பார்த்துச் செயற்படாதே! மாறாத அன்புடன் உன் கடமையைச் செய்.

கடைசி டெஸ்ட் மழை காரணமாக சமநிலையானது தொடர் தென்னாபிரிக்கா வசமானது

தென்னாபிரிக்கா-நியூசிலாந்து அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹாமில்டனில் நடபெற்றது. இதில் முதலில் ஆடிய தென்னா பிரிக்க அணி முதல் இன்னிங்சில் 314 ஓட்டங்களில் 'ஆல்-அவுட்' ஆனது. பின்னர் முதல் இன்னி ங்சை ஆடிய நியூசிலாந்து அணி 3ஆவது நாள் ஆட்டம் முடிவில் 104 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 321 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

கப்டன் கனே வில்லியம்சன் 148ஓட்டங்களுடனும், சான்ட்னெர் 13 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். 4ஆவது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து ஆடிய கனே வில்லியம்சன் 176ஓட்டங்களிலும், சான்ட் னெர் 41 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர்.

அடுத்து களம் கண்ட வாட்லிங் (24 ஓட்டங்கள்), மேட் ஹென்றி (12 ஓட்டங்கள்), ஜீத்தன் பட்டேல் (5 ஓட்டங்கள்), கிராண்ட்ஹோம்ப் (57 ஓட்டங்கள்) அடுத்தடுத்து அவுட் ஆனார்கள். நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 162.1 ஓவர் களில் 489 ஓட்டங்கள் குவித்து ஆட்டம் இழந்தது.

தென்னாபிரிக்க அணி தரப்பில் மோர்னே மோர்கல், ரபடா தலா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்கள். 175ஓட்டங்கள் பின்தங்கிய நிலை யில் 2ஆவது இன்னிங்சை ஆடிய தென்னாபிரிக்க அணிக்கு அதிர்ச்சி காத்து இருந்தது. நியூசிலாந்து வீரர்களின் அபார பந்து வீச்சில் தொடக்க விக்கெட்டுகள் வேகமாக சரிந்தன.

நேற்று முன்தினம் ஆட்ட நேரம் முடிவில் தென்னாபிரிக்க அணி 2ஆவது இன்னிங்சில் 39 ஓவர் களில் 5 விக்கெட் இழப்புக்கு 80 ஓட்டங்கள் எடுத்து திணறியது. ஆட்டத்தின் கடைசி நாளான நேற்று தென்னாபிரிக்க அணி விரைவில் ஆட்டமிழக்கும் பட்சத்தில் நியூசி லாந்து எளிதான இலக்குடன் வெற் றியை எட்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், காலை முதலே அப்பகுதியில் கனமழை பெய்து வந்ததால் ஆட்டம் தடைப்பட்டது. மழை விடாமல் தொடர்ந்து பெய்து வந்ததால் ஆட்டத்தின் நேற்றைய நாளை கைவிடுவதாக நடுவர்கள் அறிவித்தனர். ஒரு ஓவர்கூட வீசப்பட மல் நேற்றைய நாள் முடிந்தது. இத னால், இந்த போட்டி சமநிலையானது.

இதன் மூலம் மூன்று போட்டி கள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் வென்றது. உள்ளூர் மண்ணில் தொடரை இழந்ததால் நியூசிலாந்து வீரர்கள் கடும் அதி ருப்தி அடைந்தனர். (க)

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III ஸ்கந்தாஸ்ரார் அணி வெற்றி

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III 2017 சுற்றுப் போட்டியில் யாழ் .நகரில் இருந்து இரு அணிகளை தெரிவு செய்வ தற்கான போட்டிகள் 25. 03. 2017 அன்று ஆரம்ப மாகியு ள்ளன.இத் தொடரில் முதலா வது போட்டியில் (A பிரிவில்) ஸ்கந் தாஸ்ரார் அணி ஓல்ட் கோல்ஸ் அணியை 5 இலக் குகளால்வெற்றி பெற்று தனது முதலாவது வெற் றியை பதிவு செய்துள்ளது. நாண யச்சுழற் சியில் வெற்றி பெற்ற ஓல்ட் கோல்ஸ் அணி 27.2 ஓவர் களில் சகல இலக்குகளையும் இழ ந்து 122 ஓட்டங்களை பெற்றது. மாதவரூபன்-11, மதூஸன்-22, சிறிகுகன்-43, நிலக்ஸன் -19 ஓட்ட ங்களை பெற்றனர்.

குருசோத்மன், சோபிகன் தலா 3 இலக்குகளையும் நிரோ ஜன்-02, துவாரகன் -01 இல க்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 22.1 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களை பெற்றது.

கதியோன்-23, துவாரகன்-38, அஜின்தன், நிரோ ஸன் ஆட்ட மிழக் காது 13,12 ஓட்டங்களை பெற்றனர். சிறி குகன் -03, நிலக்ஸன், திலீ பன் தலா ஒரு இலக்கினையும் கைப்ப ற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டு கழகம் நடத் தும் தரவரிசை பட்டியலுக்கு ஸ்கந் தா ஸ்ரார் அணி 7.73 புள்ளி களை யும் ஓல்ட்கோல்ஸ் அணி 1.72 புள் ளிகளையும் பெற்றுள்ளனர். இப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (க)

புதிய விடியல் உதைபந்தாட்டம் சென்.மேரிஸ் காலிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை, வடமராட்சி, தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரில் (27.03.2017) அன்று நடைபெற்ற உதைப ந்தாட்ட தொடரில் வேலணை ஐயனார் அணியை எதிர்த்து சென்மேரிஸ் அணி மோதி யது.

வேலணை ஐயனார் அணியை எதிர்த்து சென் மேரிஸ் அணி மோதியது.

சிறப்பான ஆட்டத்தின் மூலம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சென் மேரிஸ் அணி சார்பில் றெக்னோ 2, நிதர்சன் 1 கோல்களை போட்டார்கள். (க)

தலைவர் வெற்றிக்கிண்ணம் தெல்லிப்பழை நாமகள் வெற்றி

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் தலைவர் கிண்ணத்திற் கான உதைபந்தாட்ட தொடரில் 27. 03.2017 மா லை 3.30 மணிக்கு புனித ஹென் றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி யில் தெல் லிப்பழை நாமகள் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து இள வாலை ஏழாலை Five star விளை யாட்டுக்கழகம் மோதியது. இடம் பெற்ற போட்டியில் 1:1 என சமநிலை யானது. போட்டியில் தெல்லிப்பழை நாம கள் விளையாட்டுக் கழக வீரன் பரணிதரண் கோல் போட்டு அசத்தி னார்.சமநிலை தவிர்ப்பு உதையில் 4:2 என வெற்றி பெற்று அடுத்த சுற் றுக்கு தகுதி பெற்றது தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம். (க)

பெண்களுக்கான கரப்பந்து, கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் ஆரம்பம்

அல்வாய் விளையாட்டு விழா வின் பெண்களுக் கான கிரிக்கெட், கரப்பந்து சுற்றுப் போட்டிகள் ஆரம் பமாகவுள் ளன.

பிரித்தானியா, சுவிட்சர் லாந்து ஒன்றியங்களின் ஏற்பாட்டில் நடை பெற்று வரும் அல்வாய் விளை யாட்டு விழா வில் பெண்களுக்கான கரப் பந்து, கிரிக்கெட் சுற்றுப் போட் டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு தின ங்களில் இடம் பெறவுள் ளது.

அல்வாய் கிராமத்தில் இயங்கி வரும் விளையாட்டுக் கழ கங்கள் இத்தொடரில் பங்கு பற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி இடம் பெறும் மைதான ங்கள் கரப்பந்து அறிவருள் விளையாட்டுக்கழக மைதானம் முதலாம் ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணி, கிரிக்கெட் மாலுசந்தி மைக்கல் விளை யாட் டுக்கழக மைதானம் இரண்டாம் ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி. (க)

பிரகீத்தின் மனைவிக்கு...

2010ஆம் ஆண்டில் காணாமல்போன கேலிச்சித்திரக் கலைஞர் பிரகீத் ஏக்னலிகொட விவகாரத்தில், நீதி கேட்டு போராடிக் கொண்டிருக்கும் அவரது மனைவி சந்தியா ஏக்னலிகொடவுக்கு, அமெரிக்க வெளிவிவகாரத்துறையால் 2017ஆம் ஆண்டுக்கான, துணிச்சலுடன் செயல்படும் சர்வதேச மகளிர் விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்ச்சியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் மனைவி மெலனி டிரம்ப் மற்றும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சில், அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலர் தோமஸ் ஏ.ஷான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் போர்க் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சார்பாகவும் போராடியதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

சந்தியா இலங்கையில் காணாமல்போனோர் பற்றிய தகவல்களை கோரி போராடிவரும் பல பெண்களின் அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியை சந்தியா பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்று இலங்கைக்கான அமெரிக்கதூதர் அதுல் கேஷப் கூறினார்.

சந்தியா போன்றோரின் முயற்சிகள் இலங்கையில் உண்மை, நல்லிணக்கம் மற்றும் நீடித்த அமைதி ஆகியவைகளுக்காக ஆக்கப்படும் ஒரு நடவடிக்கை என்ற வகையில் அமெரிக்க மக்கள் அவற்றை ஆதரிக்கின்றனர் என்று அவர் கூறினார்.

2010இல் பிரகீத் ஏக்னலிகொட காணாமல்போனதிலிருந்து சந்தியா, இதற்கு பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கக் கோரியும், இந்த சம்பவத்திற்கான பதில்களைத் தேடியும், சுமார் 90 முறைக்கும் மேல் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கிறார்.

அது மட்டுமல்லாமல், வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட இலங்கையின் பிற பகுதிகள் முழுவதும், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு ஆதரவாக செயல்பட அவர் தொடர்ந்து பயணம் செய்கிறார் எனவும் அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டார்.

இந்த விருதுகளுக்கு சந்தியாவைத் தவிர உலகெங்கிலுமிருந்தும் வேறு 12 பெண்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். (செ-11)

சிக்கியது...

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என தெரிவித்த பொலிஸார், நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுக்கு குறித்த வெள்ளை வானை பயன்படுத்தியிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஊடகவியலாளர் கீத் நொயாரை கடத்திச்செல்வதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வான் ஒன்றினை, சி.ஐ.டியினர் பிலியந்தலை பகுதியில் வைத்து நேற்று கைப்பற்றினர்.

ஊடகவியலாளர் கீத் நொயார் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரி மேஜர் புலத்வத்தவின் நண்பியான பெண் ஒருவரின் வீட்டில் இருந்தே குறித்த வெள்ளை வான் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வான் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், கைப்பற்றிய வான் லசந்தவின் கொலைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

2008ம் ஆண்டு மே மாதம், தி நேசன் இதழின் இணை ஆசிரியர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் மற்றும் சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை, ரிவிர ஆசிரியர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவின் சிறப்பு பிரிவு ஒன்று மேற்கொண்டு வருகின்றது.

ஊடகவியலாளர் கீத் நொயார் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அண்மையில் ஐந்து இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலுமொரு இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

3 1/2 வயது குழந்தை...

பாதிக்கப்பட்ட மேற்படி குழந்தைக்கு பனடோல் சிறப் கொடுக்கப் பட்டுள்ளது. 27ஆம் திகதி குழந்தை வாந்தி மற்றும் இரும லால் சிரமப்பட அன்றைய தினமே தனியார் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

தொடர்ந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அன்று பிற்பகல் 3 மணியளவில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் குழந்தை உயிரிழந்துள்ளது.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (செ-9,30)

நில மீட்புக்கு...

அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கூறியுள்ளார்.

கேப்பாப்பிலவு உள்ளிட்ட வடக்கில் பல்வேறு பகுதிகளில் நில மீட்பு போராட்டங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

இந்த விடயம் குறித்து தாம் பாதுகாப்பு செயலாளருடன் கலந்துரையாடியதாகவும் இன்னும் சில கலந்துரையாடல்களின் பின்னர் இது குறித்த முடிவை தாம் அறிவிக்க இருப்பதாகவும் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கூறியுள்ளார்.

இதேவேளை இராணுவத்தினரின் இடமாற்றம் மற்றும் பாதுகாப்பு தேவை என்பவற்றை ஆராய்ந்து காணி விடுவிப்பு இடம்பெறும் என்று ஜனாதிபதி கூறியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும் தாமும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடியபோது அவர் இந்த விடயத்தை கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறியுள்ளார். (செ-11)

கைக்குண்டுகள்...

ங்காணப்பட்டு மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் யாழ். நகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சிங்கள மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள தனியார் வீடொன்றிலேயே மேற்படி இரண்டு கைக்குண்டும் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் வீட்டு உரிமையாளர் வீட்டை துப்புரவு செய்யும் போது குறித்த இரண்டு கைக்குண்டையும் கண்டுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதனையடுத்து அங்கு விரைந்த விசேட அதிரடிப் படையினர் மேற்படி இரண்டு கைக்குண்டையும் மீட்டுச் சென்றுள்ளனர்.

கைக்குண்டு மீட்கப்பட்ட வீடானது முன்னர் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

தொண்டர் ஆசிரியர்...

டிலிருந்து எந்த ஆண்டுவரை கடமையாற்றியோருக்கு வழங்கப்படும் என்ற தகவலை தற்போது வழங்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியோருக்கு நிரந்தர நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு நீண்ட நாள் செல்கின்ற நிலையில்,

இதுவரை நிரந்தர நியமனம் வழங்குவதற்கு எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டிய யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்கள், நேற்றைய தினம் முற்பகல் பதினொரு மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக ஒன்று கூடியிருந்தனர்.

இதன்போது மதியம் பன்னிரண்டு மணியளவில் பட்டதாரிகளின் பிரதிநிதிகளை உள்ளே அழைத்த ஆளுநர் அவர்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார்:

இதன்போது வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தும் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாமைக்கான காரணம் குறித்து தொண்டராசிரியர்களால் கோரப்பட்டது. வர்த்தமானி அறிவித்தலின்படி நிரந்தர நியமனம் கட்டாயம் வழங்கப்படும் என உறுதியளித்த ஆளுநர், அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று கொண்டுள்ளது. அதனாலேயே தாமதம் ஏற்படுகின்றது என பதிலளித்திருந்தார். இதன்போது இராஜாங்க கல்வி அமைச்சர் இராதாகிருஷ்ணன்,

போர்க்காலத்தில் மூன்று வருடம் கடமையாற்றிய தொண்டராசிரியர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படும் என கூறி வரும் கருத்து குறித்தும் ஆளுநரிடம் தொண்டராசிரியர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும் முன்னர் வெளியாகியிருந்த தொண்டராசிரியர் பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் அனைவருக்கும் நியமனம் வழங்கப்படும் என ஆளுநரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது எந்த ஆண்டிலிருந்து பணியாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என தொண்டராசிரியர்களால் கேட்கப்பட்டது.

அந்த தகவலை தற்போது வெளியிட முடியாது என கூறிய ஆளுநர், பெயர்ப்பட்டியலில் உள்ளவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. உங்களுக்காக நான்தான் செயற்பட்டு வருகின்றேன். பொறுமையாக இருங்கள் என தெரிவித்தார்.

இதையடுத்து, இராஜாங்க அமைச்சர் கூறியது போன்று நியமனம் வழங்கினால் வடக்கில் 200 பேருக்கு கூட நியமனம் வழங்க முடியாது என பட்டதாரிகளின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை நடைபெற்ற இந்த சந்திப்பை அடுத்து தொண்டராசிரியர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (செ-4)

தேவதாசனுக்கு...

தாசனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

2008ஆம் ஆண்டு பெப்ரவரி 3ஆம் நாள், கோட்டே தொடருந்து நிலையத்தில் பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டை வெடிக்கச் செய்ததில் 12 பேர் உயிரிழந்தனர். மேலும் 100 பேர் வரை காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட பெண் தற்கொலைக் குண்டுதாரிக்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தார் என்றும், சதித் திட்டம் தீட்டினார் என்றும் நாடன் எனப்படும் கனகசபை தேவதாசன் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று இந்த வழக்கில் குற்றவாளியாக காணப்பட்ட கனகசபை தேவதாசனுக்கு, 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த கனகசபை தேவதாசன் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் உறுப்பினராக இருந்த போது, கொழும்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில், 2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

படையினரில் ஒருவர்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குருநாகல் பாதுகாப்பு சேவை கல்லூரியின் புதிய கட்டிடத்தை மாணவர்களுக்கு உரித்தாக்குதல் மற்றும் விருசர சலுகை அட்டைகளை படை வீரர்களுக்கு வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாய்நாட்டுக்காக போராடிய வீரமிகு படையினரை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகுமென தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் வீரமிக்க படையினர் தொடர்பில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தான் பொறுப் புடன செயற்படுவதாக தெரிவித்தார்.

இதற்கு முன்னர் ஒருபோதும் இருந்திராத சர்வதேச நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு இந்த யுகத்தில் இலங்கைக்கு கிடைத்துள்ளது. அதன் பயன் என்னவென சிலர் கேள்வி எழுப்புவதாக தெரிவித்த ஜனாதிபதி, இந்த சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நட்புறவை நாட்டினதும் மக்களினதும் கௌரவத்தையும் வீரமிக்க படையினரையும் பாதுகாப்பதற்கு பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாப்பதுடன் படையினர் தொடர்பில் எழும் சிக்கலான நிலைமைகளின் போது நேரடியாக இலங்கையுடன் இருப்பதாக உலகின் பலமிக்க அரச தலைவர்கள் தன்னிடம் தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

போர் இடம்பெற்ற காலத்தில் புலிப் பயங்கரவாதிகளுக்கு எதிராக போராடிய படை அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் போர் வீரர்கள் தொடர்பில் ஏற்படும் எந்தவொரு பிரச்சினைக்காகவும் தான் பொறுப்புக் கூறுவதாக அனைவரிடமும் தெளிவாக தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அத்துடன் போர்க்குற்றம் மற்றும் தேசிய பாதுகாப்புடன் தொடர்பற்ற விடயங்களில் அதாவது ஊடகவியலாளர்கள், விளையாட்டு வீரர்களின் கொலை, தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் யாராவது ஒருவர் தவறிழைத்திருந்தால், அவர் எந்த தரத்திலிருந்தாலும் அவரை பாதுகாக்கும் இயலுமை தனக்கு இல்லையெனறும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முற்பகல் குருநாகல் பாதுகாப்பு சேவை கல்லூரிக்கு சென்ற ஜனாதிபதியை மாணவர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

நினைவு படிகத்தை திரைநீக்கம் செய்து புதிய கட்டிடத்தை மாணவர்களுக்கு உரித்தாக்கிய ஜனாதிபதி அங்கு கண்காணிப்பு விஜயத்திலும் ஈடுபட்டார்.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையை வெளிப்படுத்திய மற்றும் விளையாட்டில் ஆற்றலை வெளிப்படுத்திய கல்லூரி மாணவர்களுக்கு விருதுகளையும் பரிசில்களையும் வழங்கியதுடன், பல்கலைக்கழக தகைமை பெற்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில், ஆங்கிலக் கல்வி மற்றும் சுயதொழில் பாடநெறிக்கான புலமைப்பரிசில்கள் போன்றவற்றையும் ஜனாதிபதி வழங்கினார்.

அமைச்சர்களான அனுர பிரியதர்சன யாப்பா, எஸ்.பீ. நாவின்ன, தயாசிறி ஜயசேகர, அகில விராஜ் காரியவசம், வடமேல் மாகாண ஆளுநர் அமரா பியசீலி ரத்நாயக்க, முதலமைச்சர் தர்மசிறி தஸநாயக்க மற்றும் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள், குருநாகல் பாதுகாப்பு சேவை கல்லூரியின் அதிபர் டி.ஏ. ரத்நாயக்க மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-11)

உதாசீனம்...

தர முன்வரவேண்டும் என முல்லைத்தீவு மாவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்றுடன் இருபத்து மூன்றாவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்த தமது உறவுகள் தொடர்பில் அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடாரம் அமைத்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இத்தொடர் போராட்டத்தை இரவு பகலாக தளராது முன்னெடுத்து வருகின்றனர்.

பல்வேறு இன்னல்களுடன் தொடரும் தமது போராட்டம் தொடர்பில்அரசாங்கம் விரைந்து கவனம் செலுத்த வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-281)

அமெரிக்க தளபதி...

சிங்கவைச் கொழும்பில் சந்தித்து பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக்களில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல்கேசப்பும்பங்கேற்றார்.

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தின் நிலைமைகள் மற்றும் இலங்கையுடன் பசுபிக் கட்டளைப் பீடத்தின் ஒத்துழைப்புக்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேஜர் ஜெனரல் பிரயன் பென்டன் மேலும் பல பாதுகாப்பு உயர் மட்டப் பிரமுகர்களையும் சந்திக்க வுள்ளதாகவும் கூறப்படுகிறது. (செ-11)

ஐக்கிய இலங்கை...

ள்ளார்.

இனவாத, மதவாத சிந்தனை கொண்ட அரசியலை விட்டுவிட்டதாக தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்தவர்களே இன்று அதனை கையில் எடுத்து குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

கொழும்பு - மருதானை சுதுவெல்ல பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பாட்டுக் குழுவினால் சிறிய புத்தர் சிலை ஒன்றும் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதன் பின்னர் அங்கு உரையாற்றிய பிரதமர், "அரசியல் தீர்வொன்றை வழங்குவது குறித்து நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளிடையேயும், அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவில் உறுப்பினர்களிடையேயும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. எமக்கிடையே பாரிய இடைவெளி ஒன்று இல்லை. எமது புதிய பணயம் குறித்தும் பாரிய இடைவெளியும் இல்லை. நாம் அனைவரும் ஐக்கிய இலங்கைக்குள் பணிகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம் என்றார். (செ-11)

பருவகாலச் சஞ்சிகைப் பிரிவு
யாழ்ப்பாண பொதுநூலகம்

பின்னடைவில்...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கு தற்போது பொருளாதார சிக்கல் உள்ளது. இதிலிருந்து மீண்டு வருவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொருளாதார குழு நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்ய முயற்சித்து வருகின்றது.

பொருளாதாரத்தின் வீழ்ச்சியை ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியிலிருந்து சரியாக அறிந்துகொள்ள முடியும். அதே போல் புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கச் செயற்பாடுகளும் தடைப்பட்டுள்ளன. கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட துறைகளிலும் சலனங்கள் ஏற்பட்டுள்ளன.

அதனால் நாட்டில் உள்ள சிறு விவசாயி முதல் பங்குச்சந்தையில் முதலீடு செய்யும் வியாபாரிகள் என சகலரும் பொருளாதார பின்னடைவிற்கு முகம்கொடுத்துள்ளனர். தற்சமயம் பங்குச் சந்தை செயற்பாடுகள் தொடர்ந்தும் வீழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றன என்றார். (செ-11)

இராணுவ தலை...

சேனநாயக்க நேற்று அதிகாரபூர்வமாகப் பதவியேற்றார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்று காலை, பௌத்த மதகுருமாரின் ஆசி வழங்கும் நிகழ்வுடன் இந்தப் பதவியேற்பு இடம்பெற்றது.

இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ரேனக உடவத்த உள்ளிட்ட உயர்நிலை இராணுவ அதிகாரிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இராணுவத் தலைமை அதிகாரியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக கடந்த மாத இறுதியில் ஓய்வு பெற்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றியிருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

யாழ்.மாவட்ட...

செய்யப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படக் கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு தீர்மானித்துள்ள தேர்தல்கள் திணைக்களம்,

இதற்குப் பதிலாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படக் கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

அதன்படி பதுளை மாவட்டத்தில் இதுவரை இருந்த 09 உறுப்பினர்கள் என்பது 08 உறுப்பினர்களாக குறைக்கப்படும் அதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை இருந்த 06 உறுப்பினர்கள் என்ற நடைமுறை 07 உறுப்பினர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்குரிய தேர்தல் இடாப்பின் அடிப்படையில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (செ-11)

DCM
யாழ் நகர் | சுன்னாகம்
A/L 2019
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
(C - 7950)
புதிய பிரிவு ஆரம்பம்
01.04.2017 சனி
யாழ் நகர் 8.00 a.m | சுன்னாகம் 3.00 p.m

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்து பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(குறித்த நாடுகளுக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-7956)

"புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு"
ஞானோதய அக்கடமி
சங்கத்தானை, சாவகச்சேரி
(8452)
A/L 2019
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் (செய்முறைப் பயிற்சிகளுடன்)
ஆரம்பம் : 01.04.2019 (சனி) மு.ப 9.00 மணி
■ ஒவ்வொரு வருடமும் கூடுதலான மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பும் ஒரே நிறுவனம்
-நிர்வாகம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

C.C.A
சுன்னாகம்
(B449)
A/L - 2019
கலை, வர்த்தகம்
ஆரம்பம்
01.04.2017 8am

ACCOUNTING GROUP CLASS
A/L - 2019 கணக்கீடு
ஆரம்பம் : 01.04.2017
(சனி-9am)
திரு.வின்சன்
K.K.S வீதி, மல்லாகம்.
0776947162
(8446)

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
A/L தொழில் நுட்பப் பிரிவு
2017 விசேட வினாத்தாள் வகுப்புக்கள்
+ பொறியியல் தொழில் நுட்பம்
+ உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்
+ தொழில் நுட்பக்கிற்கான விஞ்ஞானம்
+ மேன்மாவது தெரிவுப் பாடங்கள் அனைத்தும்
ஆரம்பம்: 01ம் திகதி சனிக்கிழமை மாலை 3.00
2019 பிரிவு II
ஆரம்பம்
01ம் திகதி சனிக்கிழமை
காலை 8.30
தொடர்புக்கு: 077 248 7774
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
(C-7958)

A/L 2019
வர்த்தகப்பிரிவு
(கணக்கீடு)
R.சுகிர்தன்
(பொருளியல்)
K.பிரதீபன்
(வணிகக்கல்வி)
K.M.சண்
(C-7955)
BEACON
யாழ் நகர்

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2019
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
பிரிவு-11 ஆரம்பம்
01-04-2017
சனி
8.00 மணி

சுதாபொன்ஸ் கல்வி நிலையம் அல்வாய்
O/L - துரித மீட்டல் வகுப்புக்கள்
31.03.2017 வெள்ளி
காலை 7.30 மணிக்கு
ஆரம்பம் :
A/Lகலை, வர்த்தக பிரிவுகள் நடைபெறுகின்றன.
(A-7943)

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.
க.பொ.த(உ/த) 2018 உயிரியல்
மாதாந்தத் தொடர் பரீட்சை - பெப்ரவரி 2017
S.Ponthivakaran

Index No.	முழுப்பெயர்	School	Marks	Rank
J/2082/B	சிவகரன் பிரகாஸ்	J/K.H.C	90	1
J/2149/B	ஆதிரை மனிவண்ணன்	J/M.L.C	86	2
Mu/2737/B	திலக்சனா அமிர்தலிங்கம்	Mu/C.M.V	86	2
J/2057/B	கிறேசியன் ஜெனோசன்	J/S.H.C	85	4
J/2249/B	அபினயா சிறிதரன்	J/H.F.C	84	5
J/2081/B	நவராசா சங்கீர்த்தவன்	J/K.H.C	83	6
J/2298/B	கஜானா சிவயோகராசா	J/K.H.C	78	7
J/2235/B	கஜலஷ்மி புஷ்பாகரன்	J/V.G.H.S	77	8
J/2679/B	பிரணவி கியூ லோறன்ஸ் ரெனாறன்ஸ்	J/K.H.C	74	9
Mu/2389/B	சிவராஜா வினோதன்	Mu/M.C.C	74	9
J/2294/B	றிஸ்மி லெஸ்லி பாஸ்கரதேவன்	J/V.G.H.S	73	11
Bd/2644/B	பாலகப்பிரமணியம் யுகேந்திரன்	Bd/U.S.C	72	12
Mu/2694/B	அக்ஷயா ஸ்ரீகுமார்	Mu/C.M.V	71	13
J/2091/B	விஜித்திரா றெமீந்திரன்	J/I.C.M.V	70	14
J/2143/B	அனிஸ் புளொரிடா இருதயநாதன்	J/K.H.C	70	14
J/2153/B	ஆனி துரைசிங்கம்	J/K.H.C	69	16
J/2552/B	சிறியதாஸ் துவாரகன்	J/K.H.C	69	16
J/2396/B	யூடினி ரவிச்சந்திரன்	J/V.G.H.S	67	18
J/2053/B	ஜெயகுமார் தேனுஜன்	J/J.H.C	66	19
Mu/2290/B	கேதாரணி ஜெகராஜன்	Mu/P.M.V	66	19
J/5307/B	ஜானுகா ஸ்ரீதரன்	J/V.H.C	65	21
J/2660/B	கம்சிகா முத்துலிங்கம்	J/V.G.H.S	64	22
J/2579/B	சிஸ்மியா முருகவடிவேல்	J/C.G.C	62	23
J/2642/B	பவதர்சினி பழனிபபழம்	J/V.G.H.S	62	23
Kn/2391/B	விஷ்ணுசாந்தி வரதராஜன்	Kn/M.M.V	59	25
J/2110/B	டுஷாரா தருமரெத்தினம்	J/C.G.C	58	26
J/2181/B	தர்சிகா குணபாலன்	J/V.G.H.S	56	27
J/2667/B	கௌதமி பிரபாகரன்	J/R.C	54	28
Mu/2537/B	டயந்தா பங்கயச்செல்வன்	Mu/M.M.M.V	52	29
J/2264/B	சஸ்ரீபா சந்திரகுமார்	J/J.H.L.C	50	30
Mu/2292/B	கஜானா சந்திரராசா	Mu/Y.M.V	50	30
Mu/2170/B	காவிரி தர்மராசா	Mu/M.M.M.V	50	30

(C-7947)

பதவி வெற்றிடம்
● கணனி தமிழ் ரைப்பிங்
● பக்க வடிவமைப்பு
● விளம்பர வடிவமைப்பு
(ஆண்கள் இரவுக் கடமை)
அனுபவமுள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன்
இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரியில் உள்ள வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.
பொது முகாமையாளர்
வலம்புரி

NAC - மானிப்பாய்
A/L - 2019
பிரிவு - II
கலை, வர்த்தக வகுப்பு
ஆரம்பம் : 01.04.2017 (சனி - 3pm)
Contact : 077 694 7162
(8446)

BEACON
யாழ் நகர்
A/L 2019 புதிய பிரிவு
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம் :- 01.04.2017
காலை 9 மணி
BEACON - யாழ்நகர்
(C - 7955)

உயர் கணக்கியல் கல்லூரி
H.A.C சித்தன்கேணி
A/L - 2019 பிரிவு -02
வர்த்தகபிரிவு
பொருளியல் - M.C.சுதாகரன்
கணக்கீடு - M.R.ரோஜிந்தன்
வணிகக்கல்வி - S.பிரதீபன்
ICT - N.நஜன்
கலைப்பிரிவு
தமிழ் - T.S.குகன்
அரசியல் - அசோக்
வரலாறு - S.S.தாஸ்
நாடகமும் அரங்கியலும் - P.கணேஷ்
புவியியல் - S.P.கரன்
இந்துநாகரிகம் - S.சிவாஸ்கரன்
பொருளில் - M.C.சுதாகரன்
Media - V.நவநீதன்
இந்துசமயம் - S.சிவா
விவசாயம் - S.பிரசாந்தன்
அளவையியல் - வழமையான ஆசிரியர்
சங்கீதம் -திருமதி S.கலா
சித்திரம் - V.விக்கி
மனைப்பொருளியல் - திருமதி S.தபோ
ஆரம்பம் : 01.04.2017
பி.ப - 3மணி
(A-7951)

யாழ்.நகரின் "Super Grade" கல்வி நிறுவனம்!
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
O/L DAY CLASS
பகல் நேர வகுப்பு
ஆரம்பம் : 03.04.2017 திங்கள்
மு.ப 8.00 மணி
• எமது வழமையான "Super Grade" ஆசிரியர் குழு
• அலகுப் பரீட்சை, மாதாந்தப் பரீட்சை நடைபெறுதல்.
• உயர் கல்விக்கு வழிகாட்டும் ஒரே நிறுவனம்.
• அனுமதிகள் இன்று முதல் வழங்கப்படும்.
தொடர்பு : 0774598440
(A-7956)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.